27 ஆவது ஆண்டில்
கனடாவின் முதல் தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416.282.8059
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvlambaram.com







நதி 27 பாலம் 04 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் FEBRUARY 15, 2017

# கனேடிய பொருளாதாரம் வளர்ச்சியடைகிறது

வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் மாறி மாறி 2016இல் சந்தித்த கனேடியப் பொருளாதாரம் 2017 இல் வளர்ச்சியை நோக்கி முன்னேறுவதாக கனேடியப் புள்ளி விபரத்திணைக்களத்தின் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.



வேலை தேடுபவர்களது எண்ணிக்கை 6.8% இற்கு 2017 ஜனவரியில் குறைந்தும் அதேமாதத்தில் மட்டும் 48,000 புதிய வேலைகள் மேலதிகமாக உருவாக்கப்பட்டும் உள்ளன எனக் கனேடியப் புள்ளி விபரத்திணைக்களம் 2017 பெப்ரவரி 10இல் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த ஆறு மாத காலமாக வேலைவாய்ப்பில் ஏற்பட்ட வளர்ச்சியே கடந்த 15 வருட காலத்தில் மிகவும் நிரந்தரமான வளர்ச்சியாகக் கணிக்கப்படுகிறது. கடந்த 2017 ஜனவரியில் 48,000 மும் 2016 டிசம்பரில் 50,000 உம் ஆகக் கடந்த 2016 ஓகஸ்ட் இல் இருந்து 200,000 புதிய வேலை வாய்ப்புக்கள் மேலதிகமாக உருவாக்கப்பட்டுள்ளன.


இவ்வாறு கனேடிய வேலைவாய்ப்பு வசதிகள் கடந்த ஆறு மாத காலமாகத் தொடர்ந்து முன்னேறி வந்தாலும் சில பொருளாதார நிபுணர்களுக்கு இன்னமும் போதிய நம்பிக்கை வரவில்லை. ஸ்கோஷியா வங்கிப் பொருளாதார நிபுணர் Derek Holt, உருவாக்கப்படும் வேலைகளில் பெரும்பாலானவை பகுதி நேரவேலைகளே என்கிறார். 2017 ஜனவரியில் உருவாக்கப்பட்ட புதிய வேலைகளில் 32,000 இற்கும் மேலதிகமானவை பகுதி நேரவேலைகள் ஆகும்.

இதைவிட வேலை வாய்ப்பைப் பொறுத்தமட்டில் ஆண்கள் முன்னணி வகிக்கும் சுரங்கத்தொழில், மசகு எண்ணெய் உற்பத்தி, விவசாயம், இயந்திர உற்பத்தி போன்றவற்றில் வேலை இன்மையே ஏற்படுகிறது. கடந்த நான்கு வருடங்களில் இத்தகைய தொழிலில் இருந்து 70,000 இற்கு மேற்பட்ட வேலைகள் மறைந்து விட்டன. கடந்த மாதம் மட்டும் இயந்திர உற்பத்தியில் இருந்து 7,500 வேலைகளும் கணினி சம்பந்தபட்ட (IT) துறையில் இருந்து 12,500 வேலைகளும் இழக்கப்பட்டன.

இதேநேரம் பெண்கள் முன்னணி வகிக்கும் கல்வி, சுகாதாரம், முதியோர் பராமரிப்புத் தொழில்களிலேயே பாரிய வளர்ச்சி ஏற்பட்டு உள்ளன. கடந்த நான்கு வருடங்களில் சுகாதாரம் மற்றும் சமூகசேவையில் மட்டுமே 200,000 இற்கு மேற்பட்ட வேலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. 2016ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தாதிகளில் 10% ஆனவர்களும் சுகாதார உதவி சேவையாளர்களில் 12%

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)

IP GOLDHOUSE 905-554-5890




























CaraCo
TRIDEL
BUILT FOR LIFE
Via Bloor
1110 KING WEST
Woodhaven
Tridel Via Bloor Condos/37 Story Condo Development
Located between two subway stations
Close to shopping/restaurants/DVP
Brand New House
3 Bed +2 Wash Rooms
Starting
$289,900
புதிய வீடுகளின் விலைகள் $289,900 இலிருந்து ஆரம்பம். சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள். பதிவுகளுக்கு அழையுங்கள்
S.Kajaruban
Sales Representative
647-338-5252 (KAJA)
www.facebook.com/condohouse.ca
skajaruban@gmail.com
HomeLife/GTA Realty Inc.*
5215 Finch Ave East, #203 Toronto ON. M1S 0C2


Selling or Buying
26 Room Motel + 4 BR Apartment
MOTEL
Near Hwy 401, East of GTA, $1.3 M
Investment/ Development Opportunity
INVESTMENT
4.29 Acres, Rental Income $4200+/M
$550,000
Fully Rented
FULLY RENTED
4 Units Apt + Commercial
$329,000
All Brick 50' Lots
from $411,900. Only one hour from Ajax, Occupancy Nov 2017.
Thas ThiruNavukkarasu
Sales Representative Dip-in-Eng.(Hons)
416-388-4333
thasremax@gmail.com
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
www.remaxace.com
Not intended to solicit buyers/sellers under contract


Call Pat... for all your Real Estate needs...
Buy, Sell, Rental & Leasing
வீடு, வியாபார நிலையம் வாங்க விற்க...
Pat Murugesu
Sales Representative
Cell: 416-271-7452
pat.murugesu@gmail.com
www.hlgtarealty.com
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. East, #203 Toronto ON M1S 0C2
Independently owned operated

# கனேடிய...


01ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆனவர்களும் மட்டுமே ஆண்களாகும். இத்தொழில்கள் பெண் களுக்கு ஏற்றவை என ஆண்கள் இன்னமும் எண்ணும் சமூக கலாசார மனநிலையே இதற்கு காரணம் என Ryerson பல்கலைக்கழக தொழில்துறை பேராசிரியர் Gerald Swartz செய்தி நிறுவனங்களுக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டார்.

கனடாவின் வெளிநாடுகளுக்கான ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் கடந்த இரண்டு ஆண்டுகளில் முதல் தடவையாக 2016 நொவெம்பரில் $526 மில்லியன் மேலதிக பண வரவைக் காட்டியுள்ளது எனக் கனேடியப் புள்ளி விபரத்திணைக்களம் தெரிவித்துள்ளது. உலோக மற்றும் உலோகமற்ற கனிமப்பொருட்களின் ஏற்றுமதி 4.3%ஆல் அதிகரித்துள்ளது. அமெரிக்காவிற்கு மட்டுமல்லாமல் ஹொங்ஹொங் மற்றும் சுவிற்சலாந்து நாடுகளுக்குமான கனிம உற்பத்திப்பொருட்களின் ஏற்றுமதி அதிகரித்துள்ளது.

### கனேடியக் குடிசன மதிப்பீடு

2016 ஆம் ஆண்டு கனேடியக் குடிசன மதிப்பீட்டின்படி தற்போதைய கனேடிய மக்கள்தொகை 35,151,728 எனக் கனேடியக் குடிவரவுத்திணைக்களம் 2017 பெப்பரவரி 08 இல் அறிக்கைவிட்டுள்ளது. இது 2011 இல் எடுக்கப்பட்ட குடிசனத்தொகையை விட 5% அதிகரிப்பாகும். கனடாவின் குடிசன மதிப்பீட்டு வளர்ச்சி 2011 ஆம் ஆண்டில் 5.9% ஆக இருந்தது. இவ்வளர்ச்சி 2016 இல் 5% ஆகக் குறைத்துள்ளது. ஆனால் G7 நாடுகளுடன் ஒப்பிடுகையில் கனேடியக் குடிசன வளர்ச்சியான 5% தான் மிகவும் கூடியது ஆகும். ஆனால் G20 நாடுகளுடன்




ஒப்பிடுகையில் கனடா குடிசன வளர்ச்சியில் எட்டாவது இடத்தில் உள்ளது. இந்த 2016 இல் ஏற்பட்ட 5% வளர்ச்சியில் கிட்டத்தட்ட 67% வேறு நாடுகளில் இருந்து மக்கள் குடிவரவால் ஏற்பட்டது. 33% மட்டுமே கனடாவில் பிறந்த குழந்தைகளால் ஏற்பட்ட வளர்ச்சியாகும். கனடா உருவாகிய பின்னர் 1871 ஆம் ஆண்டில் தான் முதன் முறையாகக் குடிசன மதிப்பீடு நடத்தப்பட்டது. அப்போது கனடாவின் சனத்தொகை 3.5 மில்லியனாக இருந்தது. 2016 இல் கனடாவின் குடிசனத்தொகை 1871ஆம் ஆண்டில் இருந்த விடச் சரியாக 10 மடங்கால் அதிகரித்துள்ளது.

கனடாவின் சனத்தொகையில் நுணவிற் பிரதேசம் 12.7% வளர்ச்சியும் அல்பேட்டா மாகாணம் 11.6% வளர்ச்சியும் பெற்றுள்ளன. நியூபிரண்ஸ்விக் மாகாணம் மட்டுமே சனத்தொகையில் 2011இல் (751,000) இருந்ததைவிட 2016இல் (747,000) 0.5% குறைவாகக் கொண்டுள்ளது. ஒன்ராரியோ மகாணத்தின் சனத்தொகை வளர்ச்சி 4.6% ஆகும்.

கனேடியக் குடும்பங்களில் பிள்ளைகள் சராசரியாக 1.6 இருக்கின்றனர். ஆனால் நுணவிற் பிரதேசத்தில் குடும்பங்களில் பிள்ளைகள் சராசரியாக 2.9 இருக்கின்றனர். இதுவும் அப்பிரதேசத்தின் சனத்தொகை வளர்ச்சி வீதத்திற்கு ஒரு காரணமாகக் கூறப்படுகிறது.

கனேடிய சனத்தொகையில் அதிகூடியவர்களைக் கொண்ட மாகாணமாக ஒன்ராரியோ திகழ்கிறது. இங்கு மட்டும் 13.4 மில்லியன் மக்கள் (38.3%) வாழ்கிறார்கள். கனேடியர்கள் பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டு செல்வதனால் கனேடிய சனத்தொகை அதிகரிப்பு 2046 இல் குடிவரவால் மட்டுமே ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கனடாவின் மூன்று நகரங்களான ரொறொன்ரோ, மொன்றியல் மற்றும் வன்கூவர் அதிகூடிய சனத்தொகையைக் கொண்டுள்ளன. இம்மூன்று நகரத்திலும் சேர்ந்து கனேடிய சனத்தொகையில் 34%ஆன மக்கள் வாழ்கின்றனர். கனடாவின் வடக்கில் உள்ள மூன்று பிரதேசங்களிலும் சேர்ந்து கனேடிய சனத்தொகையில் 0.3% ஆன மக்கள் வாழ்கின்றனர். கனேடிய சனத்தொகையில் 66% ஆன மக்கள் கனேடிய அமெரிக்க எல்லையில் இருந்து 100கி.மீ தூரத்திற்குள் இருக்கிறார்கள்.

கனடாவில் குடிசன அடர்த்தி அதிகூடிய நகரமாக வன்கூவர் நகரம் இருக்கிறது. இங்கு ஒரு சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் 5,400 பேர் இருக்கின்றனர். கனடாவின் குடிசன அடர்த்தி மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவானது ஆகும். கனடாவில் ஒரு சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் 4 பேர் இருக்கிறார்கள். ஆனால் றஸ்சியாவில் 9 பேரும், அமெரிக் காவில் 35 பேரும், ஜப்பானில் 348 பேரும் ஒரு சதுரகிலோமீற்றரில் நிலப்பரப்பில் இருக்கிறார்கள்.

கனேடியப் புள்ளி விபரத்திணைக்களத்தின் அறிக்கை 2016 இல் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீடே மிகவும் சிறந்த தரவுகளை உடையதும் அதிகமானோர் நிரப்பி அனுப்பியதுமாகும் என்கிறது. அதாவது 1666 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசனமதிப்பீட்டிற்குப் பிறகு மிகவும் நேர்த்தியாகவும் திறமையாகவும் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீடு 2016 ஆம் ஆண்டில் எடுத்தது எனக் கனேடியப் புள்ளி விபரத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)



# ரொறொன்ரோ மாநகர சபையின் முதலாவது தமிழ் பிரதிநிதியாக நீதன் சான் தெரிவு

ரொறொன்ரோ மாநகர சபையின் 42 ஆம் வட்டாரமான றூஜ் றிவர் தொகுதிக்கான இடைத் தேர்தலில் அமோக வெற்றி ஈட்டி நீதன் சான் ரொறொன்ரோ மாநகர சபையின் முதலாவது தமிழ் அங்கத்தவர் என்ற பெருமையை நிலைநாட்டியுள்ளார். இத்தொகுதிக்கான இடைத் தேர்தலில் பல் வேறு இனங்களைச் சேர்ந்த மொத்தம் 29 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். பெப்பிரவரி 13, 2017 திங்கட்கிழமை நடை-பெற்ற தேர்த லில் மொத்தமாக 10,418 பேர் வாக்களித் தனர். நீதன் சான் மொத்தம் 4,765 (45.7%) வாக்குகளைப் பெற்றுத் தனது வெற்றியை நிலைநாட்டியுள்ளார். நீதன் சான் 3,313 அதிகப்படியான (31.8%) வாக்குகளால் வென்று ரொறொன்ரோ மாந-கரசபையின் 42 ஆவது வட்டாரத்தின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். தேர்தல் முடிவு அறிவிக்க ப்பட்ட உடனே இடம்பெற்ற வெற்றி விழா வில் நீதன் சான் உரையாற்றியபோது தான் உடனடியாகவே தனது புதிய பதவியை பொறுப்பேற்கத் தயாராக இருப்பதாக அறி வித்தார்.



நீதன், “ரொறொன்ரோ மாநகரில் பல்வேறு மொழிகளைப் பேசும் தென் ஆசிய மக்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் அவர்களுக்கான பொதுச் சேவைகளை வழங்குவதற்கு இதுவரை காலமாக ரொறன்ரோ மாநகர சபையில் தென் ஆசியாவைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒருவருமே இல்லை. அந்தக் குறைபாட்டினை நிவர்த்தி செய்து தங்களுக்காக சேவை செய்வதற்காக அதிகப்படியான வாக்குகளால் தமது முதலாவது பிரதிநிதியாக என்னைத் தெரிவு செய்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் முதற் கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களது பொதுத் தேவைகளை பூர்த்தி செய்வது எனது பணி என்பத னையும் உறுதிப்படுத்த விரும்புகின்றேன்.” என்றார்.

சுஹையர் சையட் என்ற வேட்பாளர் மொத்தம் 1,452 (13.9%)வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தினைப் பெற்றார். மூன்றாவது இடத்தினைப் பெற்ற ஹிராஜ் அயினெட்சியானுக்கு கிடைத்த வாக்குகள் 1,058 ஆகும். தீபிகா பட்டேல் என்பவர் மொத்தம் 474 வாக்குகளைப் பெற்று நான்காம் இடத்தைப் பெற்றுள்ளார். மற்றைய தமிழ் வேட்பாளரான திரு. பஞ். சொக்கலிங்கத்துக்கு கிடைத்த வாக்குகள் 416 ஆகும்.

ஸ்காபரோவிற்கு நிலக்கீழ் தொடருந்து பாதையை நீட்ட வேண்டும் என்பதற்குத் தீவிர ஆதரவு அளிக்கும் நீதன் ரொறொன்ரோ மாநகரசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதற்குத் தனது பாராட்டை ரொ-றொன்ரோ மாநகரசபை நகர முதல்வர் John Tory தெரிவித்தார். 42 ஆம் வட்டார மக்கள் ஸ்காபரோவிற்கு நிலக்கீழ் தொடருந்து பாதையை நீட்ட ஆதரவளித்துள்ளார்கள் என்று நகர முதல்வர் John Tory கூறியுள்ளார்.

இளம் வயதிலேயே இலங்கையிலிருந்து கனடாவுக்கு அகதியாக வந்து கல்வி கற்ற துடிப்புள்ள இளைஞரான நீதன் சான் பொதுச் சேவைகளில் அதிகம் ஈடுபாடு கொண்டவர். ஆர்வமும், துடிப்பும் மிக்க இளைஞரான இவர் ஆரம்ப காலங்களில் கல்விச் சபை உறுப்பினராகப் பணியாற்றிய போது கல்வித் துறையில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தியவர். அத்துடன் தை மாதத்தினை தமிழ் மரபுத் திங்களாகப் பிர-கடனப் படுத்துவதிலும் மும்முரமாக ஈடுபட்டு சாதனை நிலை நாட்டியவர். நீதன் வகித்துவந்த (TDSB) பாடசாலை சபை Trustee பதவி தற்போது வெற்றிடமாகியுள்ளது.






உங்கள் வருமானத்திற்கேற்ப

QUICK APPROVAL

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் நிலைமையை தவிர்க்க
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வதுமோட்கேஜ் எடுக்க
- கொன்சுமர் ப்ரொப்போசல், பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ் எடுக்க
- எல்லா கடனையும் ஒரே பேமெண்டாக்க



## மற்றும் உங்கள் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்



## மோட்கேஜ் கிளினிக்

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.




## ஜெ (Jey) இராசதுரை

MBA. BBA (Hon). AMP

Team Leader/Mortgage Agent/Real Estate Broker

FSCO Lic # M09001428

வோக் இன்

சனி 9-5 மணிவரை

திங்கள் - வெள்ளி Call for an appointment

**416-613-2788 / 416-816-9011**

**Cell : 416-624-4843**

1504 Markham Road, Toronto ON M1B 2V9
(Markham & HWY 401)

WIN UP TO
$100,000
Everyone Who Funds A Mortgage With US Ask How !
*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

MORTGAGE ALLIANCE Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

RIGHT AT HOME

#1 Brokerage in Toronto

Brokerage office : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

# தமிழ் மக்களது போராட்டங்களின் நியாயத்தை புரிந்துகொள்ள வேண்டும்!

- விகிர்தன் -

இன்று, நாடு முழுவதும் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்று வருகின்ற நிலையில் அவற்றிற்கு தீர்வினைக் காண்ப தற்கு இயலாத நிலையில் அரசாங்கம் இருக்கின்றது. தென்னிலங்கையில் தனி யார் மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு எதிரான போராட்டம் தொடர்ந்து நடை-பெற்று வருகின்றது. அதேபோன்று வேறு பல போராட்டங்களும் நடைபெற்று வரு கின்றன. ஒரு வகையில், இப்போராட் டங்கள் நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள ஜனநாயகத் தன்மையை வெளிப்படுத்தினா லும் கூட, இப்போராட்டங்களை மஹிந்த ராஜபக்ஸ தலைமையிலான தரப்பினர் தங்களுக்கு சார்பாக பயன்படுத்தி அரசாங் கத்தை கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதையும் அவதானிக்க முடிகின்றது.

தமிழர் பிரதேசங்களில் இன்று நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் என்பன அடிப்படை மனித உரிமைகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின் றன. இதற்கு அரசியல் பின்னணி இருப்ப தாக தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிலர் கூறினாலும், பொதுவான கண்ணோட் டத்தில் தமிழர் பிரதேசங்களில் நடை-பெறும் போராட்டங்கள் நியாயமானது என்பதை சிங்களவர்கள் மத்தியில் சிலர் ஏற்றுக் கொள்கின்றனர்.

படையினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் முல்லைத் தீவு - கேப்பாப்பிலவு- பிலாக்குடியிருப்பு மக்களின் போராட்டம் தெற்கில் தவறாக பிரசாரம் செய்யப்படுவதாக தென்னிலங்கை சிவில் சமூக பிரதிநிதிகள் குறிப்பிடுகின்ற னர். கேப்பாப்பிலவில் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை தென்னிலங்கை சிவில் அமைப்புகளான தேசிய மீனவ இயக்கம் மற்றும் பங்குத் தந்தைமார், அருட்சகோதரிகள் உட்பட சிங்கள மொழி பேசும் மக்கள் அடங்கிய குழுவினர் சந்தித்திருந்தனர். இதன்போது, நேரில் வந்து பார்க்கும்போதே கேப்பாப் பிலவு மக்களின் நிலை புரிகின்றது. ஆனால், தெற்கில் இப்போராட்டம் குறித்து தவறான பிரசாரம் செய்யப்பட்டு வருகின் றது என்று அவர்கள் கூறினர். கேப்பாப் பிலவு மக்களின் நியாயமான போராட்டத் திற்கு தாம் உறுதுணையாக இருப்பதாக வும் அவர்கள் உறுதியளித்தனர்.

காணி விடுவிப்பு தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரசிங்கவுடனான பேச்சுவார்த் தைக்கு கேப்பாப்பிலவு மக்கள் அழைக்கப் பட்டிருந்த போதிலும், அதனை அம்மக்கள் நிராகரித்தனர். எனினும், புதுக்குடியிருப்பு கிராம மக்களின் பிரதிநிதிகளுக்கும், பிர-தமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடை யில் கடந்த 9ம் திகதி பிரதமர் அலுவலகத் தில் சந்திப்பு இடம் பெற்றுள்ளது. தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதனின் ஏற்பாட்டில் குறித்த சந்திப்பு இடம்பெற்றது. இதன் போது செல்வம் அடைக்கலநாதன், எம். ஏ. சுமந்திரன், சாள்ஸ் நிமலநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள காணியில் புதுக்கு டியிருப்பு மக்களின் 49 சொந்த வீடுகள் உள்ளடங்கியிருப்பது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. மேலும், தனியாருடைய காணி களில் இராணுவம் இருப்பது தொடர்பில் அதற்கான சான்றுகள் பிரதமரிடம் கைய ளிக்கப்பட்டன. அருகில் உள்ள அரச காணிகளுக்கு இராணுவத்தை நகர்த்தி அம்மக்களின் காணிகளை விடு விக்கும்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தனர். இதன் அடிப்படை யில் இராணுவ வசமுள்ள குறித்த 49 வீடுகளையும், காணிகளையும் உரிமையா ளர்களிடம் உடன் கையளிப்பதற்கு நடவ டிக்கை எடுப்பதாக பிரதமர் உறுதியளித்தார் எனத் தெரிவிக்கப்படு கின்றது. ஆனால், இந்த உறுதிப்பாட்டிற்கு பின்னரும் புதுக் குடியிருப்பில் போராட்டம் தொடர்ந்த வண்ணமே இருந்ததை காணமுடிந்தது.

காணாமல் போனோருக்கு தீர்வு ஒன்றை தெரிவிக்க வேண்டும் என காணாமல் போனவர்களின் உறவினர் போராட்டம் நடத்துவதை தவறு என்றோ, அரசியல் பின்னிணியுடன் இது நடைபெறுகின்றது என்றோ யாரும் கூற முடியாது. அதே போன்று பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைகளில் பல வருடங்களாக வழக்குகளோ விசாரணை களோ இன்றி வாடும் தமிழ் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி போராட்டம் நடத்துவதையும் தவறென்று யாரும் கூற முடியுமா? தற்போது தங்களுக்கு சொந்த மான காணிகளில் முகாம்களை அமைத் துள்ள படையினர் அதிலிருந்து வெளியேறி தங்கள் காணிகளை விடுவிக்கப்பட வேண் டும் என்ற கோரிக்கையுடன் வடக்கில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகி ன்றன.

குறிப்பாக முல்லை மாவட்டத்தின் கேப்பாப் பிலவு - பிலாக்குடியிருப்பு மக்களது போரா ட்டமும், புதுக்குடியிருப்பில் நடைபெற்று வரும் போராட்டமும் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது. தொடர்ச்சியாக அந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின் றனர். அவர்களுக்கு ஆதரவாக வடக்கின் பல பிரதேசங்களிலும் கவனயீர்ப்பு போரா ட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தப் போராட்டங்களுக்கும் தெற்கின் கடுபோக் காளர்களாலும், படைத் தரப்பினராலும் வேறு கதைகள் கூறப்படுகின்றன.




புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்களாகின்ற நிலையில் வடக்கில் படையினரிடன் வசமிருந்த காணி கள் பல கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆனால், அதன் வேகம் போதாது என்பதையும் குறிப்பிட வேண்டும். முல்லைத்தீவு மாவட் டத்திலுள்ள கேப்பாப்பிலவு காணிகள் சிலவும் அண்மையில் விடுவிக்கப்பட்டன. ஆனால், குறித்த பகுதியில் மேலும் பல காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளது. தற்போது போராட்டம் நடத்துகின்ற மக்க ளின் காணிகளும் விடுவிக்கப்பட வேண் டும். ஜனாதிபதி இக்காணிகளை விடுவிக் கும்படி உத்தரவிட்டுள்ளதாகவும், ஆனால், படையினர் ஜனாதிபதியின் உத்தரவை நடைமுறைப்படுத்தவில்லை என்றும் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித் துள்ளார். இதுவே இன்றுள்ள நடைமுறைப் பிரச்சினை.

நாட்டின் ஜனாதிபதியின் பணிப்பை படைத் தரப்பினர் நடைமுறைப்படுத்த பின்னடிக் கின்றனர் என்றால் அதன் அர்த்தம் என்ன? இதற்கு படைத்தரப்பினர் தெரிவித் துள்ள கருத்துக்களையும் இங்கு குறிப்பிடு வது பொருத்தமானது. கேப்பாப்பிலவு மக்கள் கோரிவரும் காணிகள் அரசுக்கு சொந்தமானதென்றும் யுத்தம் நிறைவடை ந்து 7 வருடங்களின் பின்னர் இக்காணிக-ளைக் கோரிப் போராடுவதைப் பார்த்தால் பின்னணியில் ஏதோ ஒன்று செயற்படுகின்ற தெனவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவ-ிரத்ன தெரிவித்து உள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் அங்குள்ள 243 ஏக்கர் நிலப்பரப்பை மக்களிடம் ஒப்படைத்தோம். வவுனியாவி லும் 16 ஏக்கர் காணிகளை விடுவித்தோம். இவ்வாறு குறித்த காணிகளின் தனித்து வத்தை ஆராய்ந்து நாம் விடுவித்து வருகின்றோம். எனவே, மக்கள் குறித்த காணிகளின் தனித்துவத்தை நிரூபித்தால் எம்மால் அதனை பரிசீலிக்க முடியும். ஆனால், படையினரின் முகாம் அமைந் துள்ள காணியானது அரசுக்கு சொந்தமா னது. வனப் பாதுகாப்பு அமைச்சு இதனை உறுதிப்படுத்தியுள்ளது. மக்களிடம் இதனை தெளிவுபடுத்திய பின்னரும் இவ்வாறு போராடுவதானது ஒருவேளை இதன் பின் புலத்தில் அரசியல் இருக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பாதுகாப்புச் செயலாளரும் குறித்த காணிகளிலிருந்து படையினர் வெளிறேமாட்டார்கள் என்று தெரிவித்திருந்தார்.

போரின் போது படைத்தரப்பினரால் ஆக்கி ரமிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளை யும் அவர்களின் உடைமைகளையும் திரு-ம்ப அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். இதில் அரசாங்கத்தின் நிலைப்பாடும் படைத்தரப்பின் நிலைப்பாடும் முரண்படு மானால் அதற்கு தீவிரமான வேறு காரண ங்கள் இருப்பதாகவே கருதப்படும். இந்த நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகளுக்கு உடனடி யாகத் தீர்வினை நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால்தான் நிரந் தர தீர்விற்கு சிறிது காலமெடுத்தாலும் அது தொடர்பான நம்பிக்கை தமிழ் மக்க ளுக்கு ஏற்படும்.

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# முதலமைச்சர் உரை

ஜனவரி 15-01-2017 அன்று மாலை 6 மணிக்கு பொதுக்கூட்டம் பெருந்திரளாக இங்கு கூடியிருக்கும் எனதினிய கனடா வாழ் தமிழ் உறவுகளே! உங்கள் எல்லோருக்கும் முதற்கண் வட மாகாணசபை மற்றும் தாயக மக்களினதும் என்னுடையதுமான பொங்கல் வாழ்த்துக் களையும் புதுவருட வாழ்த்துக்களையும் மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது கனேடியப் பிரயாணம் அதன் நிறைவுக் கட்டத்தை அடைந்துள்ளது. எனது கடமைகள் என்னை மீண்டும் தாயகம் திரும்ப அழைக்கின்றன. இந்நிலையில் நாங்கள் இப்பயணத்தின்போது தொடக்கத்தில் எதிர்பார்த்தவற்றையும் திரும்பும்போது எவ்வெவற்றை நாம் சாதித்துள்ளோம் எவற்றில் வெற்றி காணவில்லை என்பது பற்றியும் ஆராய்வது பொருத்தம் என நம்புகின்றேன்.

நாங்கள் முக்கியமாக இரட்டை நகர உடன்படிக்கைகளை உருவாக்கவே இங்கு வந்தோம். உடன்படிக்கைகள் ஆரம்பக் கட்டத்திலேயே உளதாயினும் இரு தரப்பு மக்களின் உற்சாகமும் உச்ச நிலையை அடைந்துள்ளது. உதவி புரிய வேண்டும் என்பதில் உங்கள் மத்திய அரசும் மாகாண அரசும் மாநகர சபைகளும் மிக்க ஆர்வத்துடனும் செயலுறுதியுடன் இருப்பது எமக்கு நம்பிக்கையை ஊட்டுகின்றது. அரசியல் சமூக பிரமுகர்களுடனான சந்திப்புக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனான சந்திப் புக்களும், ஊர்ச் சங்கங்கள், பெண்கள் அமைப்புக்கள், மாணவர் அமைப்புக்கள், இளையோருடனான மற்றும் முதியோருடனான சந்திப்புக்கள் மற்றும் முஸ்லீம் சகோதரர்களுடனான சந்திப்புக்கள் யாவையும் மனத் திருப்தியோடு பயன் விளைவிப் பனவாகவும் அமைந்தன. முதலீட்டாளர்கள், வர்த்தகர்களுடனான சந்திப்புக்களும் நடைபெற்றன. எமது கனேடிய உறவுகள் தாயகத்தை மீளக் கட்டியெழுப்பவும் தாயகத்தில் முதலீடு செய்யவும் முன்வந்துள்ளார்கள். பொது மக்களாகிய உங்களுடனான ஒவ்வொரு சந்திப்பும் முன்னையவை தவிடக் கூடிய வலுநிறைந்ததாகத் திறன் மிக்கதாக அமைந்திருப்பதையும் அவதானித்துள்ளேன். அரச சார்பற்ற நிறுவனங்களுடன் பொருளாதார மேம்பாடு, சமூகவியல் பிரச்சினைகள், தொழில் திறனேற்படு



த்தல் போன்ற இன்னோரன்ன விடயங்கள் பற்றியும் பேசினாலும் உங்கள் அனைவருடனும் அரசியல் பற்றியே அதிகம் பேசியுள்ளேன். வானொலி, தொலைக்காட்சி செவ்விகளிலும் அதனையே மையமாக வைத்துப் பேசியுள்ளேன். உங்கள் அரசியல், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் அரசியல் பற்றிய தெளிவுரைகளை ஆற்றவேண்டிய சந்தர்ப் பங்களும் எழுந்தன. அவற்றை நாம் செவ்வனே செய்து முடித்துள்ளோம் என்றே நம்புகின்றேன். தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் எதிர்பார்ப்புக்களை வலியுறுத்திப் புலம்பெயர் சமூகத்தில் குறிப்பாகக் கனடாவில் அரசியல் சமூக அமைப்புக்களை எவ்வாறு ஒரு பொதுவேலைத் திட்டத்தில் இணைத்துச் செயலாற்றலாம் என்று ஆராயும்போது, எமது அரசியல் சம்பந்தமான விடயங்களையும் பேச வேண்டியிருந்தது. அவற்றை செவிமடுத்த கனேடிய நாட்டுத் தமிழரல்லாத மக்கள் பிரதிநிதிகள் மிகவும் திடமாக, ஐயத்திற்கு இடமின்றி எமது அரசியல் அபிலாசைகளை ஏற்றுக்கொள்வதான மனோநிலையைக் கொண்டிருந்தமை எமக்கு மன உவகையை உருவாக்கியது. அவர்கள் உண்மை நிலையை அறிந்திருக்கும் வேளையில் எம் சார்பில், எமது உரிமைகளை உங்கள் கனேடியப் பிரதிநிதிகள் வலியுறுத்த ஆயத்தமாக இருக்கும் வேளையில் எம்முள் சிலர் "தருவதை வாங்குவோம் பின்னர் பார்ப்போம்" என்ற அடிப்படையில் நடந்து கொள்வது மனவருத்தத்தைத் தருகிறது.

உதாரணத்திற்கு வடக்கும் கிழக்கும் இணைய வேண்டுமா? சிங்களவர்களும் முஸ்லீம்களும் அதனை எதிர்ப்பார்கள் அல்லவா என்கின்றார்கள். இதனைப் பற்றிச் சற்று ஆராய்ந்து பார்ப்போம். வட கிழக்கை இணைப்பது என்பது எம்மால் தான்தோன்றித்தனமாக எடுக்கப்பட்ட முடிவல்ல. போதுமான காரணங்கள் இருந்ததாலேயே இந்தியாவின் முன்னிலையில் 1987ஆம் ஆண்டின் இந்திய - இலங்கை உடன்பாட்டின் போது வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப் பட்டன. சுமார் 18 வருடங்கள் அந்த இணைப்பு நடைமுறையில் இருந்தது. வடக்கு கிழக்கு இணைய வேண்டிய அவசியம் என்ன? அதனை ஏன் மத்திய அரசாங்கம் எதிர்க்கின்றது? ஏன் சில முஸ்லீம் தலைவர்கள் எதிர்க்கின்றார்கள்? என்ற விடயங்களை சுருக்கமாக இங்கு ஆராய்வோம். வடக்கு, கிழக்கு பாரம்பரியமாகத் தமிழ்ப் பேசும் மாநிலங்கள். கிழக்கு மாகாணம் கண்டிய அரசனின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தல்லவா என்று சிலர் கேட்கின்றார்கள். அதனால் என்ன? கண்டி அரசனாக இருந்தவர் கூட ஒரு தமிழரே. கண்டியின் கடைசி அரசன் சிறீ விக்கிரம ராஜசிங்கவின் இயற்பெயர் கண்ணு சாமி என்பது எம்மில் பலருக்குத் தெரியாது. ஆனால் கண்டிய இராச்சியம் ஒரு சிங்கள மன்னரின் ஆட்சியின் கீழ் இருந்திருந்தால்

கூட அவரின் மேலாதிக்கத்தின் கீழ் இருந்த கிழக்கு மாகாணம் சிங்கள மக்களைக் கொண்டிருந்தது என்று அர்த்தம் கொள்ள முடியாது. தமிழ் மொழியே கிழக்கில் பேசப்பட்டு வந்தது. தமிழ் பேசும் மக்களே அங்கு மிகப் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்தார்கள். என்னுடைய வாழ்க்கைக் காலத்திலேயே சனப்பரம்பல் கிழக்கு மாகாணத்தில் வெகுவாக மாற்றமடைந்து தற்போது சுமார் மூன்றில் ஒரு பங்கு மக்கள் சிங்களம் பேசுவோராக உள்ளார்கள்.

1970களில் திருகோணமலையில் வாழ்ந்த கத்தோலிக்க மதத் தலைவரான, இத்தாலியைச் சேர்ந்த பங்குத் தந்தையான Fr. Ciampa அவர்களைக் காணச் சென்றிருந்தேன். திருகோணமலை நகருக்கு வெளியில் புதிய கிராமங்கள் அப்போது வரத் தொடங்கியிருந்தன. அங்கு வாழ்ந்த கத்தோலிக்க சிங்கள மக்களின் துயர்களைக் கேட்டறியவே Fr. Ciampa அங்கு சென்றார். போகும்போது என்னையும் அழைத்தார். நானும் சென்றேன். அப்போது நான் ஒரு சட்டத்தரணி. அங்கு காட்டுப் பாங்கான இடங்களில் எல்லாம் குடிசைகளை அமைத்திருந்தார்கள் சிங்கள மக்கள். அவர்களுடன் நாங்கள் உரையாடினோம். நான் சிங்களத்தில்தான் அங்குள்ள தபால் அதிபருடன் பேசினேன். அப்போது அவர் என்னுடன் குறைபட்டுக் கொண்டனர். "சேர்! எங்களை இங்கு வந்து குடியேறுமாறு அரசாங்கம் கட்டாயப் படுத்துகின்றது. எப்படியாவது தமிழர்கள் வாழ்ந்த இடங்களை நீங்கள் உங்களுடையதாக்கிக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார்கள்.

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...)

# கனேடிய...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

கனேடியப் புள்ளி விபரத்திணைகளத்தைச் சேர்ந்த பிரதம புள்ளி விபரவியலாளரான Wayne Smith ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கையில் கனடாவின் முதலாவது குடிசன மதிப்பீடு 1666ஆல் Jean Talon ஆல் New France இற்காகக் கணக்கெடுக்கப்பட்டது. அப்போது இருந்த 3,215 பேரினதும் வயது, பால், தொழில் மற்றும் திருமணம் செய்தது போன்ற தரவுகள் மிகவும் விபரமாக எடுக்கப்பட்டன.

2016 இல் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின் போது 98.4% ஆன மக்கள் போதிய தரவுகளை வழங்கியுள்ளார்கள். 75% ஆன



மக்களுக்கு 10 கேள்விகளை உடைய குறுகிய வினாத்தாளும் 25% ஆன மக்களுக்கு 36 பக்கங்களை உடைய நீண்ட வினாத்தாளும் வழங்கப்பட்டன என்றார். நீண்ட வினாத்தாள்களைப் பெற்றவர்களில் 97.8% ஆனவர்கள் திருப்திகரமாக நிரப்பி அனுப்பியிருந்தார்கள். இது குடிசன மதிப்பீட்டில் அதிகூடிய மக்கள் பங்கு பற்றியது ஆகும். 68% மக்கள் இணையத் தளமூலமாகவே இந்த வினாத்தாள்களை நிரப்பி அனுப்பியிருந்தார்கள். இது ஒரு உலக சாதனையாகப் பார்க்கப்படுகிறது. இவ்வாறு குடிசன மதிப்பீட்டில் பங்குபற்றியதற்காக கனேடிய மக்கள் பெருமைப்பட வேண்டும் எனக் கனேடியப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் Navdeep Bains தெரிவித்தார். கனடாவில் குடிசனமதிப்பீட்டு வினாத்தாள்களை ஒருவர் நிரப்பி அனுப்பா விட்டால் அவருக்கு $500 பணத்தண்டனையையும் மூன்று மாத கால சிறைத்தண்டனையையும் நீதிமன்றம் தண்டனையாக விதிக்கலாம்.

குடிசனமதிப்பீட்டில் எடுக்கப்படும் தரவுகள் மூலமே வருடம்தோறும் மத்திய மாகாண அரசுகள் $400 மில்லியனை எவ்வாறு செலவு செய்வதெனத் தீர்மானிக்கின்றன. இத்தரவுகளே நகரங்களுக்குத் தெருக்களை அமைத்தல், பாடசாலை அமைத்தல், வயது முதிர்ந்தோர் பராமரிப்பு நிலையங்கள் அமைத்தல் என்பன பற்றித் திட்டமிட உதவுகின்றன.

MORTGAGE PROBLEM?... Too Much Debt?... privacy guaranteed...
$50,000...$100,000...$500,000...$750,000... $1.75 Million... funds for
- Refinance & pay off loans, credit cards, 2nd mortgage...
- Consolidate 1st and 2nd mortgages...
- Purchase properties - Residential & Commercial...
- Construction Financing...
MORTGAGE ALLIANCE
Corporate Office: 2005 Sheppard Ave E. Suite 200, Toronto ON M2J 5B4 Toll Free: 1-877-366-3487
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
647-922-5704
Twitter @OK_Mortgages






- ஆதித்தன் -

# மீண்டும் உருவாகும் பதற்ற நிலை!

வடக்கில் மீண்டும் ஒரு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, முன்னாள் போராளிகள் அச்சத்துடன் நடமாடும் நிலைமை உருவாக்கப்பட்டுள் ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனை கொலை செய்வதற்கு முயன்றதாக நான்கு முன்னாள் போராளிகள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், முன்னாள் போராளிகள் குறித்த கண்காணிப்பு நடவடிக்கைகள் புலனாய்வுப் பிரிவினரால் அதிகளவில் முடுக்கி விடப்பட்டுள்ளது.

அத்துடன், தென்னிலங்கை கடும்போக்குவாதிகள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மோசமான கருத்துக்களை பரப்பி வருகின்றனர். தென்னிலங்கை ஊடகங்களிலும் குழப்பத்தை ஏற்படுத்தும் விதமான செய்திகள் வருகின்றன. முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை விடுதலை செய்திருக்கக் கூடாது எனவும், அவர்கள் அனைவரையும் மீண்டும் கைதுசெய்ய வேண்டும் எனவும், மீண்டும் ஒரு யுத்தத்திற்கு முன்னாள் விடுதலைப்புலிகள் தயாராகின்றார்கள் எனவும் பல்வேறுவிதமான கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

இது முன்னாள் போராளிகள், அவர்களது குடும்பத்தினர், உறவினர்களுக்கு மட்டுமல்லாமல் முழுத் தமிழ் மக்களுக்கும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. மீண்டும் ஒரு நெருக்கடியான - அழுத்தமான சூழ்நிலைக்குள் தமிழ் மக்கள் வாழ வேண்டி வருமோ என்கின்ற சந்தேகங்கள் தோன்றியுள்ளன.

யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்களாகின்றன. படையினரிடம் சரணடைந்து உயிர்தப்பிய முன்னாள் போராளிகள் வருடக் கணக்கில் புனர்வாழ்வு தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டனர். சுமார் 12 ஆயிரம் பேர்வரை இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இன்னமும் சிலர் விடுவிக்கப்பட வேண்டியுள்ளனர்.

இவ்வாறு விடுதலையானவர்கள் தங்களை சமூகத்துடன் இணைத்துக் கொண்டு, சாதாரண வாழ்க்கையை தொடங்குவதவற்கே ஆரம்பத்தில் சிரமப்பட்டனர். அவர்களின் வாழ்வாதாரத்திற்கான தொழில் ஒன்றை



ஆரம்பிப்பதற்கும் கடும் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் முன்னாள் போராளிகளுக்குப் பல நெருக்கடிகள் இருந்தன. புனர்வாழ்வு முகாமிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்ட போதிலும் கண்காணிப்புகளும், விசாரணைகளும், அச்சுறுத்தல்களும் தொடர்ந்த வண்ணமே இருந்தன. இதனால் இங்கு வாழ விரும்பாத முன்னாள் போராளிகள் வெளிநாடுகளுக்குச் செல்ல முற்பட்டு விமான நிலையங்களில் கைது செய்யப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றன.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர், முன்னைய பிரச்சினைகள் ஓரளவிற்கு தணிந்த நிலை ஏற்பட்டது. ஆனால், சுமந்திரன் மீதான படுகொலை முயற்சி என்ற விடயம் மீண்டும் அவர்களுக்கு சிக்கலை உண்டு பண்ணியுள்ளது. தற்போது நான்கு முன்னாள் போராளிகள் குறித்த கொலைமுயற்சி தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஜனவரி 13ம் திகதி, சுமந்திரன் தாழையடியில் முக்கியமான கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காகச் செல்லவிருந்த தாகவும், அவர் செல்லும் பாதையில் கண்ணிவெடியினை வெடிக்கச் செய்து அவரை கொலை செய்யத் திட்டம் தீட்டப் பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமந்திரன் இறுதி நேரத்தில் குறித்த கூட்டத்திற்குச் செல்வதை தவிர்த்ததால் கொலையாளிகளின் முயற்சி சரிவரவில்லை என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன. இதற்கு முன்னரும் மூன்று தடவை அவரை கொலை செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இக்கொலை முயற்சி தொடர்பில் சுமந்திரனால் எவ்வித கருத்துக்களும், விளக்கங்களும் வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால், தன்னைக் கொலைசெய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்த சில தகவல்களை அவர் வெளியிட்டதாக இது தொடர்பாக எழுதப்பட்ட பத்திகள் குறிப்பிடுகின்றன.

முன்னாள் போராளிகள் சிலரால் கிளிநொச்சியில் வைத்து மற்றுமொரு முன்னாள் போராளியிடம் இக்கொலை குறித்து பேரம் பேசப்பட்டதாகவும், பின்னர் குறித்த போராளி இதனை செய்ய விரும்பாமல், இது தொடர்பான தகவல்களைப் பாதுகாப்புத் தரப்பினரிடம் வெளிப் படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் எந்தளவில் உண்மைத்தன்மை உள்ளது என்பது பற்றிப் பொதுமக்களுக்குத் தெரியாது. இவ்வாறானதொரு சதித் திட்டம் தீட்டப்பட்டிருந்தால் அது குறித்த உண்மைகள் வெளிப்படுத்தப்படுவதோடு சட்டரீதியான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படலாம். முன்னாள் போராளிகள் சிலர் இதில் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்களுக்கு சட்டப்படி தண்டனை வழங்கலாம். ஆனால், முன்னாள் போராளிகள் அனைவரையும் சந்தேகக் கண்ணோட்டத்தில் நோக்குவது சரியானதல்ல.

வெளிவந்துள்ள செய்திகளின்படி பேரம் பேசப்பட்ட போராளி குறித்த சதித் திட்டத்திற்கு உடன்படாமல் அதனை பாதுகாப்புத் தரப்பினருக்குத் தெரியப்படுத்தி இந்த சதித் திட்டத்தை முறியடிக்க உதவியிருந்தமை உண்மையானால் இவ்வாறான பல முன் னாள் போராளிகள் இருக்கின்றார்கள் அவர்கள் நேர்மையான முறையில் வாழவே விரும்புகின்றார்கள் என்பதையும் சகலரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.



இன்று முன்னாள் போராளிகளிடமும் அவர்களது குடும்பத்தினர் மத்தியிலும் தோன்றியுள்ள அச்சத்தைப் போக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு உள்ளது. அது மட்டுமன்றி இது குறித்து தெளிவுபடுத்தலை சுமந்திரனும் மக்களுக்கு வழங்க வேண்டும்.

இதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை கொலை செய்யும் முயற்சியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் தொடர்புபட் டுள்ளனர் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி கூறுகின்றார். ஆனால் தற்போதும் புனர் வாழ்வளிக்கப்படாத விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் 4000 பேர் உள்ளனர் என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் சுமந்திரன் கொலை சதித் திட்டம் சந்தேகத்திடமானதாகவுள்ளதாக கருத்து வெளியிட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு அச்சுறுத்தல் இருப்பதாகப் பொலிஸாரால் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்படவில்லை எனவும் வடமாகாணத்தில் இராணுவத்தினர் தொடர்ந்து முகாமிட்டு இருக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறான கதைகள் தெரிவிக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட முன்னாள் போராளிகளை கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது, தங்கள் மீதான குற்றச்சாட்டை அவர்கள் மறுத்துள்ள தோடு, தங்களிடமிருந்து கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற தையும் மறுத்துள்ளனர். எது எவ்வாறாக இருப்பினும், இச்சம்பவத்தின் பின்னர் வடக்கில் குறிப்பாக, வன்னிப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள அச்சத்தையும், பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களையும் களைய வேண்டியது அரசாங்கத்தினது கடமையாகும்.

நாட்டில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தமிழ் மக்கள் தங்கள் முழுமையான ஆதரவை வழங்கியதற்கு முக்கியமான காரணம் நாட்டில் அச்சமின்றி வாழும் ஒரு ஜனநாயக சூழல் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே. முதற்கட்டமாக தமிழ் மக்கள் அதனையே எதிர்பார்த்தனர். ஆட்சிமாற்றத்தின் பின்னர் அவ்வாறானதொரு சூழல் உருவாகத் தொடங்கியதும் உண்மையே. ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகள் பழைய நிலை மீண்டும் உருவாகுமோ என்கின்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இனங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால் முதலில் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட வேண்டும். அச்சமற்ற, ஜனநாயக சூழல் முழுமையாக ஏற்படுத்தப்பட வேண்டும். நல்லாட்சி என்பது அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும்.

விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன், தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.
பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Get 90's & ABOVE IN MATH IN 2nd SEMESTER

Starts from 3rd week of January 2017

G12 Calculus

The most important course for Engineering field

G11 Function

G10 & G9

"Teaching Experience in Math for more than 23 years" - Limited Students

MATH WORLD
MOST ADVANCED TALENTED HELP
- A private math institute -

416-666-5515 Markham & Steeles

# ஒரு நாயகன் உதயமாகிறான்!

## தமிழ்நாடு அரசியல்

-சிவதாணு -

ரூபாய் நோட்டுகள் செல்லாது என மோடி அறிவித்த நவம்பர் 8... ஜெயலலிதா மரணமடைந்த டிசம்பர் 5... இந்த இரண்டும் போல் தமிழ்நாட்டு மக்களுக்கு மூன்றாவது ஓர் தூங்காத இரவு, பிப்ரவரி 7. அன்று முழு இரவு நிம்மதியாகத் தூங்கியவர்கள் நிச்சயம் மிகக் குறைவாகத்தான் இருப்பார்கள். அவர்களில் பாதி பேர் சீக்கிரமே தூங்கப் போய் விட்டவர்கள். அவர்களுக்குத் தெரியாது... இன்னும் சற்று நேரத்தில் சென்னை மெரினாவை நோக்கி மீண்டும் மொத்த இந்தியாவும் திரும்பப் போகிறது என்று. அன்று மெரினாவில் வீசிய பன்னீர் புயலால் புரட்டிப் போடப்பட்ட தமிழக அரசியல் இப்போது வரை மீளவில்லை.

புயலுக்கு முன் அமைதி போல், பிப்ரவரி 7ஆம் தேதி இரவு 9 மணிக்கு திடீரென சென்னை மெரினாவுக்கு வந்த தமிழக பொறுப்பு முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், அங்கு ஜெயலலிதா சமாதி முன்பு 40 நிமிடம் மௌனமாக உட்கார்ந்தார். அந்த 40 நிமிடங்களும், அடுத்து என்ன நடக்கப் போகிறது எனப் பார்க்க மொத்த தமிழகமும் தொலைக்காட்சி நேரலை முன்னால் ஆவலாகக் காத்திருந்தது.

மௌன அஞ்சலியை முடித்துக்கொண்டு எழுந்த பன்னீர்செல்வம் பேசத் தொடங்கிய போது இன்னும் ஆச்சரியம். அப்போது அவர் பழைய பன்னீர்செல்வம் இல்லை, புதிய பன்னீர்செல்வமாக மாறியிருந்தார்.

"என் மனசாட்சி என்னை உறுத்தியதால், மக்களுக்கும் உடன்பிறப்புகளுக்கும் சில உண்மைகளைச் சொல்ல வேண்டும் என்று அம்மா ஆன்மா என்னுள் வந்து உந்தியதால், இங்கு வந்தேன்" என்று தொடங்கியவர், சசிகலா மீது அடுக்கடுக்காக குற்றச்சாட்டுகளை முன்வைத்து, எல்லாவற்றுக்கும் மேலாக, "5ஆம் தேதி எண்ணூர் பகுதியில் கப்பல் விபத்தைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமையை நேரில் பார்த்து விட்டு, தலைமைச் செயலகத்தில், அது தொடர்பாக அதிகாரிகளுக்கு கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று, அதிமுக தலைமைக் கழகத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறுவதாக எனக்குத் தகவல் வருகிறது. போயஸ் கார்டனுக்குச் சென்றேன். அங்கு அனைத்து அமைச்சர்களும் சசிகலாவின் குடும்பத்தினரும் அமர்ந்திருந்தனர். என்னை அமரச் சொன்னார்கள். சின்னம் மாவை முதலமைச்சர் ஆக்க வேண்டும் அதற்கு முதலமைச்சர் பதவியிலிருந்து நீங்கள் விலக வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அம்மா



நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திவிட்டு வருகிறேன் என்று நான் கேட்டபோது, அதற்குக்கூட என்னை அனுமதிக்கவில்லை. என்னை மிரட்டி கையெழுத்து வாங்கிக் கொண்டனர்" என்று ஒரு பெரிய குற்றச்சாட்டை முன்வைத்தார்.

'ஒரு மாநிலத்தின் முதல்வரே மிரட்டப்பட்டிருக்கிறாரா' எனத் தொடங்கி, அன்று இரவு முழுக்க அடுத்தடுத்து 'மிட்நைட் பிரேக்கிங் நியூஸ்'களால் அதிர்ந்தது இந்தியா. ஒருபக்கம் சசிகலா போயஸ் கார்டனில் சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டி, பன்னீர்செல்வத்தை கட்சியின் பொருளாளர் பதவியில் இருந்து நீக்குவதாக அறிவிக்க, இன்னொரு பக்கம் பன்னீர்செல்வம் இல்லம் முன்பு தொண்டர்கள் கூட்டம் குவிய, சென்னையே அன்று இரவு விழாக் கோலத்தில் இருந்தது. சரி, காலையில் இன்னும் பல திருப்பங்களைப் பார்க்க வேண்டியிருக்கும் என்று அனேகமானவர்கள் அன்று அதி காலைதான் தூங்கவே சென்றார்கள்.

பல வருடங்கள் அமைதியை, தனது இயல்பான குணத்தை வெடித்து சிதறடிப்பதற்கு முன்பான, ஓ. பன்னீர்செல்வத்தின் அந்த ஆழ்ந்த தியானம், மிக நிதானமாகவும் கச்சிதமாகவும் ஒவ்வொரு வார்த்தை யையும் தேர்ந்தெடுத்து பேசிய விதம், அன்று இரவு வீட்டுக்கு திரும்பிய பின்னரும் இரவு முழுக்க ஊடகங்களில் எந்தக் கேள்விக்கும் தயங்காமல் பதிலளித்தது, மறுநாள் ஆதரவாளர்கள் சூழ 'ஜெயலலிதா மரணம் குறித்து விசாரணை கமிஷன் அமைக்கப்படும்' என்று அறிவித்தது, 'சட்டசபையில் பலத்தை நிரூபிப்பேன்' என சவால் விட்டது, 'ஜெயலலிதாவின் சொந்த வீடான வேதா இல்லத்தை ஆக்கிரமித்திருப்பவர்களை வெளியேற்றி, அதனை அம்மா நினைவு இல்லமாக மாற்றுவோம்' என அறிவித்திருப்பது, அதற்காக கையெழுத்து இயக்கம் ஆரம்பித்திருப்பது... எல்லாவற்றையும் பார்க்கும்போது, இவை எல்லாம் திடீரென ஒரு நாளிலோ அல்லது கடந்த ஒரு வாரத்திலோ உதயமானது போல் தெரியவில்லை. பல நாட்களாக உருவாக்கப்பட்டு மெருகேற்றப்பட்டுக் காத்திருந்த மிக தேர்ந்த ஒரு வியூகம்.

'இவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஆண்டவனாலும் தமிழ்நாட்டைக் காப்பாற்ற முடியாது' என்று நடிகர் ரஜினிகாந்த் எச்சரித்த, 1991-96 ஜெயலலிதா ஆட்சியின் கடைசி நாட்களில் தமிழகத்தில் மக்களிடம் ஏற்பட்ட அமைதியான ஒரு எழுச்சி இப்போது மீண்டும் ஏற்பட்டுள்ளது. அன்று ரஜினியால் ஆபத்தானவர்கள் என அடையாளம் காட்டப்பட்டவர்கள் இன்று, பின்வாசல் வழியாக அதிகாரத்துக்கு நெருக்கமாக வந்துவிட்டார்கள். 'நாங்கள் ஜெயலலிதாவுக்குதானே ஓட்டுப்போட்டோம் அவர் இவர்களை எல்லாம் விலக்கி வைத்திருந்ததை நம்பித்தானே ஓட்டுப்போட்டோம். இப்போது இப்படி சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி அதிகாரத்துக்கு வந்து விட்டார்களே' என துடிக்கிறார்கள் மக்கள். அந்தத் துடிப்பு எந்த நேரமும் ஜல்லிக்கட்டுப் போரா ட்டம் போல் வெடிக்கலாம்.

அதை நன்கு உணர்ந்ததாலேயே, கூட்டை உடைத்துக்கொண்டு தைரியமாக வெளியே வந்திருக்கிறார் ஓ. பன்னீர்செல்வம். கட்சியினர் ஆதரவு இருக்கிறதோ இல்லையோ, மக்களும் அதிமுக தொண்டர்களும் நிச்சயம் தன் பின்னால் நிற்பார்கள் என்ற பன்னீர்செல்வத்தின் நம்பிக்கை வீண் போகவில்லை. பன்னீர்செல்வம் வீடு முன்பு கூடும் தொண்டர்கள் மற்றும் பொது மக்கள், சமூக வலைதளங்களில் பன்னீர் செல்வத்துக்கு அதிகரிக்கும் ஆதரவு, நாள்தோறும் ஒவ்வொருவராக வந்து கட்சி நிர்வாகிகள் பன்னீர்செல்வம் தலைமையை ஏற்று ஆதரவு தருவது... எல்லாம் இதற்கு சாட்சி.

'திமுக கட்சியில் இருந்து, எம்.ஜி.ஆர். வெளியேற்றப்பட்ட நாட்களை மீண்டும் பார்ப்பது போலிருக்கிறது. கட்சி நிர்வாகிகள் பெரும்பான்மை ஒரு பக்கம், மிகமிகக் குறைவான கட்சி நிர்வாகிகளும் அதிகமான தொண்டர்களும் என பன்னீர்செல்வம் இன்னொரு பக்கம்' என்கிறார்கள் அக்கால அரசியலையும் பார்த்த மூத்த பத்திரிகையாளர்கள்.

இன்று ஒட்டுமொத்த அதிமுக தொண்டர்களும் சசிகலாவிற்கு எதிராக நிற்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அதிகார ஆசை கொண்ட சட்டமன்ற உறுப்பினர்களையும் அமைச்சர்களையும் தவிர மற்ற யாரும் சசிகலா பின்னால் இப்போது இல்லை. இருப்பவர்களும், இன்னும் நான்கு ஆண்டுகள் ஆட்சி இருக்கிறது என்பதால் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்கள் மட்டும் தான்.

சசிகலாவுக்கு எதிராக பொது மக்களும் பெரும் கோபத்துடன் களம் இறங்கியிருக்

(தொடர்ச்சி 24ஆம் பக்கம்...)

Make a call,
make a difference.



If you've witnessed or have concerns that an adult with a developmental disability is being abused or neglected, you can help.

Find out how at: ontario.ca/ReportON

1-800-575-2222
reportONdisability@ontario.ca
TTY: 416-916-0549 or Toll Free: 1-844-309-1025

Paid for by the Government of Ontario

ReportON | Ontario

# நாமும் நமது இல்லமும் - 481

## 2016 - அடுத்த சாதனை வருடம்

ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969



2016ஆம் ஆண்டில் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் கைமாறிய ஆதனங்களின் எண்ணிக்கை 113,133 ஆகும். குறிப்பாக ரொறொன்ரோ பகுதியில் விற்கப்பட்ட வீடுகளும், அடுக்குமாடி மனைகளும் அதிக விலையில் விற்கப்பட்டதனைக் காணக்கூடியதாக இருந்தது. மொத்தமான ஆதனங்களின் சராசரி விலை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 17.3% இனால் அதிகரித்துள்ளது. சராசரி விலை $729,922 ஆகும். இவ்விலை அதிகரிப்பு 2016 ஆம் ஆண்டு ஆதனம் விற்றவர்களிற்கு சிறந்த ஆண்டாகவே இருந்தது. இந்நிலை 2017 இலும் தொடரலாம் என்பது அனேகரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

கடந்த வருட (2016) விலை அதிகரிப்பிற்குப் பல காரணிகளை பொருளாதார ஆய்வாளர்கள் முன்வைக்கின்றார்கள். அவற்றில் முக்கியமானதாக மக்கள் தொகை அதிகரிப்பு (இதற்குப் புதியவர்களின் வருகை), மிகக்குறைந்த அடமானக்கடன் வட்டிவீதம், பணவீக்கத்திற்கு மேலான பொருளாதார வளர்ச்சி, குறைந்தளவான ஆதனங்களே விற்பனைக்காக சந்தைக்கு கொண்டு வரப்பட்டது, மொத்தமாகக் கைமாறிய ஆதனத்தில் 4.9% ஆனவை வெளிநாட்டவர் களால் வாங்கியவையே கருதப்பட்டன. எனவே கடந்த வருடத்தில் (2016) ஆதனம் கொள்வனவு செய்தவர்களில் 95% இற்கு மேற்பட்டவர்கள் கனடாவில் வாழ்பவர்களே. ஆனால் வன்கூவரின் நிலை வேறுவிதமாகக் கடந்த வருடம் காணப்பட்டது.

ரொறொன்ரோ பெரும்பாகத்தில் 50% இற்கு மேலான விற்பனை முதல் தடவையாக ஆதனம் வாங்கியவர்களாலேயே ஏற்பட்டது. ஏற்கனவே கடந்த வருடம் அடமானக்கடன் பெறுவதில் இறுக்கநிலையை ஏற்படுத்திய போதிலும் விற்பனை அதிகரித்தே உள்ளது. கடந்த வருடம் முதல் தடவை ஆதனம் வாங்குபவர்களுக்கு ஆதன வீட்டு நிலமாற்று வரிச்சலுகை $2000 இலிருந்து $4000 ஆக அதிகரிக்கப்பட்டது. 'நாமும் நமது இல்லம்' வாசிப்பவர்களுக்கு இது தெரிந்திருக்கும். மற்றும் ரொறொன்ரோவில் முதல் தடவை தவிர ஆதனம் வாங்கும் அனைவரும் இரண்டு நிலமாற்று வரியினை செலுத்த வேண்டும் என்பது தெரிந்ததே.

2017இல் ஆதனவிலை அதிகரிப்பு இருக்கும் என்பதில் ஆய்வாளர்கள் ஒரேவிதமாகவே

HISTORIC ANNUAL STATISTICS

| Year | Sale | Average Price |
|---|---|---|
| 2005 | 84,145 | $335,907 |
| 2006 | 83,084 | $351,941 |
| 2007 | 93,193 | $376,236 |
| 2008 | 74,552 | $379,347 |
| 2009 | 87,308 | $395,460 |
| 2010 | 85,645 | $431,276 |
| 2011 | 89,096 | $465,014 |
| 2012 | 85,496 | $497,130 |
| 2013 | 87,048 | $522,958 |
| 2014 | 92,782 | $566,624 |
| 2015 | 101,313 | $622,121 |

எதிர்வு கூறியுள்ளார்கள். அத்துடன் இவ் அதிகரிப்பு 10% இற்கு மேலாக இருக்கும் என்றும் எதிர்வு கூறியுள்ளார்கள். இதன் நிலைப்பாட்டை ஜனவரி 2017 இல் காணக்கூடியதாக இருந்தது. இதற்கு ஒரு சிறு உதாரணம் கூறலாம். அண்மையில் ரொறொன்ரோவில் Parliament & Bloor பகுதியில் அடுக்குமாடி மனை கட்டிடத்தொகுதியில் நீண்டகால விற்பனையில் இருக்கும் Tridel நிறுவனம் ஒரு புதிய கட்டிடத் தொகுதியை சந்தைக்குக் கொண்டு வந்திருந்தது.

ஏறக்குறைய 350 மனைகளைக் கொண்ட இந்தத் தொகுதியின் ஆரம்பவிலை ஏறக்குறைய 500 சதுர அடி அளவான மனைக்கு $350,000 இற்கு மேலாக இருந்தது. சராசரி சதுர அடியின் விலை ஏறக்குறைய $700 ஆகக் காணப்பட்டது. வாகனத்தரிப்பு மேலதிகமாக $59,000 ஆக விற்கப்பட்டது. இந்த கட்டிடத்தொகுதியில் மனை வாங்குவதற்காக தமது வாங்கும் பத்திரத்தை (worksheet) பூர்த்தி செய்து கொடுத்திருந்தவர்கள் ஏறக்குறைய 3500 மக்கள். ஏறக்குறைய ஒவ்வொரு மனைக்கும் கிட்டத்தட்ட 10 மக்கள் பத்திரம் கொடுத்ததாகக் கொள்ளலாம். ஏற்கனவே இந்தளவு கேட்பவர்கள் (Demand) இருந்தால் இதே இடத்தில் 2வது கட்டிடத்தொகுதி மிகவிரைவில் கொண்டு வரப்பட இருக்கின்றது. புதிதாக கொண்டு வரப்படும் தொகுதியின் விலை ஏற்கனவே இருந்த விலையை விட ஆகக் குறைந்தது 10% அதிகமாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு பல உதாரணங்களைக் கூறலாம். இது இன்றைய நிலைமை. நிலைமை எப்பொழுதும் மாறலாம்? நிதானம் மற்றும் கவனம் தேவை. அத்துடன் நேர்மையான அறிவுறுத்தல் அனுபவத்தர்களிடம் பெறுவது சிறந்ததாகலாம்.

20/20 CASH RU$$H

எமது வாடிக்கையாளர்களுக்கும்
நண்பர்களுக்குமாக எமது நிறுவனத்தின்
புதியமுறையிலான அதிஷ்டம் பார்த்தல்.

ஒவ்வொரு மாதத்தின் 1ஆம் திகதியும் 15ஆம் திகதியும்
அதிஷ்டம் பார்க்கப்ட்டு வெற்றிபெறும் அதிஷ்ட்டசாலிக்கு
அவர் விரும்பும் தங்கநகை பரிசாகக் கொடுக்கப்படும்.
இந்த அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.
உடனடியாக எமது நிறுவனத்திற்கு வந்து உங்கள்
பெயர்களைப் பதிவு செய்யுங்கள்.

✓ Western Union - Money Transfer
- Payout
- Bill Payments

✓ Buying Used Gold - Top Dollar
✓ Cheque Cashing
✓ Small Loans
✓ Pawning

தொடர்புகளுக்கு:

Tel: 416.291.CASH(2274)
Fax: 416.291.2276

email: 2020CashRusshCorp@gmail.com
4049 Sheppard Ave. East.
Scarborough, ON. M1S 1S8

# சத்குரு - கேள்வி -பதில்

கேள்வி: "தியானம் என்பது கூர்மையான கவனம் வைக்கும் நிலையா, அல்லது ஓய் வெடுத்துக் கொள்ளும் நிலையா?"

சத்குரு: கண்களை மூடிக் கொண்டாலே தியானம் என்று நினைப்பவர்கள் இருக்கி றார்கள். கண்களை மூடிக் கொண்டு ஜபம், தபம், தியானம் என்று நீங்கள் நூறுவித மான செயல்களில் ஈடுபடலாம். யார் கண் டது? தியானம் செய்வதாகச் சொல்லிக் கொண்டு, உட்கார்ந்த நிலையில் தூங்கிப் போவதில் வல்லவராகக்கூட நீங்கள் இருக் கலாம்.

சத்குரு: அளவு கோல்களைப் பயன்படுத் துவது எதற்காக? ஒப்பிடு வதற்காக. இன் னொருவருடன் ஒப்பிட்டுப் பார்க்க விரும்பும் போதுதான் அளந்து பார்க்க வேண்டும் என்ற எண்ணமே வருகிறது. அளந்து பார்க்க வேண்டும் என்ற எண்ணம் வந்தாலே, உங்களிடம் தியான நிலை இல்லை என்று தான் அர்த்தம்.

தியானம் என்ற அம்சம் யாருடனும் போட்டி யில் ஈடுபடுவதல்ல. முன்னால் போகி-றோமா, பின்னால் போகிறோமா என்ப தைக் கூடக் கவனிக்க வேண்டியிருக்காத

இருக்கும் சனத்தொகையில் பெரும்பான்மை யினரால் ஓரிடத்தில் பொருந்தி உட்கார முடியாது. மனதை ஓரிடத்தில் சற்று நேரத் துக்கு மேல் இருத்த முடியாது. அவர்களும் உங்களைப் போன்ற சிக்கலில் தான் உள்ளார்கள்.

தியானம் என்பது பயிற்சி செய்து தேர்ச்சி கொள்ளும் செயல் அல்ல. தியானம் என்பது நேர வேண்டும். உங்களை நீங்கள் சரிப்படுத்திக் கொள்வதன் மூலம் மட்டுமே தியானம் உங்களுக்கு நேரும். சில விடயங் களைச் சரியாகச் செய்யாவிட்டால், அது உங்களுக்கு வாய்க்காது. தியானத் தைக் கற்றுக்கொள்ள வாய்ப்பு இல்லை. ஆனால், உங்களை சரி செய்து கொள்ள வழிமுறை கள் உள்ளன. அவற்றைச் செய்தால், தியானத்தில் ஆழ்வது என்பது இயல்பாக நடக்க முடியும்.

கேள்வி: தியானத்தின் போது ஏன் கண் களை மூட வேண்டும்?

சத்குரு: தூங்குவதற்காக மட்டுமே நீங்கள் கண்களை மூடிப் பழக்கப்பட்டு விட்டீர்கள்.



சத்குரு வாசுதேவ்

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

தூக்கம் என்பது விழிப்புணர்வற்ற ஒரு நிலை. ஆனால் தியானம் என்பது உள் நோக்கிப் பார்ப்பது. அதற்கு விழிப்புணர்வு வேண்டும். உங்களுக்கு தியானமே தெரிய வில்லை என்றாலும் தினம் பத்து நிமிடம் விழிப்புணர்வாகக் கொஞ்சம் கண்ணை மூடி உட்கார்ந்து பாருங்கள். உங்கள் உடல் நிலை, மனநிலையில் பெரிய மாற்றம் வரும். வித்தியாசம் நன்கு புரியும்.



தியானம் என்பது கூர்மையான கவனமும் அல்ல. தளர்வான ஓய்வும் அல்ல. தியான த்தின் விளைவாக உங்கள் கவனம் கூர்மை யாகிப் போகலாம். தியானத்தின் மூலம் நிம்மதியாக ஓய்வெடுத்த நிறைவு உங்களு க்குக் கிட்டலாம். இரண்டுமே தியானத்தின் பலன்கள்தான்.

தியானம் என்பது நீங்கள் உருவாக்கும் ஒன்றல்ல. ஆசைப்பட்டு அடையும் நிலை அல்ல. அது சொர்க்கத்துக்கான பாதை அல்ல. அது உங்களுக்குள் நீங்கள் அமிழ் ந்து போகும் ஓர் உள்ளார்ந்த தன்மை. அப்படி உள்ளார்ந்து அமிழும் போது உங் கள் உடல், மனம், சக்தி எல்லாம் அவற்றின் உச்சபட்சத் திறனுடன் வேலை செய்யும்.

கேள்வி: "தியானத்தில் நான் எந்த அளவு முன்னேற்றத்தை எட்டியிருக்கிறேன் என்பதை எப்படி அளவிடுவது?"

ஓர் இடத்தை அடைந்து விட்டால், அங்கே இருப்பதே போதுமானது. மற்றபடி, தியானத் தில் இருக்கிறீர்களா, அல்லது தூக்கத்தில் இருக்கிறீர்களா என்று தெரிந்து கொள்வத ற்கு வேண்டுமானால், சில விஞ்ஞானக் கருவிகளைப் பயன்படுத்த முடியும். உங்கள் நாடித் துடிப்பு, ரத்தக் கொதிப்பு உடலில் ஏற்படும் சில மாற்றங்களை அளந்து பார்க்க முடியும். இவை கூடத் தியானத்தின் பின்விளைவுகள் தான். இந்த விளைவு-களை அளப்பதற்கு விஞ்ஞானம் பயன்பட லாமே தவிர, தியானத்தை அளப்பது என்ற கேள்விக்கே இடம் இல்லை.

கேள்வி: "தியானம் செய்ய உட்கார்ந்தாலும் மனம் ஓரிடத்தில் நில்லாமல் அலைபாய்கி றது. சரியான தியானப் பயிற்சி பெறுவது எப்படி?"

சத்குரு: நீங்கள் மட்டுமல்ல. இந்தப் பூமியில்

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

'நான் புன்னகைத்தாலே முகத்தைத் திருப்பிக்கொள்பவர்களிடத்தில் எப்படி நான் அன்பாக இருக்க முடியும்?'

'அன்பாக இருப்பது என்பது ஒரு உள்தன்மை. அன்பாயிருப்பதாகத் தெரு எங்கும் அறிவித்துக்கொண்டே செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

நீங்கள் அன்பாயிருப்பதற்கு, அடுத்தவர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது, உங்களுக்கு அன்பு என்றால் என்ன என்று முழுமையாகப் புரியவில்லை என்பதைத்தான் காட்டுகிறது.

அன்பு என்பது எதிர்பார்ப்பு இல்லாதது. அடுத்தவர்களும் பதிலுக்கு அன்பாயிருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் இல்லாதது.

ஆயிரம் பேருக்குச் சேவை செய்தாலும் இரண்டே பேருக்கு வீட்டில் சமைத்தாலும் நீங்கள் அதே அளவு அன்பை மனதில் உணரமுடியும். அன்பாக இருப்பது புத்திசாலி த்தனம் என்று உங்களுக்குத் தெரிந்து இருக்கிறது. அப்புறம் என்ன? கோபத்தைத் தூண்டும் காரியத்தை ஒருத்தன் செய்தால், போட்டி போட்டுக் கொண்டு, 'உன்னைவிட அதிக மூடனாக்கும் நான்' என்று நிரூபித்துக்காட்ட விரும்புகிறீர்களா?
'முதலில் உலகமே அன்பானவர்களால் ஆகட்டும். அப்புறம், கடைசியாக நான் மாறுகிறேன்' என்று காத்க்கப் போகிறீல்களா என்ன?'




*4 day Inner Engineering Program*

*led by an Isha teacher trained by Sadhguru*
*Coming to Toronto in 2 locations – March 23 - 26, 2017*

*TIMINGS:* Thursday March 23 : 6:30pm – 9:45pm
Friday March 24 : 6:30pm – 9:45pm
Saturday March 25 : 8:30am – 7:00pm
**Sunday March 26 :** 7:30am – 7:00pm

*VENUE -* ***TORONTO***
Noor Cultural Centre
123 Wynford Dr., North York (Toronto), ON M3C 1K1

***MISSISSAUGA***
Swagat Banquet Hall,
6991 Millcreek Drive, Mississauga (Toronto), ON L5N 6B9

*Email: toronto@ishafoundation.org /Phone: 416 300 3010*
*Online registrations: www.innerengineering.com/live/toronto*

# கனடாவில் முதியோருக்கான பத்து சலுகைகள்!

## கனடிய தகவல் தொடர் 262



**சிவ. பஞ்சலிங்கம்**, B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999

கடந்த இதழ் தொடர்ச்சி

### 5. முதியோருக்கான குடியிருப்பு வசதிகள்.

முதியோருக்கு வழங்கப்படும் குடியிருப்பு வசதிகளை மூன்று வகையாகக் குறிப்பிடலாம்.

**A. முதியோர் இ ல்லங்கள்** (Retirement homes)

அரச அனுமதிப்பத்திரம் பெற்று, சட்ட ஒழுங்கு விதிகளின்படி அரசின் கண்காணிப் பின் கீழ் தனியார் நிறுவனங்களினால் எதுவிதமான அரச நிதி உதவியுமில்லாமல், முதியோர் நலன்களுடன் விதம்விதமான வசதிகளுடன் கட்டணம் அறவிட்டு நடத்தப்படும் இல்லங்களே இவை ஆகும்.

**B. அரச ஆதரவோடு இயங்கும் குடியிருப்பு வசதிகள்.** (Supporting Houses)

பின்வருவனவற்றினை இங்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

- முதியோர் நல இல்லங்கள் (Home care for seniors)
- வருமானம் குறைந்த முதியவர்களுக்கு குறைந்த வாடகைக் கட்டணத்தில் வழங்கப்படும் குடியிருப்பு மனைகள். (Seniors subsidized housing)
- முதியோர் தொடர்மாடிக் கட்டிடங்கள் (Seniors Apartments)
- வசதி வாய்ப்புகள் நிறைந்த கொண்டோ மினியங்கள் (Life lease condo)

**C. நீண்ட காலப் பராமரிப்பு நிலையங்கள்.** (Long Term care)

இவை பொதுவாக நோயாளிகளைப் பராமரிக்கும் வைத்தியசாலைகள் போலவே இயங்கும். 24 மணி நேரமும் மருத்துவ கண்காணிப்பில் இருந்து, அன்றாட வேலைகளை செய்வதற்குத் தேவையான முதியோருக்காக உருவாக்கப்பட்ட இடமே இதுவாகும். அடிப்படை செலவுகளை அரசு வழங்கும். மேலதிகமாகத் தனி அறை வேண்டுமாயின் சொந்த செலவில் ஒழுங்கு செய்ய வேண்டும்.

மேற்குறிப்பிட்ட முதியோர் குடியிருப்பு வசதிகளை ஒழுங்கு செய்ய வேண்டுமாயின் தொடர்பு கொள்ள வேண்டிய இடங்கள் பின்வருமாறு.

CCAC - Community Care Access Centre
(முதியோர் நல தொடர்பு மையம்)
250, Dundas Street, west, Suite 305
Toronto, ON M5T 2Z5
1-866 -243-0061

Housing Connections Resource Centre
176, Elm St., Toronto, ON M5T 3M4
Phone - (416) - 397-7400

Retirement Home Regulatory Authority
160, Eglinton Ave. E., 5th Floor
Toronto, ON M4P 3B5
Phone - 1-855-275-7472

### 6. சுய நினைவுகள் இழந்து வழி தெரியாது வீதியில் தவறும் முதியவர்களுக்கு ஒரு முற்பாதுகாப்பு (Safely home registration to people with dementia)

'அல்ஸைமர்' (Alzheimer) என்பது நினைவுகளை இழக்கும் நோய். இந்நோயினால் பாதிக்கப்பட்டு கனேடிய மொழிகளைப் புரிந்து கொள்ளாத நிலையில் பல முதியவர்களுக்கு சில நேரங்களில் வீதியில் எங்கே செல்கின்றேன் என்பது தெரியாமல் அலைவது வழமையாகும். இவ்வாறு பாதிக்கப்படும் முதியவர்களுக்கு கனடாவின் 'அல்ஸைமர் நிறுவனம்' (Alzheimer Society of Canada) ஒரு முற்பாதுகாப்பினை செய்து வருகின்றது.

இந்நிறுவனத்தின் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட முதியவர் தொடர்பான விபரங்கள் உட்பட, அவருக்குப் பிரச்சினை ஏற்பட்டால் தொடர்பு கொள்ள வேண்டிய உறவினர்களின் தகவல்கள் யாவற்றையும் பெற்று அவர்களின் மின்கணினி தகவல் மையத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும்.

(Safely home registration of wandering persons)

இத்தகவல் பதிவுகள் யாவும் கனேடிய காவல் துறைகளோடு என்றும் தொடர்பில் இருக்கும். சகல விபரங்களையும் பதிவு செய்த இந் நிறுவனம் என்றுமே துருப்பிடிக்காத ஒரு உலோக சிறுவளையக் காப்பு (Stainless steel writst bracelet) ஒன்றினை அவர்கள் கையில் நிரந்தரமாகப் பொருத்தி விடுவார்கள். இவ் உலோகக் காப்பில் ஒரு பதிவு இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கும். இப்பதிவு இலக்கத்தினை வைத்துக் கனடாவின் காவல் துறையினர் இலகுவாக அவர்களின் முழு விபரங்களையும் அறிந்து, பாதுகாப்பாக உரிய இடத்தில் சேர்ந்து விடுவார்கள்.

இத்தகைய நிலைமையில் உள்ள முதியவர்களுக்கு பதிவு செய்ய வேண்டிய இடம்.


MedicAlert Foundation Canada
Morneau Shepell Centre II

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

**INCOME PROTECTION INSURANCE**
**வருமான பாதுகாப்பு காப்புறுதி**

- நாங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் பாதுகாப்போம்.
- We can protect you and your family!
- நீங்கள் சுகவீனமுற்றதனாலோ அல்லது காயமடைந்ததனாலோ வேலை செய்ய முடியாவிட்டால் இந்தக் காப்புறுதி உங்கள் வருமானத்தை ஈடு செய்யும்.
- If you are unable to work due to injury or illness replace your income with disability insurance
- இந்தக் காப்புறுதி ஆயுள்காப்புறுதியைப் போலவே மிகவும் முக்கியமானது.
- It's just as important as Life Insurance

- 100% return of premium those who are under 40 years old(some conditions apply)
- We can cover up to $10,000 per month.
- We are specializing in coverage for truck drivers, Real Estate agents, Mortgage professionals, self-employed and construction workers.
- Also we can cover your fixed business expenses if you are unable to work.
- Included travel insurance for the family. 5 Million Per person / 60 days per trip. Unlimited trips per year
- Extended Medical $100,000



**Nimal Subramaniam**
Financial Advisor
Dir: 416 816 7994
Web: www.nimalInsurance.com
Email: neel900@hotmail.com

KABIS
KABIS & ASSOCIATES INC.
A Solution Company

UCI | La Capitale | iA Financial Group

Life Insurance · Non-Medical Insurance · Critical Illness Insurance · Disability Insurance · Mortgage Insurance · Travel Insurance · Super Visa Medical Coverage · Drug and Dental Plan · TFSA · RESP · RRSP · LIRA · LIF

# முதலமைச்சர்.....

07ஆம் பக்கத்தொடர்ச்சி

பலாத்காரமாக எங்களைக் கொண்டுவந்து குடியேற்றியுள்ளார்கள். ஆனால் அவர்கள் எங்களுக்கு நீர்கொண்டு வந்து தரவில்லை. வேறு எந்த வசதிகளையும் தரவில்லை. நாங்கள் எதை நட்டாலும் வெயிலின் நிமித்தம் அவை கருகிவிடுகின்றன. அரசாங்கத்தின் கரவான எண்ணங்களை ஈடேற்ற நாங்கள்தான் கிடைத்தோமா?" என்று கேட்டார், நான் ஒரு சிங்களவர் என்று நினைத்தே அவர் அவ்வாறு கூறியிருந்தார். ஆனால் அவர் கூறியவை உண்மை. தமிழர் தாயக இடங்களில் சிங்கள மக்களை பலாத் காரமாகக் குடியேற்ற வேண்டும் என்பதில் அன்றைய சிறிமாவோ அரசு கண்ணும் கருத்துமாக இருந்தது. அன்று எமது அரசியல்வாதிகள் அச்செயல்பாடுகளைத் தடுக்காது விட்டதால்தான் இன்று கிழக்கு மாகாணத்தில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் சிங்கள சகோதரர்கள் என்று ஆகி விட்டது.

தமிழர்கள் தெற்கில் காணிகளைக் கொள்வனவு செய்கின்றனர். சிங்களவர்கள் நாங்கள் வடக்குக்குப் போனால் என்ன? என்று கேட்கின்றார்கள். தமிழர்கள் தெற்கே சென்றது தாமாக, தமது செலவில், தமது வேலைகளிற்குச் செல்வதற்காக. ஆனால் திருமலையில் அன்று குடியேற்றப்பட்டவர்கள், தமிழர்களுடைய நிலங்களைப் பறிப்பதற்காக பலாத்காரமாக அரசாங்கத்தினால் குடியேற்றப்பட்டவர்கள். தாமாக அவர்கள் சொந்தச் செலவில் அங்கு போகவில்லை. ஆகவே அரசாங்கம் வேண்டுமென்றே தமிழர் தாயகங்களை தம் வசமாக்கவே இவ்வாறான அரச குடியேற்றங்களில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். தமிழர்கள் தாமாக தெற்கு செல்வதற்கும் அரசாங்கத்தினர் பலாத்காரமாக சிங்களவரை அதுவும் குற்றவாளிகளாகக் காணப்பட்டுச் சிறையில் இருந்தவர்களை விடுவித்துக் குடியமர்த்துவதற்கும் பாரிய வித்தியாசமிருக்கின்றது.

இன்னுமொரு விடயத்தை நாங்கள் மறந்து விடக்கூடாது. இலங்கை எங்கிலும் பரந்து வாழ்ந்து வந்த தமிழ் மக்களை சுதந்திரத்தின் பின்னர் தெற்குப்புறங்களில் அடித்துத் துரத்திய பின்னரே வட கிழக்கில் பலாத்கார அரச குடியேற்றங்களை நடைமுறைப்படுத்தி வந்துள்ளார்கள். அதாவது அங்கு எங்களைத் துரத்திவிட்டு காணியை எடுத்து வருகின்றார்கள்.

வடக்கு கிழக்கில் இராணுவ உதவியுடன் இதைச் செய்து வருகின்றார்கள். தமிழர்கள் தாம் இருந்த இடங்களில் இருந்து விரட்டி அடிக்கப்படுகின்றார்கள். அதாவது தென்னிந்தியாவுக்கு அகதியாகச் சென்ற தமிழர்கள் அரசாங்க அனுமதிப் பத்திரத்துடன் தமது காணிக்கு திரும்பி வந்தார்கள். அங்கு சிங்கள மக்கள் வாழ்ந்து வருவதைக் கண்டு அதிர்ச்சியுறுகின்றார்கள். கேட்டால் வேறு இடத்தில் காணி தருகின்றோம் என்று மத்திய அரசாங்க அலுவலர்கள் கூறுகின்றார்கள். அடாத்தாக இருப்பவர்களைத் தமிழ் மக்களின் காணிகளில் இருக்க விட்டுவிட்டுக் காட்டுப் பாங்கான வேறு இடங்களில் முன்னைய அக்காணிக்குச் சொந்தக்காரர்களை குடியமர்த்த எத்தனிக்கின்றார்கள். இவற்றைப் பற்றிப் பேசினால் எங்களை இனவாதி என்கின்றது அரசாங்கம். பிழை செய்வது அரசாங்கம் பிழையை எடுத்துக் காட்டினால் எங்களுக்கு இனவாதிப் பட்டம் தருகின்றார்கள். எம்முள் சிலர் கூட இவ்வாறான பிழைகளைப் பேசக் கூடாது அடக்குமுறைகளை எடுத்துக் கூறக்கூடாது என்கின்றார்கள்.



பாரம்பரியமாகத் தமிழ் பேசிவந்த வடக்கு கிழக்கு மாகாணங்களில் விரைவில் சிங்கள மயமாகிவிடும் என்ற காரணத்தினால்தான் வடக்கையும் கிழக்கையும் இணைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு தனித்தியங்கிவிட்டால் விரைவில் தமிழ்ப் பேசும் இடங்களை எல்லாம் சிங்கள மொழி பேசும் இடங்களாக மாற்றிவிட முடியும் என்றே வடக்கையும் கிழக்கையும் இணைப்பதை அரசாங்கம் எதிர்க்கின்றது. இன்று சுலபமாகக் கிழக்கை தம்வசமாக்கப் பார்க்கின்றார்கள்.

நடக்கப் போவது என்ன என்பதை தெரிந்து கூட எம்மவர்கள் சிலர் வடக்கு கிழக்கு இணைப்பை, மிகவும் பவ்வியமாக இப்போது கேட்காதீர்கள் என்று கூறுகின்றார்கள். இது என்ன விதத்தில் நியாயமாகும்?

தமிழ் மொழி பேசும் பாரம்பரிய இடங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமானால் வடக்கு கிழக்கு இணைப்பு அவசியம் என்பதை நாங்கள் மறக்கக் கூடாது. வடக்கு கிழக்கு இணைப்பை முன்வைத்தே நாங்கள் மக்களிடம் வாக்குப் பெற்றோம். அதில் மாற்றம் செய்ய வேண்டுமென்றால் எமது மக்கள் தலைவர்கள் "வட கிழக்கு இணைப்பு உங்களுக்கு வேண்டாம். ஆனால் எமக்கு வாக்குப் போடுங்கள்" என்று கேட்க வேண்டும். வெளிப்படையாகக் கேட்டு வென்றால் அரசியல் விஞ்ஞாபனத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியே கேட்க வேண்டும். எதையோ கூறி தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டோம் என்ற மமதையில் தான் தோன்றித்தனமாக எவரும் நடக்க முற்படக் கூடாது. மக்களின் வருங்காலம் கருத்திற்கு எடுக்கப்பட வேண்டும். எனவே வடக்கு கிழக்கு இணைப்பு, எமது தமிழ் மொழியையும் தமிழ் பேசும் மக்களின் இருப்பையும் உறுதிப்படுத்தத் தேவையாக இருக்கின்றதே தவிர வெறும் பகட்டின் நிமித்தம் கோரும் கோரிக்கையன்று. வடக்கு கிழக்கு ஒன்றிணையாது விட்டால் இரு மாகாணங்களும் சிங்கள மொழிபேசும் மாகாணங்களாக மாறுவதைத் தவிர்க்க முடியாது. இப்போதே அணைகட்டாது விட்டால் வெள்ளம் வந்து எங்களை மூழ்கடித்துவிடும். அதனாலென்ன பொருளாதார முன்னேற்றம் முக்கியம். அரசாங்கத்துடன் சேர்ந்து நாங்கள் பொருளாதார முன்னேற்றத்தில் ஈடுபடுவோம். தமிழ் என்ன தமிழ்? பணம்தான் முக்கியம் என்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். 83யூலை மாதத்திற்கு முன்னர் கொழும்பில் தமிழர் பொருளாதாரம் நன்றாக முன்னேறியிருந்தது. வெளிநாடுகளில் இருந்த தமிழர்கள் பலர் நாடு திரும்பத் திட்டம் போட்டு இருந்தார்கள். ஆனால் நடந்தது என்ன? தமிழ் மக்களின் பொருளாதார கேந்திர மையங்கள் அடித்து நொருக்கப்பட்டன. அந்த யூலை மாதத்தில். தமிழர்கள் பொருளாதார விருத்தி அடைகின்றார்கள் என்று கண்டவுடன் அதனைப் பறிக்கவோ பறிமுதல் செய்யவோ ஒரு சாரார் இருந்தே தீருவர். எனவே எம்மை நாம் பாதுகாத்துக் கொள்வது முக்கியமானது ஒன்று. வெள்ளம் வராது இருக்க அணைபோடுவது அவசியம். இது மிகவும் முக்கியமானது ஒன்று. எம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்றால் எமது தாயகப் பிராந்தியங்களில் எமக்கு சமஷ்டி முறையிலான ஒரு தீர்வு வேண்டும்.

ஏன் சமஷ்டி? ஒற்றையாட்சி போதுமே என்கின்றார்கள் சிங்கள அரசியல்வாதிகள். எம்முள் சிலரும் இதனைக் கூறுகின்றார்கள். ஆனால் ஒற்றையாட்சியை சிங்களத் தலைவர்கள் கேட்பதற்கு காரணம் உண்டு. பிரித்தானியர் நாட்டை 1833 ஆம் ஆண்டு ஒன்றிணைத்து ஒற்றையாட்சியை உண்டு பண்ணியவுடன் முழு அதிகாரமும் பிரித்தானியவைச் சென்றடைந்தது. எமக்குச் சுதந்திரம் வழங்கியபோது ஒரு சமஷ்டி அரசியல் வாய்ப்பைத் தந்துவிட்டு சென்றிருக்க வேண்டும். ஆனால் பிரித்தானியர் ஒற்றையாட்சியை எமக்கு வழங்கி விட்டுச் சென்று விட்டார்கள். இந்த ஒற்றையாட்சி முறையே முழுநாட்டின் மீதான முழு அதிகாரங்களையும் சிங்கள அரசியல் தலைவர்கள் தம் வசம் எடுத்துக் கொள்ள உதவி புரிந்தது. 29ஆவது சரத்து அரசியல் யாப்பில் இருந்தும் கூட, 56ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப் பட்டது என்றால், ஒற்யைாட்சி அதிகாரம் கொண்ட பெரும்பான்மையின மக்களை தடுக்க எம்மால் முடியவில்லை.

ஆங்கிலேயர் சமஷ்டி அரசியல் யாப்பைத் தந்து விட்டுச் சென்றிருந்தார்களேயானால் வடக்கையும் கிழக்கையும் பாதிக்கும் வண்ணம் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வர முடியாமல் போயிருக்கும். நாடு சுதந்திரமடைந்த காலத்தில் எமது நாட்டின் ஆளுனர் நாயகமாக இருந்தவர் சோல்பரிப் பிரபு. ஒற்றையாட்சியை நாட்டுக்குக் கையளித்த அவரே, 1958ஆம் ஆண்டுக் கலவரங்களின் பின்னர் "இவ்வாறு நடக்கும் என்று தெரிந்திருந்தால் நான் ஒன்றையாட்சியை வழங்க இடமளித் திருக்க மாட்டடேன் என்று B.H. Farwer நூலாசிரியருக்குக் கூறியிருந்தார். ஆகவே நாங்கள் கிடைப்பதைக் கிடைக்கட்டும் என்ற மனோநிலையில் ஒற்றையாட்சிக்கு ஒப்புதல் வழங்கினால் எமது கதை அதோகதிதான் என்று ஆகிவிடும். சமஷ்டி என்பது ஏதோ தமிழரசுக் கட்சிக்கு உரித்தான பொறிமுறை என்ற கருத்து பல சிங்கள சகோதரர்களிடமும் சில தமிழ் சகோதரர்களிடம் நிலவி வருவதைக் காண்கின்றோம். சமஷ்டி என்றவுடன் தமிழ்க் கட்சிகள் முன்னர் இது செய்தார்கள் அது செய்தார்கள் புலிகளை வளர்த்தார்கள் என்றெல்லாம் கூறுகின்றார்கள் சமஷ்டி என்பது தமிழரசுக் கட்சிக்கு உரித்தான கருத்தன்று. பல்லின மக்களைக் கொண்ட கனடா இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது என்றால், அதன் சமஷ்டி முறையிலான அரசியல் பொறிமுறையே காரணம். சிங்கள மக்கள் மனதில் சமஷ்டி என்ற சொல்லுக்குப் பிரிவினை என்ற கருத்தைக் கொடுத் துள்ளார்கள். சிங்கள அரசியல்வாதிகள் ஒருவேளை தமிழரசுக் கட்சி என்று பெயர் வைக்காமல் சமஷ்டிக் கட்சி என்று பெயர் வைத்திருந்தால் இவ்வாறான பிழையான வியாக்கியானத்தைத் தடுத்திருக்க முடிந்திருக்குமோ நானறியேன். சமஷ்டி நாட்டை ஒற்றுமைப்படுத்தும் பிரிக்க உதவி புரியாது என்ற உண்மையை அறிந்தும் கூட சிங்கள அரசியல் தலைவர்கள் சமஷ்டி என்றால் பிரிவினை என்ற கருத்தை திரும்பத் திரும்பக் கூறி வருகின்றார்கள். ஒரே நாட்டுக்குள் சில பிராந்தியங்களுக்கு சுயாட்சி வழங்குவது பிரிவினையாகாது. ஒற்றுமையில் பன்மைத்துவத்தை வழங்குவதே சமஷ்டி. ஆகவே சமஷ்டி அரசியல் பொறிமுறையும் வட கிழக்கு இணைப்பும் தமிழ் மக்களைப் பொறுத்த வரை பேரம் பேச முடியாத அடிப்படைக் கோரிக்கைகள் என்பதை நாங்கள் மறக்கக் கூடாது. எங்கள் பாரம்பரிய இடங்கள் பறிபோகாமல் இருக்க வேண்டுமானால் வடக்கு கிழக்கு இணைப்பு அவசியம்.

சகல அதிகாரங்களையும் கொண்டிருக்கும் மத்திய அரசாங்கம் தனது அதிகாரங்களில் சிலவற்றைத் தமது முகவர்களுக்கு வழங்குவது வேறு, 'decentralization' என்ற முறையிலான பரவலாக்கம் என்பது வேறு. பரவலாக்கம் (devolution) செய்து அதிகாரங்கள் எமக்குத் தரப்பட்டுவிட்டால் தான் தோன்றித்தனமாக அவற்றை மத்திய அரசாங்கம் திரும்பப் பெறமுடியாது. முகவர்களுக்குக் கையளிப்பதை எந்தத் தருணத்திலும் அவர்கள் மீளப் பெறலாம். இவற்றை எல்லாம் எமது மக்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய தருணம் தற்பொழுது பிறந்துள்ளது. வேறெப்போதும் இல்லாத

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)



# மக்களின் மனநிலையை பிரதிபலித்திருக்கிறேன்

## – தமிழக முதல்வர் ஓ. பன்னீர்செல்வம்

-சிவதாணு -

ஜல்லிக்கட்டுப் போராட்டம் தாக்கம் தணிவதற்குள், பன்னீர்செல்வம் கிளர்ச்சி அடுத்த பேரலையை தமிழகத்தில் உண்டு பண்ணியிருக்கிறது. தமிழக பொறுப்பு முதல்வரின் 40 நிமிடங்கள் தியானங்களுக்குப் பின்னர் தற்போது தமிழகத்தில் நிகழ்ந்து வருபவை ஓ. பன்னீர்செல்வம், வி.கே. சசிகலா மற்றும் அதிமுக கட்சியின் தலையெழுத்தை மட்டுமல்ல, தமிழ் நாட்டின் தலையெழுத்தையும் மாற்றி எழுதப் போகிறவை. அதன் முதல் அறிகுறி, தமிழ்நாட்டின் ஊடகக்காரர்களுக்கு, “திரு. பன்னீர் செல்வம்;” என்று பெயர் சொல்லி கேள்வி கேட்க, நள்ளிரவிலும் அதிகாலையிலும் தொலைபேசியில் அழைத்துப் பேச, முதன்முறையாக ஓர் எளிய முதல்வர் கிடைத்திருக்கிறார்.

சென்னை பசுமை வழிச் சாலையில் உள்ள தமிழக முதல்வர் இல்லத்தில் தொண்டர்கள், கட்சி நிர்வாகிகள், முன்னாள் மற்றும் இந்நாள் சட்டப் பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆரவார மான ஆதரவுக்கு இடையே, நெகிழ்ச்சியோடு இருந்த திரு. பன்னீர் செல்வத்தைச் சந்தித்தோம்.

திடீரென ஒருநாள் ஊர் தூங்கப்போகும் நேரத்தில், உங்கள் இயல்புக்கு மாறாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவிடம் சென்று, நாற்பது நிமிடங்கள் தொடர்ந்து தியானம் இருந்தீர்கள், எதற்காக?

அதற்கு முன்பே சில வாரங்களாகவே என் மனதில் தேக்கி வைத்திருக்கின்ற ஆதங்கம் என்னை குழப்பிக் கொண்டிருந்தது. ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த என் போன்ற லட்சக்கணக்கான தொண்டர்களுக்குக் கட்சியில் பதவி கொடுத்து வளர்த்தவர் மாண்புமிகு அம்மா ஜெயலலிதா. அவருடைய திரு நாமத்தை எங்கள் வாழ்நாள் முழுவதும் சொல்லிக்கொண்டு பணிபுரியும் பாக்கியத்தை அவர் எனக்குக் கொடுத்திருக்கிறார். அதனால்தான் மனதில் தேக்கி வைத்திருந்த குழப்பங்களுக்குத் தீர்வு காண, பிரார்த்தனை செய்வதற்காக அவருடைய நினைவிடத்திற்குச் சென்றேன்.

அப்பொழுது அம்மா பல சவால்களை எதிர்கொண்டு வாழ்ந்த காலங்கள், கோர்வையாக என் மனதில் ஓடியது. கண் திறந்தேன். பல பத்திரிகையாளர்கள் என் முன்னே இருந்தார்கள். மனதில் தோன்றியதை அவர்களிடம் மறைக்காமல் சொன்னேன்.

பத்திரிகையாளர்களை சந்தித்து உண்மைகளைச் சொல்ல வேண்டும் என்ற முடிவை ஏற்கெனவே எடுத்திருந்தீர் களா? அந்த வெடிப்புக்குப் பின்னர் தற்போது நிகழும் அரசியல் மாற்றங்களை நீங்கள் எதிர்



பார்த்தீர்களா?

நிச்சயமாக இல்லை. என்னை நெருக்கமாக அறிந்தவர்களுக்கு என் சுபாவம் தெரியும். யாருடைய மனதையும் புண்படுத்தும் விதமாக நான் இதுவரையிலும் பேசியதே இல்லை. ஆனால், சிலர் என்னை நேரடியாகவும் மறைமுகமாகவும் விமர்சித்துக் கொண்டிருந்தார்கள். பொறுமையாகவும் கட்டுப்பாடாகவும் இருந்தேன். ஒருகட்டத்தில் மனதில் தேக்கி வைக்க முடியாத வேதனைகள் தொல்லை செய்யவே அம்மா நினைவிடத்திற்குச் சென்றேன். அங்கே கூடியிருந்த பத்திரிகையாளர்களிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். இது முன்னதாகவே எடுக்கப்பட்ட முடிவல்ல. அம்மா அவர்களின் ஆன்மா என் வாயிலாக சொல்லியதாகத் தான் உணர்கிறேன்.

முதல்வர் பதவியை ராஜினாமா செய்தது உங்களுக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தியதா?

மாண்புமிகு அம்மா மறைந்ததும் என்னை முதல்வராக அவர்கள்தான் தேர்வு செய்தார்கள். அப்போது நான் எவ்வளவோ மறுத்தேன். இல்லையென்று அவர்களை சொல்லச் சொல்லுங்கள் பார்க்கலாம். ‘கட்சியைக் காப்பாற்ற நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும். அம்மா இரு முறை உங்களைத்தான் முதல்வராக் கினார் என்பதால், உங்களை அல்லாமல் வேறு ஒருவரைச் சொன்னால் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்’ என்று அவர்கள்

தொடர்ச்சி 25ஆம் பக்கம்)



## யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

## (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)


- கனி -
416.261.1348
ptons@hotmail.ca



சென்ற தடவை பிக்பாங் ஒருமம் பற்றிய விளக்கத்தினைக் கண்டு கொண்டோம். இனி அதிலிருந்து தொடருவோம்.

### 2. பிக்பாங் பெருவெடிப்பா? அன்றேல் பேரொலியா?

பலரையும் சிக்கலுக்குள்ளாக்கும் ஒரு கேள்விதான் இது. இக்கேள்விக்கான பதில் சிக்கலானதுதான். சிலர் இதனைப் பெரு வெடிப்பு என்கிறார்கள். வேறு சிலரோ, இது ஒரு வலிமையான நிகழ்வு என்கிறார் கள். எப்படியிருப்பினும் அங்கு ஒரு பேரொலி எழுந்தது என்னவோ உண்மை யாக உள்ளது. இன்றும் அவ்வொலி பேரண்டம் எங்கிலும் ஒலித்துக் கொண்டு தான் இருக்கின்றது என்பதனை ஆய்வாள ர்கள் உறுதிப்படுத்துகிறார்கள். 72 கோடி-யேகோடி நிமிடங்களின் முன்னராக ஏற் பட்ட ஒலியல்லவா, இப்போது வலிமை குறைந்து மென்மையாக ஒலித்துக் கொண்டு இருக்கின்றது. அவ்வொலியி னைப் பெரிதாக்கி டிஸ்கவரி சனலில் போட்டார்கள். கேட்டபோது ஆச்சரியமாக இருந்தது. எனது ஞானத்திற்கு, அவ்வொலி சரியாக 'ஓம்' என ஒலிப்பது போலவே கேட்டது. அந்நேரத்தில் 'ஓம்' எனும் மந்தி ரத்துடன் தான் எல்லாமே ஆரம்பம் ஆனது, கூறுவது ஞாபகத்தில் வந்தது. 'ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனோடு இருந்தது, அந்த வார்த்தை தேவனாக இருந்தது' என்ற வாசகங்கள் விவிலியத்தின் யோவா னின் புத்தகத்தின் ஆரம்ப வசனங்க ளையும் - அவ்வொலி எனக்கு நினைவிற் குக் கொண்டு வந்தது. அவற்றினைத் தானா இந்த விஞ்ஞானிகள் உறுதிப் படுத்துகிறார்களோ என்ற எண்ணமும் எனது மனதிலே ஒரு கீறலாக ஓடியது. இவ்வொலி சம்பந்தமாக ஒரு சுவை-யான சம்பவமும் எனது அனுபவத்தில் உண்டு. அதனையும் பகிர்ந்து கொள்கி றேன். ஒரு தடவை பிக்பாங் பற்றி நண்பர் ஒருவருடன் உரையாடிக் கொண்டு இருந் தேன். அவ்வேளையில் டிஸ்கவரிச் சனலில் நான் கேட்ட ஓம் ஒலியினைப் பற்றிக் குறிப் பிட்டேன். அவரால் இதனை நம்ப முடியவி ல்லை. அவரது நம்பிக்கையின்மை மதங்க ளின் அடிப்படையிலானதாக இருக்க வில்லை. உண்மையைக் கண்டறியும் மனப்பாங்கில் அமைந்திருந்தது. என்னை விடவும் வயதில் இளையவரான அவர், இதனை நான் வலையத்தில் தேடிப் பாரக்கிறேன் எனக் கூறினார். மறுநாள் வந்து 'அண்ணை நீங்கள் சொன்னது




சரிதான். வலையத்திற் தேடி, அவ்வொலியி னைக் கேட்டேன். பிக்பாங்கின் சத்தத்தைத் தந்திருந்தார்கள். ஆனால் அது மெல்லிய, 'ஹம்' பண்ணுகிற ஒலி போன்றுதானே இருந்தது'. என்றார். அவருக்கு நான் 'ஓம்' ஒலி எவ்விதம் ஒலிக்கும் என்பதனை எனது இயல்புக்கு ஏற்ப ஒலித்துக் காட்டிய வேளை, இந்த மாதிரித்தான் அந்த ஹம்மி ங்கும் இருந்தது என ஆச்சரியமாகக் கூறி னார். இந்த விடயத்தை அத்துடன் அவர் விட்டுவிடவில்லை. அதனை விஞ்ஞானிக-ளின் சாதனையாகக் கூறி, சந்தர்ப்பங்கள் வரும்போதும், நினைவிற்கு வரும் பொழு-துகளிலும் தனது நண்பர் களுக்கு இப்பொ ழுதும் கூறிக் கொள்வார்.

சரி, விடயத்திற்கு வருவோம். 'Bang' என்பது வெடிப்பின் ஒலியாகக் கருதப்ப டுவது இல்லை. கதவுகளை வேகமாக மூடும் வேளைகளில் எழுகின்ற ஒலியா கவே கூறுவார்கள். வெடிக்கையில் எழுகி ன்ற ஒலியினைப் பொதுவாக 'படீர்' எனத் தான் குறிப்பிடுவார்கள். எனவே பிக் பாங்கினை வெடிப்பு என்பதற்குப் பதிலாகப் பெரும் வெளிப்பாகக் கருதுவதுதான் பொருத்தமாக இருக்கும். பிக்பாங்கின் போது ஒருமம் வெடித்துச் சிதறிப் பேரண்ட மாக விரிவடையத் தொடங்கி விரிவடைந்து கொண்டே செல்கின்றது எனச் சிலர் கூறுவார்கள். இங்கு சிக்கலான சில கேள்விகள் எழுகின்றன. அந்த வெடிப்பி னால், ஒருமத்தினுள் இருந்து பேரண்டம் வெளிப்பட்டதா? அப்படி வெளிப்பட்ட பேரண்டம் எதனுள் விரிவடைகிறது? ஒரு மத்தின் உள்ளே இருந்தவைதான் வெளியே சிந்தி, அவை பரந்து கொண்டு போகின்ற னவா? இவ்விரண்டு கேள்விகளுக்கும் பொருத்தமான பதில்களைப் பெற முடியாது இருக்கின்றது. ஆனாலும் பிக் பாங் என்பது பெருவெடிப்பு என்ற சிந்தனை எவ்விதம் எழுந்திருக்கலாம் என்பது புரிந்து கொள் ளக் கூடியதுதான்.

ஜெமற்ற முதன்முதலில் பிக்பாங்கை விபரிக்கையில் பின்வருமாறு விபரித்தார். 'பேரண்டம் தோன்றியபோது, அதாவது பிக் பாங்கின்போது அது பெரிய இரைச்சலோடு தோன்றியது. அத்துடன் பெரிய வான வேடிக்கை போன்ற நிகழ்வு ஏற்பட்டது. எங்கும் வெளிச்சத் தீற்றல்கள் பரவின. எந்தவொரு வான வேடிக்கையும் அதற்கு நிகரானது இல்லை.' என்பது அவரது பிக் பாங் பற்றிய விபரிப்பாக இருந்தது. ஜெமற்ற விபரித்த அந்தப் பேரிரைச்சல் தான் பின்னர் பிக்பாங் எனப் பெயர் பெற்றது. பேரிரைச்சலுடன் வான வேடிக் கையான நிகழ்வு உண்டாகி இருந்தது என்ற விபரிப்பே, பிக்பாங் என்பது ஒரு வெடிப்பு என்ற எண்ணப் பாட்டைத் தோற் றுவித்து இருக்க வேண்டும். மேலெழுந்த வாரியாகப் பார்க் கையில் இது சரியானது போலத்தான் இருப்பினும் பல நெருடல்க ளுடன்தான் இந்த வெடிப்பு என்ற பதம் காணப்படுகி றது. அவை பற்றித் தெரிந்து கொள்வோம்.

எங்களது பேரண்டம் தனது இடத்தைப் பெருப்பித்துக் கொண்டு போவதினால், விரி வடைகின்றது என்கின்றோம். அது எதனுள் விரிவடைகின்றது? பொதுவாக நாங்கள் விரிவினைக் கருதும்போது, வெளி ஒன்றி னுள்ளே விரிவடைவதையே கருதுவோம். பூதி ஒன்று காற்று உள்ளே செல்கையில் அது விரிவடைவதை எடுத்துக் காட்டாகப் பார்க்கலாம்.


> உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான வி'யங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பேரண்டமும் அப்படித் தனக்கு வெளியிலே உள்ள ஏதோ ஒரு வெளியிலேதான் விரி-வடைகிறதா? என்ற கேள்வியே, கேள்விக் குறியான ஒன்று. இந்த விரிவு என்பது பூச்சியம் என நாங்கள் முன்னர் கருதிய ஒருமத்தினுள்ளே தான் ஏற்படுகின்றது எனக் கருத வேண்டியுள்ளது. பூச்சியத்துக் குள்ளே அப்படி என்னதான் விரிவடைய முடியும்? பூச்சியத்துக்குள்ளே விரிவா அல்லது அந்தப் பூச்சியமே எங்கேயோ விரிகிறதா? 'பூச்சியத்துக்குள்ளே ஒரு இராச்சியத்தை ஆண்டு கொண்டு புரி யாமலே இருப்பான் ஒருவன். அவனைப் புரிந்து கொண்டால் அவன்தான் இறைவன்' என்ற பாடல் நினைவிற்கு வருகிறது.


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS • SKIN PROBLEM • RESPIRATORY PROBLEMS • DIGESTIVE PROBLEMS • VARICOSE VEINS • BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM • TREAT WITH MASSAGE THERAP • ALLERGIES • SEXUAL PROBLEMS • SEXUAL PROBLEMS • CHOLESTEROL • TUMOR • FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Gout | Diabetes | Stumatitis |
| Flu | Arthritis | Cystitis | Colitis |
| Depression | P.M.S | Cancer | |
| Anxiety | Leucorrhea | Prostatitis | |
| Asthma | Migraines | Obesity | |
| Tonsillitis | Hair Loss | Hemorrhoids | |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



யோகா சோதிடம்
- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# மனித உடலின் வர்மங்களும் மர்மங்களும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்




C - 416.617.5721
H - 416.289.2033 after 7:00pm

'மனித உடலானது மனம், புத்தி, அகங்காரம், கோபம், தாபம், விர்யம் இவற்றிற்குக் கட்டுப்பட்டு இயங்குகிறது. கோபப்படும்போது உடலானது சீற்றமடை-கிறது. உடல் சீற்றமடையும்போது இரத்த நாளங்கள் வேகமாக இயங்குகின்றன. இதனால் இதய படபடப்பு, நரம்புத்தளர்ச்சி போன்றவை உருவாகிறது.'

மனித உடலில் மர்மமாக ஒடுங்கி உயிர் மூச்சு முடிச்சுக்களாக அமைந்து உடலுக்கு ஆரோக்கியத்தைத் தந்து கொண்டிருப்பது தான் வர்மப்புள்ளிகள் (Pressure points). ஒவ்வொரு வர்மப் புள்ளிகளும் சக்தி வாய்ந்த உடலினை இயங்குகின்ற வேலையைச் செய்து கொண்டிருக்கின்றது என்பது சித்தர்களின் வாக்கு. அது உண்மையும் கூட. அனுபவரீதியாகக் கண்டறிந்த உண்மை. வர்மப்புள்ளி களுக்கும் உடலுக்கும் நேரடித்தொடர்பு இருப்பது போல் மேலே சொன்ன கோப தாபங்களுக்கும் செயல் பாடுகளுக்கும் வர்மப் புள்ளிகளுக்கும் சம்மந்தம் உண்டு. எனவே நாம் இதிலிருந்து தெரிந்து கொள்வது என்னவெனில் கோபப்படும்போதும், கவலைப்படும்போதும் வர்மப்புள்ளிகளில் தாக்கம் ஏற்படுகின்றது. அதனால்தான் கோபத்தையும், வேகத்தையும் தவிர்க்க வேண்டுமென்று முன்னோர்கள் சொல்லிச் சென்றுள்ளனர்.

கோபப்படும்போது இதயம் படபடத்து நரம்புகள் தளர்ந்து, பித்தம் அதிகரித்து விடுகிறது. ஒரு சிலருக்கு இரத்த அழுத்தம் குறைந்து விடுகிறது. இந்த இரண்டிற்கும் காரணம் உடற்கூற்றில் மாற்றம் ஏற்பட்டு உடலை இயக்குகின்ற வர்மப் புள்ளிகளில் தாக்கம் ஏற்படுவதால் தான்.

இதிலிருந்து தெரிந்து கொள்வது என்னவெனில் கோபம் ஏற்படும்போது மனம் பேதலிக்கின்றது. நரம்பு நாளங்கள் அதிக வேகமாக செயல்படுகின்றன. ஆகையால் நரம்பு நாளங்களையும் உயிர் மூச்சையும் இயக்குகின்ற வர்மப்புள்ளிகள் பாதிப்படைவ-தால் தான் இந்த மாற்றங்கள் ஏற்படுகின்றது. எனவேதான் இத்தகைய பாதிப்பு ஏற்படாதிருக்க மனத்தை தினமும் சற்று நேரமாவது தியானப் பயிற்சி (Meditation) செய்து மனத்தினை அமைதியாக வைத்திருக்க வேண்டுமென சான்றோர்கள் சொல்கின்றனர்.

இவ்வாறு பலவிதமாக வர்மப்புள்ளிகள் பாதிப்புள்ளாகும் போது அவரவர் உடலின் தன்மையைப்பொறுத்து நோய்கள் உருவாகின்றன. எனவே நோய்களுக்கும் வர்மப் புள்ளிகளுக்கும் தொடர்பு இருப்பதை உணர வேண்டும். சித்த மருத்துவப்படி மனிதனை நோயிலிருந்து காப்பாற்ற வர்மப் புள்ளிகளைத் தெரிந்து அதற்கு வேண்டிய சிகிச்சை முறைகள் அளிக்கப்படுகிறன. அதனை வர்மசிகிச்சை என்று அழைப்பர். நோய்களையும் அதன் தன்மையையும் தெரிந்து கொள்வதற்கும் வர்மப்புள்ளிகளின் இயக்கம்பற்றித் தெரிந்திருக்க வேண்டும். எந்த நோய் எந்த விதத்தில் வந்திருக்கும் என்பதை அதோடு தொடர்புடைய வர்மப் புள்ளிகளின் தாக்கத்திலிருந்து அந்த நோயின் விபரங்களை அறிந்து கெள்ள முடியும்.

ஒரு வர்மக்கலை நிபுணரால் உடலிலுள்ள வர்மப் புள்ளிகளின் இயக்கங்களைத் தெரிந்து ஒரு குறிப்பிட்ட நோய் வருவதற்குக் காரணமான, அதனோடு தொடர்புடைய வர்மப்புள்ளியின் பாதிப்பை கண்டறிந்து அதனை கைகளால் முறைப்படி இயக்குவதன் மூலம் அந்த நோயை எந்தவித மருந்து வகைகளின் உதவியின்றி குணமாக்க முடியும்.

உதாரணமாக தோள்பட்டைவலியை எடுத்துக் கொண்டால் முதலில் அது வருவதற்குரிய மூலகாரணத்தை தெரிந்து கொள்ள வேண்டும். உடலிலுள்ள வாத, பித்த நீரானது சிரசை அடைந்து, பின் அது கீழிறங்கி தோள்மூட்டுப் பகுதியை வந்தடைந்து நாளடைவில் இறுக்கமடைந்து தோள்பட்டையைப் பற்றிக் கொள்கிறது. இதனால் தோள்பகுதியை அசைக்கவோ திருப்பவோ முடியாது போய்விடுகிறது. இதனைக் குணமாக்க பலநாள் முயன்றும் முழுமையான பலன் கிடைக்காது பலர் அவதிப்படுகின்றனர். இந்த நிலையின் பாதிப்புக்குள்ளான தோள்பட்டையிலுள்ள 12 வர்மப்புள்ளிகளை சில தைலங்களின் உதவியுடன் கைகளால் பொருத்தமான அளவு விசையைப் பாவித்து அழுத்தம் கொடுத்து வர ஒரு சில நாட்களில் வலி குணமாகும்.

இதுபோலத்தான் ஒவ்வொரு நோய்க்கும் வர்ம மருத்துவத்தை செயல்படுத்த வேண்டும். இதில் தொடுவர்மம் 92 புள்ளிகள், படுவர்மம் 16 புள்ளிகள் இந்த 108 புள்ளிகளில் மனிதருக்கு வரும் 4,448 நோய்களும் அடங்கிவிடுகின்றன. ஒரு நோய் வந்து அதைக் குணமடையச் செய்ய கடுமையான முயற்சிகள் அனைத்தையும் செய்வதைவிட நோய் என்பதே பெரும்பாலும் அணுகாமலிருக்கச் செய்யும் வழிமுறைகள் மிகவும் சுலபமானவை. இதைத்தான் சித்த மருத்துவத்தில் 'ஆசனம் பாதி ஆகாரம் பாதி' என்பர்.

நாளாந்த வாழ்க்கையில் குறைந்தது காலையிலோ, மாலையிலோ யோகாசனம், பிராணாயாமம், தியானம் போன்றவற்றை அரைமணி நேரமாவது பயிற்சி செய்ய வேண்டும். அது மட்டுமன்றி அவரவது உடலுக்குத் தகுந்தவாறு உணவுத்திட்டத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். இவற்றையும் தாண்டி மலச்சிக்கலையும், மன இறுக்கத்தையும் இல்லாமல் செய்யும்போது பிறந்த பலனை அடைந்து நீண்டநாள் இனிதே வாழலாம்.

புதிய குடிவரவாளர் பெண்கள் வள நிலையம்
வழங்கும்
சர்வதேச மகளிர் தின கொண்டாட்டம்



Newcomer Women Resource Centre
Presents
International Women's Day Celebration

எதை எதிர்பார்க்க வேண்டும்:
சிறப்பு காட்சியளிப்பு: புதிய குடிவரவாளர் பெண்ணின் வெற்றி அடைந்த கதை
முழு குடும்பத்திற்கு தேவையான செயல் பாடுகள்: மருதாணி பச்சை, விலங்கு பலூன், கலை மற்றும் கைவினை, முக ஓவியம், உடனடி புகை படம் எடுக்கும் சாவடி அத்துடன் 3D Doodley கலை பட்டறை.
நடன நிகழ்ச்சி மற்றும் பாடமும்: பாலிவுட் மற்றும் மேள நடனம்
தொண்டர் சேவை வாய்ப்புகள் மற்றும் விருதுவழங்கும் விழாக்கள்.
அதிர்ஷ்ட சீட்டு குலுக்கல்.

திகதி: சனிக்கிழமை, மார்ச் 04,2017
நேரம்:10:30am to 2:30pm
இடம்: 7220 Kennedy Road, Unit 5 & 8
பதிவுக்கும் விளக்கம் அறிவதற்கும் அழையுங்கள்:
905-479-7926/905-415-9763

நீங்கள் உங்கள் PR அட்டை / லாண்டிங் பத்திரத்துடன் பதிவு செய்யும் போது ஒரு இலவச பரிசை பெறுவீர்கள்.
அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் மதிய உணவு வழங்கப்படும்
19 மாதம் முதல் 12 வதிற்கு உள்பட்ட குழந்தைபராமரிப்பு சேவை பங்கேற்கும் தகுதியுடையவர்களுக்கு வழங்கப்படும்.

What to Expect:
Special Presentation: Newcomer Women Success Stories.
Activities for the Whole Family: Henna, Balloon Animals, Arts and Crafts, Face Painting, Instant picture Booth & 3D Doodley Art Workshop

Dance Presentation and Lesson: Bollywood and Drum Dance.

Volunteer Opportunities, Award Ceremony and Lucky Draw

Date: Saturday, March 4th, 2017
Time: 10:30am to 2:30pm
Location: 7220 Kennedy Road, Unit 5&8
For enquiry & Registration Call:
905-479-7926/905-415-9763

- Receive a free gift when you register your PR card/ Landing paper
- Light lunch will be provided for all participants.
- Child care services\ is available for eligible participants who have children aged 19 months - 12 years old.

CICS

Immigration, Refugees and Citizenship Canada | Immigration, Réfugiés et Citoyenneté Canada

# கனடாவில் முதியோருக்கான..

13ஆம் பக்கத்தொடர்ச்சி

895, Donmills Road, Suite 600
Toronto ON M3C 1W3
Phone 1-800-581-3794

### 7. முதியவர்களுக்கு இலவசமாக மருந்துகள் பெறும் வசதிகள்
(Seniors Co-payment drug program)

கனடாவில் மாகாணத்திற்கு மாகாணம் வித்தியாசமான ஒழுங்கு விதிகளுடன் இம்மருந்துகள் வாங்கும் வசதிகள் நடைமுறைப்படுத்துகின்றது.

ஒன்ராரியோ மாகாணத்தில் 65 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கான வருட தேறிய வருமானம் என்பது தனி நபராக இருந்தால் $19,300 க்குக் குறைவாக மற்றும் தம்பதிகளாக இருந்தால் அவர்களின் கூட்டான தேறிய வருமானம் $32,200 க்குக் குறைவாக இருந்தால் இலவச மருந்துகள் வாங்குவதற்கு தகுதியுடையவர்கள் ஆவார்கள். ஒவ்வொரு மருந்துச் சீட்டுக்கும் $2 டொலர் மட்டும் இவர்கள் செலுத்த வேண்டும். மேலதிக செலவினை அரசு பொறுப்பேற்கும். விண்ணப்பம் அனுப்பி இத்திட்டத்திற்குப் பதிவு செய்யும் இடம்:
Ontario Drug Benefit Program

Ministry of Health & Long Term Care
P.O Box 384, Station - D
Etobicoke ON M9A 4X3
Phone - 1-888-405-0405

### 8. முதியவர்களுக்கு இலவசமாக உதவும் சட்ட உதவி மையம்
(ACE: Advocacy Centre for the Elderly)

வருமானம் குறைந்த முதியவர்களுக்கு தேவைப்படும் சட்ட உதவிகளுக்காக இலவசமாக கை கொடுத்து உதவும் நிறுவனமாக, பலசட்டத்தரணிகள், சட்ட உதவியாளர்களை மையமாக கொண்ட இந்நிறுவனம் ரொறொன்ரோவில் இயங்கி வருகின்றது.

அதன் முகவரி இதுவேயாகும்
ACE - Advocacy centre for the Elderly
02, Carlton Street, Suite 701
Toronto ON M5B 1J3
Phone - 416-598-2656
இணையதளம் - www.acelaw.ca

மாகாண அரசின் ஆதரவோடு 60 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கு கைகொடுக்கும் இந் நிறுவனத்தில் சேவைகள் பெற விரும்புவோர் ரொறொன்ரோ நகரம் மற்றும் அண்மித்த நகரங்களில் வாழ்பவராகவும், வருமானம் குறைந்த நிலை என்பது நிறுவனத்தின் வரைவிலக்கணத்தினுள் உட்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

### 9. முதியோருக்கான இலவச பற் சிகிச்சைகள்

நகர சபைகளின் பொதுமக்கள் மருத்துவத் துறையினர் அனேகமாக இந்தப் பணிகளை செய்து வருகின்றனர். ரொறொன்ரோ பொது மக்கள் மருத்துவப் பிரிவினர் (Toronto Public Health) இலவச பற்சிகிச்சை சேவைகளை 17 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கும், 65 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கும் ஒரு வரையறைவரை செய்து வருகின்றனர்.

ரொறொன்ரோ நகரில் சுமார் 23 இலவச பற் சிகிச்சை நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஸ்காபரோவில் இயங்கி வரும் நிலையம்:
Scarborough Civic Centre
160, Borough Drive
Toronto, ON M1P 4N8
Phone - 416-338-7442

இதேபோல ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தின் பல் வைத்திய பீடமும் இதே பணியினை செய்து வருகின்றது. அவர்களின் விபரம் பின்வருமாறு:
Faculty of Dentistry University of Toronto
101, Elm St. Toronto, ON
Phone 416-979-4927

### 10. முதியோருக்கான விலைக் கழிவுகள் (Discounts for Seniors)

முதியோருக்குப் பல இடங்களில் ஏராளமான சந்தர்ப்பங்களில் விலைக் கழிவுகளை கனடாவில் வழங்குவது வழமையாகும். அதில் சில பின்வருமாறு:

1. Retiree Discount for Auto Insurance: 65 வயதுக்கு மேற்பட்ட ஓய்வூதிய வருமானம் மட்டும் பெறுபவர் வாகனக் காப்புறுதியில் ஒரு விலைக் கழிவினைப் பெறலாம்.
2. Bank service charges
3. Restaurants
4. Mostly shopping complex

# முதலமைச்சர்.....

14ஆம் பக்கத்தொடர்ச்சி

அளவுக்கு சர்வதேசக் கரிசனை எம்மீது படர்ந்துள்ளது. காலம் கடந்தால் அவர்களின் கரிசனை வேறு திசைகளில் செல்லக் கூடும். இதையறிந்தே ஐக்கிய நாடுகள் சபையில் தாமதங்களை ஏற்படுத்த அரசாங்கம் முனைந்துள்ளது. ஜெனீவாவில் இலங்கைக்கு மீண்டும் காலக்கெடு கேட்க விருப்பதாகப் பேசப்பட்டு வருகின்றது. இதனால்தான் அரசியல் ரீதியான உங்கள் பிரதிநிதிகளை நாங்கள் இங்கு சந்தித்த போது எடுத்த நடவடிக்கைகள் பற்றி மட்டும் மேல் வாரியாகப் பார்க்காமல் அவற்றினால் என்ன நன்மைகள் கிடைத்துள்ளன, கிடைக்குமோ என்று ஆராய்ந்து பார்க்குமாறு வேண்டிக் கொண்டோம். உதாரணத்திற்கு காணாமற்போனோர் பற்றிய அலுவலகம் என்று ஒன்றை உருவாக்கினார்கள். அதனால் மக்களுக்கு என்ன நன்மை கிடைத்தது? அதற்குப் போதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டனவா போன்ற பல கேள்விகளுக்கும் பதில் காணுங்கள் என்று கூறியிருந்தோம். வெறுமனே பெயரளவில் குழுக்கள், அலுவலகங்கள் அமைத்து பின் அவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதுவித நன்மையும் கிடைக்காமல் போனால் அச்செயல் சர்வதேசங்களையே ஏமாற்றும் செயலாக அமைந்து விடும்.

இவற்றை எல்லாம் பற்றி உங்கள் மத்திய, மாகாண, மாநாகர சபை பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுடன் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எடுத்துக்கூறியுள்ளோம். அந்த விதத்தில் எமது வருகையைப் பயனுள்ளதாகவே நாங்கள் கணிக்கின்றோம். எம்மைக் காணவந்த எமது தமிழ்ச் சகோதர சகோதரிகளின் ஊக்கமும் உற்சாகமும் எமக்குப் புதிய உத்வேகத்தைக் கொடுத்துள்ளது. (devolution). பலவிதமான தனிப்பட்ட தேக அசௌகர்யங்களை எதிர்நோக்கிய நான் உங்கள் உற்சாகத்தின் காரணமாகப் புத்துணர்வு பெற்றுள்ளேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் இது சார்பாக எனது மனமார்ந்த என் நன்றியறிதல்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.




நான் தொடக்கத்தில் எமது தோல்விகள், குறைகள் என்ன என்பதை ஆராய்வதும் எமது கடமை என்று கூறினேன். அதனையும் குறிப்பிட்டு விடுகின்றேன். எமது மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும். நாம் ஒரு குரலாக இயங்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்திருந்தேன். அதனை ஏற்று ஏழு அமைப்புகள் ஒன்றிணைந்து ஒரு ஏற்பாட்டுக் குழுவை அமைத்து எனது பயணத்தை அப்பழுக்கற்ற வகையில் ஒழுங்கமைத்திருந்தார்கள். பலகாலமாக இங்கு இருந்து வரும் சகல குழுக்களையும் அவர்களின் பிரதிநிதிகளை அனுப்பி ஏற்பாட்டுக் குழுவின் கரங்களைப் பலமடையச் செய்யுமாறு வேண்டியிருந்தார்கள். ஆனால் சிலர் அந்த வேண்டுகோளைத் தட்டிக் கழித்துவிட்டார்கள். தன்னம்பிக்கைக்கும் ஆணவத்திற்கும் இடையில் இருக்கும் வேற்றுமையை பல இடங்களில் கூறியுள்ளேன். என்னால் மட்டுமே முடியும் என்பது தன்னம்பிக்கை. என்னால் மட்டும் முடியும் என்பது ஆணவம். சிலர் தம்மால் மட்டுமே முடியும் என்ற கருத்தை முன்னிறுத்த வந்துள்ளார்கள். அது ஆணவத்திற்கு ஒப்பானது. தமிழ் மக்களின் வாழ்வு மலர வேண்டுமானால் நாங்கள் ஆணவம் களையவேண்டும். மமதையை மறக்கவேண்டும். அன்பும் அரவணைப்புமே எம்மை ஒற்றுமைப்படுத்தும். பிரிந்து நிற்கும் அனைவரும் ஒன்று சேருங்கள் என்பதைவிட கனடா வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு என்னால் தரக்கூடிய வேறெந்த செய்தியும் கிடையாது.

உங்கள் ஒற்றுமையே எமது பலம். உங்கள் புரிந்துணர்வே எங்கள் புதிய வாழ்க்கைக்கு அத்திவாரம். உங்கள் தன்னலம் அற்ற சேவையே எமது தாயகத்தின் மேம்பாட்டுக்கு வழி அமைக்கும். அனைத்துத் தமிழ் மக்களுக்கும் இந்த வயோதிபன் கூறும் அறிவுரை இதுதான். நாங்கள் சேர்ந்திருந்தால் தான் எங்களுக்கு மதிப்பு. பிரிந்திருந்தால் பிறர் எம்மை பிளவுபடுத்தி விடுவார்கள். சென்றவை சென்றவையாக இருக்கட்டும்.

வேற்றுமைகள் இருந்தாலும் உங்கள் வேற்றுமைகளை மூட்டை கட்டிவிட்டு ஒருங்கிணைந்து செயற்படுங்கள். எவ்வாறு ஒரு வரை ஒருவர் எதிர்த்துவந்த ஐந்து கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று ஒருங்கிணைந்தனவோ அதே போன்று உலகளாவிய ரீதியாகவும் தமிழ் மக்களின் கூட்டமைப் பொன்று உருவாக வேண்டும். தமிழர்களை ஒன்றிணைத்தல் கடவுளாலும் முடியாது என்பது எனக்குத் தெரியும். ஆனால் சுனாமி வந்தபோது அரச படைகளும், விடுதலைப் புலிகளும் இரண்டு மூன்று நாட்களுக்கு சேர்ந்தே ஒற்றுமையாகப் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாகக் கடமையாற்றினார்கள், பின்னர் பிரிந்துவிட்டார்கள். அதேபோல் உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களின் சார்பில் குரல் கொடுக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பம் தற்போது எழுந்துள்ளது. போர்க் குற்ற விசாரணையைத் திடமாகச் சர்வதேச உள்ளீடுகளுடன் எடுத்துச்செல்லுமாறு இலங்கை அரசாங்கத்தை கட்டாயப்படுத்த வேண்டிய தருணம் உதித்துள்ளது. யாவரும் சேர்ந்து இது பற்றிக் குரல் கொடுக்க வேண்டும். நெருக்குதல் ஒன்றே சிங்கள அரசாங்கங்களை நீதிக்கும் நியாயத்திற்கும் செவிசாய்க்க வைத்திருக்கின்றன. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் தமது மக்களின் உரித்துக்களைப் பெற வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டார். அவர் அவ்வாறு நெருக்குதல்களைக் கொடுத்ததால்தான் அப்போதைய அரசாங்கங்கள் இசைந்து கொடுத்தன. நாம் எமது உரித்துக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால்

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# இதயபூர்வமாக வாழ்தல்

- ஞானா உருத்திரன் -

எமது நம்பிக்கைகளே எமது வாழ்க் கையை தீர்மானிக்கின்றன. எமது மனம் எப்பொழுதும் இயங்கிக்கொண்டிருக்கும். அதுகடந்த நினைவுகளை மீளவும் அசை போட்டுக்கொண்டே இருக்கும். சிலர் என்னிடம் கூறுவார்கள் அவர்களுடைய சிறுவயதில் நடந்த சம்பவங்கள் கூட அவர்களுக்கு நினைவில் இருக்கும் என்று. அவற்றில் கூட அதிக பாதிப்பை ஏற்படுத் திய விடயங்கள் அதிகமாகவும் பாதிப்பு குறைந்தவை குறைவாகவும் நினைவில் நிற்கும். மகிழ்ச்சியான சம்பவங்கள் என் றால் சிலவேளைகளில் நினைவில் வரும். அதிலும் எம்மைப்பற்றி ஒரு கருத்தை நாம் உருவாக்கி விட்டிருந்தோமானால் அதைச் சுற்றி நாம் ஒரு சக்தியை கொடுத்துக் கொண்டிருப்போம். உதாரணமாக நான் இப்படிப்பட்டவன் அல்லது இந்த இயல்புள் ளவன் என்ற எண்ணத்தை உருவாக்கி விட்டோமானால் அது இன்னும் பலம் பெற்றுக் கொண்டே யிருக்கும். ஆனாலும் என்னால் மாற முடியும் என்ற எண்ணத்தை நாம் அதற்கு வழங்க வேண்டும். ஒவ்வொரு மனிதரும் மற்றவர்களிடத்தில-ிருந்து மாறுபடுகின்ற னர். ஆனாலும் நாம் நம்புவது எமக்கு உண்மையாகிறது. அப்படி எம்மைப்பற்றி நாம் நம்புவதை எமது மூளை அப்படியே ஏற்றுக்கொள்ளும். சிலருக்கு மற்றவர்களுடன் பேசிவிட்டு வந்தால் கூட அந்த நினைவுகள் மீண்டும் வரும். மற்றவர்களுடைய எண்ணங்கள், செயல்கள் எம்மை அவ்வாறு பாதித்தி ருக்கும். சிறுவயது முதலே நாம் ஒரு வகையான நம்பிக்கையை கற்றுக்கொண் டிருப்போம். அது மற்றவர்கள் எம்முடன் நன்றாகப் பேசும் பொழுது அல்லது ஏதாவது உதவிகளை செய்யும் பொழுது அவர்கள் நல்லவர்கள் என்றும் அப்படி இல்லாத பொழுது கெட்டவர்கள் என்றும் எண்ணுவ தாகும். இப்படி நாம் வளர்க்கப் பட்டிருப் பதால் எமக்கு நன்மை செய்பவர் களைப் பற்றி நாம் அவர்கள் நல்லவர்கள் என்ற புரிதலில் நேர்மறையான உணர்வு களை உருவாக்குவோம். ஆனால் கெடுதல் செய்பவர்களைப் பற்றி எதிர்மறையான கோபம், ஆத்திரம் போன்ற உணர்வுகளைக் கொண்டிருப்போம்.

ஒருவர் எமக்கு ஏதாவது துன்பம் தருகின்றாரெனில் அவர் எமக்கு ஓர் ஆசி ரியராகின்றார் என்று ஆன்மீக பெரியவர் கள் கூறியிருக்கின்றார்கள். ஏனெனில் நாம் அவரிடமிருந்து ஏதோ ஒன்றை அறிகின் றோம். அது எமது பலவீனத்தை பற்றிய-தாகவோ அல்லது எவ்வாறாகவும் இருக்க லாம். உதாரணத்திற்கு ஒருவருடனான உரையாடலின்போது அவர் எம்மைப் பற்றி ஒரு தரக்குறைவான விமர்சனத்தை முன் வைத்தாரெனில் நாம் அதைப்பற்றி கோபப் படாமல் மனம் புண்படாமல் அவர் குறிப்பிட்ட அந்த விடயம் எம்மிடமிருக் கின்றதா என்பதையும் பார்க்க வேண்டும். பல சந்தர்ப்பங்களில் அப்படியான பல வீனங்கள் எம்மிடமிருப்பதுண்டு. ஆக நல்ல சம்பவங்களைப் போலவே துன்பமான சம்ப வங்களும் எமக்கு உதவியே செய்கின்றன. எம்மை நாம் உணர்ந்து கொள்ளவும் தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் செல்லவும் இது உதவியாகின்றது. வாழ்க்கை என்பதே எம்மை நாம் உணர்ந்து எம்மைப்பற்றி அறிந்து வளர்ச்சியை நோக்கி முன்னேறிச் செல்லு தல் ஆகும். எமது வாழ்வின் ஒவ்வொரு படிநிலைகளிலும் நாம் பல மனிதர்களை சந்திப்போம். அவர்களிடமி ருந்து பலவற்றைக் கற்றுக்கொள்வோம். எமது முன்னைய பிறவிகளிலும் இப்பொ ழுதும் இந்தப் படிப்பினைகளை கற்றுக் கொள்கி ன்றோம். இந்தக் கற்றலின்போது சிலவேளைகளில் எமது சக்தி அதிகரிக்கும் அல்லது குறையும். அப்படிக் குறையும் போது நாம் அவற்றை சரி செய்வதற் கான முயற்சிகளை மேற்கொள்வோம். ஏனெனில் பிறப்பின் நோக்கமே நாம் யாரென்பதை அறிந்து கொள்வதும், எப்படி எமது மனம், புத்தி என்பன இயங்குகின்றது? அதற்கும் எமது ஆன்மாவிற்குமான தொடர்பு என்ன? இந்த உலகத்தில் எனது நோக்கம் என்ன என்பதை அறிவதாஅறிவதாகும்.

தன்னை உணர்ந்தவர் ஞானி என அழைக்கப்படுகின்றார். தன்னை உணர் வது என்பது முதலில் அவருடைய கவனத்தை தன்னை நோக்கித் திருப்பு வது ஆகும். அப்படி தன்னைத்தானே ஆழ்ந்து கவனிக்கும் போது அவருடைய எண்ண ங்கள், நம்பிக்கைகள் மட்டுமல்லா மல் அவருடைய வாழ்க்கை முழுவதிலும் சேகரி த்துக் கொண்ட நல்ல விடயங்கள் மற்றும் கசப்பான துன்பமான அநுபவங்கள் அனை த்தும் அவருக்கு எதையாவது கற்றுக் கொடுத்திருப்பதை அறிய முடியும். எந்த வொரு அநுபவமும் அது நல்லதோ அல்லது கசப்பானதோ அவை கெட்டவை அல்ல. அவற்றிலிருந்து நாம் எதை கற்றுக் கொண்டோம் என்பதை உணர்ந்தோமானால் அந்த சம்பவம் மீண்டும் நமக்கு ஏற்படு வதில்லை.

ஆனால் எதையும் உணரவோ அல்லது கற்கவோ இல்லையெனில் அதேசம்பவம் பல வழிகளில் வேறு வேறு ஆட்கள் மூலம் அவை மீண்டும் மீண்டும் எமக்கு நிகழ் வதை எம்மால் காணமுடியும். ஏனெனில் அந்த நிகழ்வால் ஏற்பட்ட சக்தியும் அது சார்ந்த எமது நம்பிக்கைகளும் எம்மை விட்டு அகல வேண்டும். சிலர் இருக்கின் றார்கள் அவர்கள் மற்றவர்களுடன் உரை யாடும்போது அந்த உரையாடலின் முடி வில் அதைப்பற்றி எதையும் நினைவில் வைத்திருக்க மாட்டார்கள். அதை அந்த இடத்திலேயே விட்டு விடுவார்கள். நான் ஒருவருடன் பேசும் பொழுது அவர் குறிப்பிட்டார் "நான் மற்றவர்கள் கூறியதை ஒரு போதும் நினைவில் வைத்திருப்ப தில்லை. ஏனெனில் அது தொடர்பாக என்னால் எதையும் செய்ய முடியாதபோது எதற்காக அதை நினைவில் வைத்திருக்க வேண்டும்" என்று. அது அவர் கொண்டி ருக்கும் ஒரு நம்பிக்கை. அவர் தனது மனதை அப்படி பழக்கப் படுத்தி இருக்கின் றார். அவருடைய அந்த நம்பிக்கைக்கேற்ப அவரது மூளை இயங்குகின்றது. எமது நம்பிக்கைகளை மாற்றும் போது எமது மூளையும் அதற்கேற்ப மாறும். சில மனிதர்கள் எல்லாவற்றையும் நினைவில் வைத்திருக்கும் இயல்புள்ளவர் களாக இருப்பார்கள். அல்லது நல்ல வற்றை மட்டும் நினைவில் வைத்திருப்பார் கள். இவை எல்லாமே ஒன்றுதான் நல்லதை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும் என்ப தும் எமக்கு கற்பிக்கப்பட்ட ஒன்றே.

மனதின் பிடியில் இயங்குபவர்கள் அனைத் தையும் நினைவில் வைத்திருப் பதையும் இதயபூர்வமாக இயங்குபவர்கள் அவற்றை இலகுவாக வெளியேற்றுவதையும் நாம் நன்றாகக் கவனித்தோமானால் பார்க்க முடியும். ஏனெனில் இதயத்தி லிருந்துதான்




எமது உண்மையான ஆன் மீகசக்தி இயங்குகின்றது. நாம் இதயத் துடன் இணைந்து இருப்போ மானால் மூளை எதைப்பற்றியும் எமது இதயத்திடம் கேட்கி ன்றது. மனதின்படி செயற்பட்டால் எமது வலதுபக்க மூளை அதிகமாக இயங்கும். இதயத்துடன் தொடர்பு கொண்டு இயங்கும் போது இடது பக்க மூளை அதிகமாக வேலை செய்யும். இப்படிப்பட்ட சந்தர்ப்பத் தில் எதையும் மன்னிப்பது, மறப்பது, ஏற்றுக் கொள்ளும் தன்மை போன்றன அதிகமா கின்றது. இப்படி இதயத்தோடு தொடர்பு கொள்ளும் போது மனதின் பலவீ னமான எதையும் மீண்டும் மீண்டும் எண் ணுவது, கட்டுப் பாடற்ற சிந்தனை என்பன குறைந்துவிடும்.

உண்மையான ஞானம் பெற்றவர்கள் இதயபூர்வமாகவே இருப்பார்கள். சாதார ண மனிதர்களைப்போல சதா எண்ண ஓட்டத்தில் சிக்கியிருக்க மாட்டார்கள். அவர்கள் எண்ணங்கள் அற்றிருப்பார்கள். தேவைப்பட்டால் மட்டுமே எண்ணங்களை உருவாக்குவார்கள். அவர்கள் முழுமை யாகத் தங்களை உணர்ந்து தமது இதயத் தின் சக்தியை முழுமையாகப் பயன்படுத் திக் கொண்டு வாழ்வார்கள். அவர்களையே நாம் ஞானிகள் என்கின் றோம். இதுவே எமது வாழ்வின் நோக்கம். இவ்வாறு நாம் வாழ்வோமானால் எமது வாழ்க்கை இலகு வானதாக அமையும்.

ஒவ்வொருநாளும் காலையில் எமது நாளை ஆரம்பிக்கும்போது மனதை இதயத்தை நோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். அத்தோடு எமது மூச்சை இதயத்தை நோக்கிச் செலுத்த வேண்டும். இவ்வாறே ஒரு பத்து முறை செய்யுங்கள். அப்பொ ழுது இதயத்தை நோக்கி எமது சக்தி செல்வதாக எண்ண வேண்டும். அப்பொழுது எமது பிரக்ஞை மனதை விட்டு விலகி இதயத்தைச் சுற்றியே இருக்கும். நாம் இதயத்தில் இருந்து எமது நாளை ஆரம் பித்தோமானால் அந்த நாள் இனிமையான-தாக அமையும். ஒவ்வொரு நாளும் இனிமை யானதாக அமையட்டும்.

### இதய தியானம்

பல வகையான தியானமுறைகள் உல கெங்கும் பின்பற்றப்படுகின்றன என்றா லும் அவற்றுள் இதயத்தை நோக்கி செய்யப் படும் தியானம் மிகவும் சிறப்பானதாக உள்ளது. ஏனெனில் இதயம் மூலமாகத் தான் எமது உண்மையான ஆத்மாவை நாம் தொடர்பு கொள்ள முடியும். அதனால் தான் இதயத்தை நோக்கி செய்யப்படும் தியானம் மிக முக்கியமானதாகக் காணப் படுகின்றது. இதயம் எமது உடலின் நடுப் பகுதியில் இருக்கின்றது. ஒரு மனித உடல் உருவாகும்போது முதலில் உருவாகும் உறுப்பு இதயம் ஆகும். இதயத்தின் ஒரு பகுதி மூளைக் கலங்களைக் கொண்டி ருப்பதுடன் அவை இதயத்தின் இயக்கத் தையும், உடலின் இயக்கத்தையும் கட்டுப் படுத்துவதாகவும் நவீன ஆராய்ச்சிகளின் படி அறிய வருகின்றது. இதயத்திலிருந்து அனுப்பப்படும் செய்திகளை மூளை ஏற்றுக் கொள்கின்றது எனவும் மூளையிலிருந்து அனுப்பப்படும் செய்திகள் அனைத்தையும் இதயம் ஏற்றுக் கொள்வதில்லை (சிலவ ற்றை மட்டும் ஏற்றுக்கொள்கின்றது) எனவும் அந்த ஆய்வுகள் கூறுகின்றன. உண்மையில் இதயமே உடலை ஆளு கின்றது எனக் கூறலாம். ஒருவர் நோய் வாய்ப்பட்டிருந்தால் அவருடைய இதயத் துடிப்பையே மருத்துவர்கள் பரிசோதிக் கின்றார்கள். உடலில் எந்தப்பகுதியில் ஒரு நோய் அல்லது பிரச்சினை ஏற்பட்டா லும் அது இதயத்தில் பிரதிபலிக்கும்.

இப்படிப்பட்ட இதயத்தை நாம் சரியான முறையில் வைத்திருக்க வேண்டுமென்றால் எமது உணர்வுகள் நல்ல முறையில் இருக்க வேண்டும். மூளையின் சக்தி குறை வாக இருக்கும்போது இதயத்தின் சமநிலை அதிகமாகும். இதயத்தின் சக்தியை அதி-கரிக்க வேண்டுமெனில் நாம் அதைக் கவனித்துத் தியானம் செய்யலாம். எம்மால் காணக்கூடிய இதயம் உடல்ரீதியான ஓர் உறுப்பே. அது உடலுக்குத் தேவையான இரத்தச் சுற்றோட்டத்தை மேற்கொள்கின் றது போன்ற பௌதீக விடயங்களே இதயம் தொடர்பாக நாம் அறிந்து வைத்திருக்கின் றோம். ஆனால் அதற்குள்ளே பல சக்தி கள் இருக்கின்றன. எம்மை இந்த உலகத் துடனும் கடவுளின் உலகத்துடனும் இணை க்கும் ஒரு பாலமாக இதயம் விளங்குகிறது.

இதயத்தில் பல ஒளிகள் (lights) உண்டு. தியானம் மூலம் அந்த ஒளிகளை எம்மால் தொடர்பு கொள்ள முடியும். அந்த ஒளிகள் மூலம் எமது உண்மையான சக்திக்குள் அல்லது எமது ஆன்மாவிற்குள் நாம் செல்ல முடியும். அப்படியான சந்தர்ப் பத்தில் எமது உடலில் இதயத்தின் கட்டுப் பாடு ஏற்படுவதால் எமது மூளை சார்ந்த மனம் (mind) அமைதியடைகின்றது. இந்த வகையான தியானங்கள் இதற்கு உறுது ணையாகின்றன. அதை எப்படிச் செய்வது எனப் பார்ப்போம்.

முதலில் இதயத்தை நோக்கி மூச்சை நன்றாக எடுத்து அமைதியான முறையில் வெளிவிட வேண்டும். சிறிது நேரத்தில் ஒரு மகிழ்ச்சியான மனநிலையோடு நன்றி சொல்ல வேண்டும். நன்றி என்பது இதயத் தோடு தொடர்பு பட்ட ஒரு நல்லுணர்ச்சி ஆகும்.

தொடர்ச்சி 38 ஆம் பக்கம்.....

# கல்லைக் கண்டால் நாயைக் காணோம்



சுந்தரம் இந்திரராஜா

ஒருவர் ஒரு நாள் பளிங்குக் கற்கள் விற்கும் கடைக்குச் சென்றார். கடைக்கு முன்னால் பெரிய பாறையொன்று கிடப்பதைக் கண்டார். அதன் விலை என்னவெனக் கடைக்காரரைக் கேட்டார். இடத்தை அடைத்துக்கொண்டிருக்கும் இந்தப் பாறையை நீங்கள் நகர்த்திச் சென்றாலே போதும், பணம் ஏதும் தேவையில்லை. வந்தவர்கள் எவரும் இதை வாங்கிச் செல்ல விரும்பவில்லை, தாங்கள் இதை எடுத்துச் சென்றால் சந்தோஷம் என்று விட்டார் கடைக்காரர்.அந்தப் பாறை யைக் கொண்டு சிலையொன்றைத் தயாரித்ததும், கடைக்காரருக்கு அழைப்பு விடுத்தார். இயேசு சிலுவையிலிருந்து இறக்கப்பட்டதும் தனது தாயின் மடியில் கிடக்கும் காட்சி சிலையாக உருப்பெற்றி ருப்பதைக் கண்ணுற்ற கடைக்காரருக்கு ஆச்சரியம். “நான் கண்டதிலேயே மிக அழகான சிற்பம் இது. இதற்கான பளிங்குப் பாறை எங்கே கிடைத்தது,” என்று கேட்டார். “நீங்கள் இலவசமாக எடுத்துச் செல்லச் சொன்ன அந்தப் பாறைதான் இது,” என்றார் மைக்கேலாஞ்சலோ.

உலகப் பிரசித்தி பெற்ற சிற்பங்களில் ஒன்றாக அது திகழ்ந்தது. 1498ல் மைக்கலாஞ்சலோ தனது 23ஆம் வயதில் செதுக்கிய ஆறு அடி உயரம் உடையதாயும் சேயும் (பியேட்டா - Pietà) சிலை இது தான். மைக்கலாஞ்சலோ செதுக்கிய சிற்பங்களுள் மிகத் துல்லியமாக நிறைவு செய்யப்பட்ட இச்சிலை சிலுவையில் தொங்கி இறந்த இயேசுவை அன்னை மேரி தன் மடியில் கிடத்தியிருப்பதுபோல் செதுக்கப்பட்டுள்ளது. தாய்க்கும் சேய்க்கும் இடையே உள்ள உறவு இயல்பான விதத்தில் வெளிப்படுகிறது. மெழுகு போன்று இளகியதொரு பொருளால் செய்யப்பட்டது போல் அமைந்திருப்பது மைக்கலாஞ்சலோவின் கலைத் திறனைக் காட்டுகிறது. அத்தனை நுணுக்கங்கள் அச்சிலையில் உள்ளது. இச்சிலையில் மறு மலர்ச்சிக் காலச் சிறப்புகளையும் இயல்புக் கலைச் சிறப்புகளையும் ஒருங்கே காணலாம். இச்சிலை வத்திக்கான் நகரில் புனித பேதுரு பெருங்கோவிலில் பார்வைக்கும் வணக்கத்திற்கும் வைக்கப்பட்டுள்ளது. ஒரு பயனற்றுக் கிடந்த பாறையில் இயேசுவையும் மேரியையும் காண அவரால் மட்டுமே முடிந்தது. அதைக் கல்லாகப் பார்க்கும்போது அங்கே கடவுளை பார்க்க மாட்டீர்கள். அதையே நீங்கள் கடவுளாகப் பார்க்கும்போது கல்லைப் பார்க்க மாட்டீர்கள்.

இத்தாலியில் ஃபிளோரன்ஸ் (Florence) நகரிலிருந்து சுமார் 40 மைல் தொலைவிலிருந்த கேப்பிரசி (Caprese) என்ற நகரத்தில் 1475 ஆம் ஆண்டில் பிறந்த மைக்கேலாஞ்சலோ (Michelangelo) 6 வயதாக இருந்த போது அவரது தாயாரை இழந்து விட்டார். மிக இளம் வயதிலேயே தெருச் சுவர்களில் சித்திரங்களை வரைந்து இவர் தனது கலைத் திறமையைக் காட்டினார். கலைத்



தொழில்மீது கொண்ட மகனின் ஆர்வத்தை அவரது தந்தை ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை.

தன் 13 ஆம் வயதில் ஃபிளோரன்ஸ் (Florence) நகரில் புகழ் பெற்ற ஓவியராக விளங்கிய கிர்லாண்டையோ (Domenico Ghirlandaio) என்பவரிடம் இவர் பயிற்சியாளராகச் சேர்ந்தார். சிறுவனாக இருந்தாலும் அபாரமான கலைத்திறன் கொண்டிருந்தார். 1490ஆம் ஆண்டில் 15 வயதாக இருந்தபோது ஆட்சியாளராக இருந்த லொரென்சோ இவரின் திறமைகளை அவதானித்து தங்கள் அரண் மனைக்குள் ஒருவராகச் சேர்த்துக் கொண்டனர். மைக்கேலேஞ்சலோ 1490இல் இருந்து 1492வரை லொரென்சோ அரச பள்ளியில் படித்ததனால் பல இலக்கியப் பிரமுகர்கள் மற்றும் பல முக்கியத்தவர்களைச் சந்திக்கவும் தனது கருத்துக்களை விரிவாக்கிக் கொள் ளவும் கலையில் அவற்றை வெளிக்காட் டவும் முடிந்தது. தனது 16ஆம் வயதில் பளிங்குக் கல் சுவரில் செதுக்கிய படிக் கட்டு மடோனா (Madonna of the Stairs) என்ற கிறிஸ்துவின் தாய் குழந்தைக்குப் பாலூட்டும் காட்சி ஒரு தரமான சிற்பி என்ற கௌரவத்தை மைக்கேலேஞ்சலோவுக்கு வழங்கியது. மைக்கேலேஞ்சலோவின் கலை வார்ப்புக்கள் அதிகமாக ஆண் அழகுக் கவர்ச்சி கொண்டவை.

26 வயதாக இருந்த போது 17 அடி உயரத்தில் ‘டேவிட்’ சிற்பத்தை உருவாக் கினார். இந்தச் சிற்பம் அவரது புகழை நிலை நிறுத்தியது. மிக உயர்ந்த திறம் படைத்த கட்டிடக் கலை வல்லுநராகவும் மைகேலாஞ்சலோ திகழ்ந்தார். கட்டிடக் கலைத் துறையில் இவருடைய புகழ்பெற்ற சாதனைகளில் தலைசிறந்தது ஃபிளாரன் சில் (Flo-

தொடர்ச்சி 38 ஆம் பக்கம்...



# முதலமைச்சர்.....

18ஆம் பக்கத்தொடர்ச்சி

அவ்வாறான நெருக்குதல்கள் அவசியம். அதனை இன்றைய காலகட்டத்தில் நாங்கள் சர்வதேச குரலின் வாயிலாகத்தான் ஏற்படுத்த முடியும். ஐக்கிய நாடுகள் சபையினால் நெருக்குதல்கள் முன்வைக்கப்பட்டால்தான் இலங்கை அரசாங்கம் நீதிக்கும் நியாயத்திற்கும் கட்டுப்படும்.

எமது கோரிக்கைகள் நியாயமானவை. எமக்கு இதுகாலும் நடந்த அநியாயங்களே எமது கோரிக்கைகளை நியாயப்படுத்த வல்லன. நீதிக்குப் புறம்பான அரச குடியேற்றங்களே கிழக்கில் வேற்றோர் வந்து குடியேற வழிவகுத்தது. ஆகவே வடக்கையும் கிழக்கையும் இணையுங்கள் என்பதில் எந்தப் பிழையும் இல்லை. எமக்கென அலகொன்றை நாங்கள் கோருவது போல் வடகிழக்கு இணைப்பில் முஸ்லிம் மக்களுக்கு ஒரு தனி அலகைப் பிரித்துக் கொடுப்பதில் எமக்கோ அரசாங்கத்திற்கோ எந்த வித ஆட்சேபனையும் இருக்க முடியாது.

மத்தியின் மேலாதிக்கம் குறைந்து மாகாணங்களில் சுயாட்சி மலர வேண்டும் என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமிருக்க முடியாது. அண்மையில் மத்தியின் மேலாதிக்கத்திற்கு எதிராக கிழக்குத் தவிர்ந்த மாகாண சபைகள் அனைத்தும் தமது குரலை ஓங்கி ஒலிக்கச் செய்துள்ளனர். கிழக்கு சிந்திப்பதற்கு காலக்கெடு கேட்டுள்ளது.

சப்ரகமுவ முதலமைச்சர், மத்திய மாகாண முதலமைச்சர் ஆகியோர் என்னுடன் சேர்ந்து பொருளாதார அபிவிருத்தி பற்றிய அரசாங்க முன்மொழிவை எதிர்ப்பதாகத் தெரிவித்தார்கள். உடனே நான் ஒன்பது மாகாணங்களுக்கும் சமஸ்டி அடிப்படையில் அதிகாரங்களை அளிக்க வேண்டிய அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்கள் இணைய வழிவகுத்தால் என்ன என்ற கருத்தை படர விட்டிருக்கின்றேன். எனவே சமஸ்டி சம்பந்தமான எங்கள் கோரிக்கை நியாயமானது என்பது சிங்கள் மாகாணங்களிலிருந்து வெளிவரக்கூடிய ஒரு சந்தர்ப்பம் எழுந்துள்ளது.

உங்கள் ஒற்றுமையே எமது பலம் என்று கனேடிய மக்களுக்கு மீண்டும் கூறி அவர்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் இறைவனின் பார்வை படர்வதாக என்று பிரார்த்தித்து என்னை இதுநாள் வரையில் பார்த்து பாதுகாத்து பணிவன்புடன் செய்த குழு அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து உங்கள் அனைவரையும் பிரிந்து செல்ல வேண்டிய தருணம் வந்துள்ளதை உணர்ந்து என் அன்பை உங்களுடன் பகிர்ந்து விடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம்
நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரன்
முதலமைச்சர், வடமகாணசபை
வட மாகாணம்

# குடும்ப நாளைப் போற்றுவோம்




**- ரஞ்சி கதிர் -**

போற்றுவோம் போற்றுவோம்
குடும்ப நாளைப்போற்றுவோம்
வளர்ப்போம் வளர்ப்போம்
ஒற்றுமையை வளர்ப்போம்
குறைப்போம் குறைப்போம்
எதிர்பார்ப்புக்களைக் குறைப்போம்
பொறுப்போம் பொறுப்போம்
பிறர் குற்றங்களைப் பொறுப்போம்

மாறும் உலகை புரிந்து நடந்து
பாழாய்ப்போகும் சண்டையைத் தவிர்ப்போம்
வல்லடி வழக்கை விலக்கி வாழ்வோம்
மனவளத்தை மேம்படுத்த பயிற்சிகள் செய்வோம்

குடும்ப உறுப்பினர்களை
அவர்களாகவே ஏற்போம்
நல்லதை பகிர்ந்திடுவோம்
அல்லதை விலக்கிடுவோம்
வல்லமை பெற்றிடுவோம்
நன்மைகள் செய்திடுவோம்
சமநோக்கைப் பேணியே
நிதானத்தைக் காத்திடுவோம்

சொல்லடி பட்டு காயப்படவும் மாட்டோம்
மாறுபட்டு வன்சொல்லும் கூறமாட்டோம்
சுயமாக இயங்கியே சுதந்திரத்தைக் காப்போம்
பிறர் சுதந்திரத்தில் கைவைக்காது
விலகி நிற்போம்.

பாய்ந்து வரும் துன்பங்களை
தாங்கிக் கொல்வோம்
பார் போற்றும் குதூகலக் குடும்பத்தை
எந்நாளும்
இன்சொல்லால் கட்டி ஆள்வோம்
என்றும் எல்லோரும் வையகம் போற்ற
ஒன்றுபட்ட குடும்பமாய் இனிது வாழ
இறையை இறைஞ்சுவோம்.









To Register Please Call:

**416-321-6969**

**HomeLife/GTA Realty Inc.*** Brockerage

5215 Finch Ave East #203 Toronto ON M1S 0C2

*Independently Owned and Operated

58 YEARS IN BUSINESS. FAMILY OWNED AND OPERATED

DONWAY Ford

# DONWAY DEALS

WWW.DONWAYFORD.COM

DONWAY Ford




2017 FORD FUSION SE




2017 FORD ESCAPE SE




2017 FORD F-150 4x4 CREW 157




2017 FORD ESCAPE SE 4WD




2017 FORD ESCAPE SE




2017 FORD FOCUS




2017 FORD EDGE SEL




2017 FORD EXPEDITION LIMITED




2017 FORD TRANSITCONNECT




2015 HONDA CRV EX-L AWD
29 000KM'S -1 OWNER




2016 LINCOLN MKZ
4000KM'S, 1 OWNER





2016 FORD ESCAPRE
76 000KM'S, 1 OWNER

(416) 751-2200

WE FINANCE EVERYONE
GET THE MOST FOR YOUR TRADE

1975 EGLINTON AVENUE EAST
SCARBOROUGH, ON. M1L 2N1



While every reasonable effort is made to ensure the accuracy of this information, we are not responsible for any errors or omissions contained on these pages. Please verify any information in question with Donway Ford. All our prices include all available rebates, additional fees such as administration fee, licensing, and taxes do apply.

# ஒரு நாயகன்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

கிறார்கள்.

சசிகலா முதலமைச்சர் ஆவதற்கு எதிராக அசாத்தியமானதோர் மக்கள் எதிர்ப்பு இன்று தமிழகத்தில் இருக்கிறது. சமகால தமிழ்நாட்டு வரலாற்றில் இப்படிப்பட்ட ஓர் எதிர்ப்பு ஒரு தனி நபரை மையமாக வைத்து எப்போதும் எழுந்ததாகத் தெரியவில்லை. இதில் ஜாதி, பேத, பாலின பாகுபாடுகள் என்று வேறுபாடுகள் ஏதுமில்லை.

இந்த வெறுப்புக்கான காரணங்களில் மிகவும் முக்கியமான ஒன்றாக, சசிகலா குடும்ப உறுப்பினர்களின் ஆதிக்கம்தான் அரசியல் பார்வையாளர்களால் பார்க்கப்படுகின்றது. இந்திய அரசியலின், ஏன் தெற்காசிய அரசியலின் சாபக் கேடாகவே பார்க்கப்படும் குடும்ப அரசியல் கோலோச்சல்தான் சசிகலாவுக்கும் மிகப் பெரிய சவாலாக இன்று எழுந்து நின்று கொண்டிருக்கிறது. 2006_11 ஆட்சிக் காலத்தில் எவ்வளவோ நலத் திட்ட உதவிகளை மக்களுக்கு வழங்கியும் தமிழ்நாட்டில் அன்றைய திமுக அரசு தோற்றுப் போனது. அடுத்த 2016 தேர்தலிலும்கூட திமுகவால் எழுந்திருக்க முடியவில்லை. காரணம் கூச்ச நாச்சமில்லாத குடும்ப அரசியல்தான். இந்திய வாக்காளர்கள் அவ்வளவு சுலபத்தில் குடும்ப அரசியலை, அதுவும் பட்டவர்த்தனமான குடும்ப அரசியலை மன்னித்துவிட மாட்டார்கள் என்பதற்கு திமுக ஒரு சரியான சாட்சி. மக்கள் மன்றத்தில் சசிகலாவுக்கு இன்று இருக்கும் கடுமையான எதிர்ப்புக்கும் இந்தக் குடும்ப ஆதிக்கம்தான் முக்கிய காரணம்.

ஆனால், ஜெயலலிதா உருவாக்கிய அதிமுகவின் 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள், 135 சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற பலமான படையை தனக்குப் பின்னால் சசிகலா வைத்திருந்ததால், அவரை எதிர்க்கும் துணிச்சல் யாருக்கும் வரவில்லை. பூனைக்கு யார் மணி கட்டுவது? என்று அனைவரும் தயங்கிக் கொண்டிருந்த நேரத்தில், நான் கட்டுகிறேன் என்று



களத்தில் குதித்திருக்கிறார் பன்னீர்செல்வம். இன்று தமிழகத்தில் அவருக்கு கிடைத்திருக்கும் பேராதரவுக்கு இதுதான் காரணம். சசிகலாவுக்கு எதிராக பன்னீர்செல்வம் முதன்முதலாக போர்க்கொடி தூக்கிய பிப். 7 அன்று நடிகர் கமலஹாசன், 'சில ஆண்டுகளுக்கு முன் இதே பிப்ரவரி ஏழாம் தேதிதான் மக்களின் அன்பிற்கு முன்னால் அதிகாரம் ஒன்றுமே இல்லை என்பதை உணர்ந்தேன். அப்படியே இப்போதும் இருக்க வேண்டும். நிம்மதியாய் தூங்கு தமிழகமே... அவர்கள் நமக்கு முன்பாக முழித்துவிடுவார்கள்' என்று ட்விட் செய்தார். பின்னர் பன்னீர்செல்வத்துக்கு ஆதரவாக விரிவாக ஒரு அறிக்கையும் வெளியிட்டார்.

அளவெட்டி மக்கள் மன்றம் நடத்தும் குளிர்கால ஒன்று கூடலும் இராப்போசன விருந்தும். February 18, 2017 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு. 3300 Mcnicoll Avenue இல் அமைந்துள்ள Baba Banquet Hall இல் நடைபெறும். பிரபல ஜனரஞ்சக பாடகர்களின் இசை நிகழ்ச்சி உட்பட பல பொழுதுபோக்கு அம்சங்கள். ஊர் மக்கள் அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம். விபரங்களுக்கு அழையுங்கள்:

பாலா - **416.857.4502** கலாவரன் - **416.887.9762**
வரதன் - **647.404.9356** ஞானசிவம் - **647.346.5584**








# மேலை நாட்டினர் நல்லூரில் தமிழரின் உடையில் தரிசனம்

**வீரகேசரி மூர்த்தி**

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்", "தேமதுரத் தமிழோசை தேசமெலாம் பரவும் வகை செய்வோம்" என்ற பொன் மொழிகள் இன்று அகில உலகமெலாம் நடைமுறையில் இருந்து வரு-வதைப் பார்க்கும்போது சைவர்களாகிய எமது மெய் சிலிர்க்கின்றது. உலகெலாம் பரந்து வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் தமது மொழி, மதம், பண்பாடு ஆகியவற்றினை களைப் போன்று, ஆண்கள் பட்டு வேட்டி, நஷனல், சால்வை கள் ஆகியவற்றினையும், பெண்கள் சேலை, சட்டைகளையும் அணிந்து சைவ ஆலயங்களில் பக்தி சிரத்தையுடன் கைகளைக் கூப்பி வழிபாடு செய்வதைக் காணும் போது சைவர்களாகிய எமக்கே மெய் சிலிர்க்கின்றது. தத்தமது நாடுகளில் மாத்திரமல்ல அண்மையிலே யாழ்ப்பாணத் துக்கு உல்லாசப் பயணத்தை மேற்கொண்டி ருந்த இலண்டனைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் தமிழர் திருநாளான தைப்பொங் கல் தினத்தன்று தமிழர்களது உடைகளை



தொடர்ந்தும் பின்பற்றி வருகின்றனர். இலண்டன், ஜெர்மனி, கனடா போன்ற வெளி நாடுகளில் அதிகளவில் குடியேறி வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்கள் சைவ ஆலய ங்களை அமைத்துத் திரு விழாக்களையும் பக்தி சிரத்தையுடன் கொண்டாடி வருகின்ற னர். இதைப்பார்த்து வேற்று இனத்தவர் ஈர்க்கப்பட்டு தாங்க ளும் சைவ சமயத்தவர் அணிந்து பக்திப் பரவசமாகி நல்லூர் முருகன் ஆலயத்தில் வழிபட்டனர். அத்து டன் அந்த ஆனந்தக்காட்சியினைப் படம் பிடித்துக் கொண்டனர். "தென்னானுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி", "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்ற சைவ நீதி பாரெலாம் பரவி வருவது எமக்குப் பெருமை சேர்க்கின்றது.

# குடும்ப தினம்




உற்ற துணையுடன் நெருங்கி உறவாட நேரமின்றி
பெற்ற பிள்ளைகளோடு நேரில் பேசப்பறைய வசதிஇன்றி
ஓடிஓடி ஓய்வின்றி உழைப்புத்தேடும் ஒரு
குடும்பத் தலைவன் கூடி இருந்து கொண்டாட
உகந்த தினமே குடும்பதினம்

குடும்பத்தில் தினம் தினம் நடைபெறும் குறைநிறைகளை
கேட்டறியவும் அதற்கான தீர்வுகளைக் கண்டறியவும்
அவர்களோடு வாய்விட்டுப் பேசி நல்லவழிமுறை சொல்லவும்
விடுமுறையோடு கூடிய வசதியான ஒரு
நல்ல தினமே குடும்பதினம்

முதியோரும் இளையோரும் முன்வந்து கூடுவதோடு
உற்றார் உறவினர் உடன்பிறந்தோரோடும் இணைந்து
பானம் அருந்தி பல்சுவை உணவுண்டு கொண்டாட
நல்ல வசதியாய் அமையும் ஒரு
ஒப்பற்ற தினமே குடும்பதினம்



கவிநாதம் பரந்தாமன்

# தலைவலிகள் பலவிதம்

## *Head Aches*



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

எமது வீடுகளில் சாதாரணமாக எல்லோரது வாய்களிலும் அடிக்கடி உச்சரிக்கப்படும் சொல் தலைவலி என்பதாகும். தலையிடி, மண்டைக்குத்து, கபாலவலி, உச்சிவலி, ஒற்றைத்தலைவலி என்று பல பெயர்களிலும் இச்சொல் பாவிக்கப்படும். 'தலைவலியும் வயிற்றுவலியும் தனக்கு வந்தால் தான் தெரியும்' என்பது பழமொழி. உண்மையில் தாங்க முடியாத தலைவலி வந்து விட்டால் தாங்கமுடியாது என்பதே அதன் அர்த்த மாகும். குடும்பத்தில் சண்டைவந்து விடும் போது, வேலைக்கு லீவு போடும்போது, வேலையிலிருந்து திடீரென லீவுபோட்டு விட்டு வெளியேறும்போது, ஏதாவது சாட்டுப் போக்கு சொல்லும்போது 'தலைவலி' என்ற சொல்தான் துணை நிற்கும். சின்னத்திரை நாடங்களிலும் 'தலைவலியாயிருக்கு' என்று ஏதாவது கூறி தப்பித்துக் கொள்வதனைக் காணமுடியும். உண்மையில் தலைவலி என்பது ஒரு புரியாத புதிராகும்.

'இதய சிகிச்சை செய்து விடலாம். ஆனால் தலைவலி வருவதற்குக் காரணத்தை அறிவது மிகவும் கஷ்டம்' என்று மருத்துவ நண்பர் ஒருவர் கூறியது இப்போதும் நினைவுக்கு வருகிறது. உண்மையில் அதில் எவ்வளவோ உண்மை உள்ளது. நூற்றுக் கணக்கான நோய்களுக்கு எச்சரிக்கை மணி யாக தலைவலியே உள்ளது. தலைவலியால் ஏற்படும் நோவுக்கு 'Cephalalgia' என்று மருத்துவ உலகம் கூறுகிறது. 200க்கும் மேற்பட்ட தலைவலிகள் அறியப்பட்டுள்ளன தலைவலிகள் அடிக்கடி வருவதால் வாழ்க் கையின் மகிழ்ச்சியே குன்றி விடும். எந்த ஒரு வேலையும் செய்ய முடியாது போய் விடுகிறது. மற்றவர்கள் மீது எரிந்து விழ நேரிடுகிறது. பொறுமையை இழக்க நேரிடு கிறது. நல்ல நண்பர்களைத் கூட இழக்க நேரிடுகிறது.

தலையின் ஏதாவது ஒரு பகுதியில் ஏற்படும் வலியே தலைவலியாகும். தலையின் ஒரு பக்கத்திலோ, அல்லது இரண்டு பக்கங்களி லுமோ அல்லது தலை முழுவதிலுமோ, அல்லது உச்சிப்பகுதியிலோ ஏற்படலாம். கடுமையானநோவு, விட்டுவிட்டு நோவு வருவது, ஒரு இயல்பின்மையை தருவது போன்று ஏற்படலாம். மெதுவாக அல்லது திடீரென ஏற்படலாம். தலைவலியின் குணம் குறிகளைக் கொண்டே காரணம் அறியப்பட லாம். மிகவும் கடுமையான நோயால் வருவதை விட கண்டகண்ட சிறிய சிறிய காரணங்களுக்காக வரும் தற்காலிக தலை வலிகளே அதிகமாகும்.


பொதுவாக வருகின்ற முக்கிய தலைவலிகள் (Primary head aches) சில உள. கூட்டான தலைவலிகள் (Cluster head aches), ஒற்றை த்தலைவலி (Migraine), மன இறுக்கத் தலைவலி (Tension head ache), இயல்பாக எழும் தலைவலிகள் (Autonomic cephalalgia) எனப் பல உள. இன்னும் சில தினசரி வரும் தலைவலிகள் (Chronic daily head aches), இருமல் தலைவலிகள் (Cough head aches), உடற் பயிற்சித் தலைவலிகள் (Exercise head aches), பாலியல் தலை வலிகள் (Sex head aches) என்பன உள.

மேற்கூறிய தலைவலிகளைத் தூண்டக்கூடிய சில வாழ்வியல் முறைகளும் உள. மது சாரம் எடுத்தல், பதப்படுத்தப்பட்டு நைட்றேற்ஸ் கலந்த இறைச்சி வகைகளை உண் ணுதல், நித்திரையின்மை, பிழையான முறையில் படுத்தல், உணவினைத் தவிர்த் தல், மனஅழுத்தம் என்பனவேயாகும்.

இரண்டாந்தரத் தலைவலிகள் (Secondary head aches) உடலில் ஏற்படும் பல நோய்கள் காரணமாக உணர்வு நரம்புகள் மூலம் மூளைக்குச் செல்வதால் ஏற்படுவ தாகும். சைனஸ் (Acute sinusitis) முடியுரு நாடியில் ஏற்படும் பிரச்சினைகள், இரத்தம் அடைப்பு (Blood clot) மூளையில் உள்ள இரத்த நாடி வீக்கம் (Brain Aneurysm), மூளையில் உள்ள இரத்த தந்துகளின் ஒழுங்கீனம், காபன்மொனொக்சைட் நஞ்சா தல், மண்டையோடு அமைப்பில் ஏற்பட் டுள்ள ஒழுங்கீனம், முதியோர்களுக்கு ஏற்படும் தலைவலிகள், பற்களில் ஏற்படும் பிரச்சினை, காதில் ஏற்படும் தொற்றுநோய், மூளை அழற்சி, இரத்த நாடியில் ஏற்படும் அழற்சி, கண் அழுத்தம் (Glaucoma), மது அருந்திய பின்னான விளைவுகள் (Hangovers), காய்ச்சல் (Flu), மருந்துகளின் விளைவுகள், மெனிஞ்சிற்றிஸ் என்னும் நோய், மூளைச்சிதைவு என்பனவாகும். இவை தவிர வேறு சில தலைவலிகளும் உள. ஹெல்மெட் அழுத்தம், மூளை உறைவு, மேலதிக மருந்துப்பாவனை, முள்ளந்தண்டு எலும்பு மூலமான தலைவலி என்பன இதில் அடங்கும்.

எத்தகைய சூழ்நிலைகளில் ஒருவர் வைத் தியரை நாடவேண்டும் என்பது முக்கிய மானது. மற்றையோரின் பேச்சுக்களை விளங்க முடியாது தடுமாற்றம் ஏற்படல், மயக்கம் ஏற்படல், கடுமையான காய்ச்சல் (102f-104f), உணர்வின்மை, பலவீனம், பக்க வாதம் ஏற்படல், கழுத்து இறுகுதல், பார்க் கக் கஷ்டமாயிருத்தல், பேசக் கடினமாதல், நடக்கக் கஷ்டமாயிருத்தல், வயிற்றைப் பிரட் டுதல் அல்லது சத்தி எடுத்தல் என்பன ஏற்பட்டால் வைத்தியரை நாடுதல் வேண்டும். செல்வதற்கு முன்பதாக தலைவலி அடிக்கடி ஏற்படுமா? தற்போது முன்னரை விட கடுமை யாக உள்ளதா?, பாவிக்கும் மருந்துகளின் விளைவா? வேலையை இடையே நிறுத்தி னீர்களா? மற்றும் விபரங்களை எடுத்துச் செல்லுதல் நலம்.

வேலைப்பிரச்சினை, காலநிலை மாற்றம், மது அருந்துதல் என்பவற்றால் தலைவலிக் கிறது எனக்கண்டால் உடலில் உள்ள நீர்ச்சத்துக் குறைகிறது என அர்த்தமாகிறது.




எனவே நாளொன்றுக்கு 6-8 கிளாஸ் நீரை அருந்த வேண்டும். அத்துடன் சில மென்மை யான பானங்களையும் எடுக்கலாம். எனினும் பல்வேறு தலைவலிகள் உள்ளதால் ஒற்றை த்தலைவலி, கூட்டுத்தலை வலி, சைனஸ் தலைவலி என்பவற்றையும் குறித்து வைக்க வேண்டும். தலைவலி தொடங்கிய திகதி நேரம் என்வற்றைக் குறித்து வைக்க வேண்டும், தலைவலி ஏற்படுவதற்கு முன் இருந்த இடம், நித்திரை செய்த நேரம், சாப்பிட்டவேளை, எவ்வளவு நேரம் தலை வலி இருந்தது? எடுத்த முயற்சிகள் பற்றி குறிப்பில் எடுக்க வேண்டும்.

அடிக்கடி ஏற்படும் தலைவலிகள் முக்கிய மாக மனஇறுக்கம் மூலம் ஏற்படும் Tension Headaches ஆகும். தசைகளில் ஏற்படும் திடீர் சுருக்கம் தலைப்பகுதியையும் தாக்கும். இதனால் ஏற்படும் அழுத்தம் வலியை உண் டாக்கும். இது நெற்றிக்கும் பரவும். உடலில் உள்ள மனஎழுச்சி அழுத்தங்களும் இதற் குக் காரணமாகலாம். உடல் உழைப்பு, நீண்டநேரம் இருந்து கணினியில் செயல் படல் எல்லாமே இதற்குக் காரணமாகும். தலையின் பின்பகுதியில் ஆரம்பித்து கழுத் துவரை இறுக்கிப் பிடிக்கும். பின்பு தலை முழுவதும் ஏற்படும். கண் மடலிலும் வலி தோன்றும். நெற்றியின் இருபக்கத்திலும் வலி ஏற்படும். மென்மையாகவும், இரண்டு பக்கத தலையிலும் இறுக்குவது போல் இதுவரும். இதன்போது வயிற்றுப்பிரட்டு, சத்தி என்பன ஏற்படாது. நரம்பியல் ஆய்வு தேவைப்படும். இது உயிராபத்தானல்ல. தொடர்ந்து வேலை செய்வதனையே குழப்பும். அஸ்பிரின், அட்வில், ரைலனோல், பனடோல், நப்றோக் சன் போன்ற வலிபோக்கும் மாத்திரைகள் எடுக்க நேரிடும். குணமாகாதுவிடின் மசாஜ் செய்ய நேரிடும். Caffine உள்ள உணவுகள் கூடாது. சிலருக்கு அஸ்பிரின் ஒத்துவராது. எப்படியெனினும் கவனம் தேவை. கூட்டான தலைவலிகள் (Cluster Headaches) தொடர் ந்து சிலருக்கு வரும். குறிப்பிட்ட நேரங்க ளில் வரும். நடுஇரவில் எழும்ப நேரிடும். இதற்கான உண்மையான காரணம் தெரிவ தில்லை. எனினும் மூளையில் உள்ள செறொரோன் (தற்காப்பு வேதிப்பொருள்- Serotonin) போன்ற இரசாயன வேறுபாடு களால் ஏற்படலாம். எமது உடலின் நேரத்தைக் கணிப்பது (Biological Clock) ஹிப்போதலமஸ் என்னும் மூளையின் அடித் தளச்சுரப்பி ஆகும். இங்கு ஒழுங்கற்ற சில நுண்இடைவெளிகள் காரணமாக இவ்வகைத் தலைவலி ஏற்படலாம். இது மரபு ரீதியானது (Genetics) எனவும் கூற முடியும். நித்திரை மாறுபட்டாலும் இதுவரலாம். இதயநோய், சிகரெட் பிடித்தல், மதுசாரம், சில உணவு வகைகள் என்பவற்றால் இப்படியான கூட்டு த்தலைவலி ஏற்பட லாம். இது ஒரு தடவை அல்லது இரண்டு தடவை வரலாம். 30-90 நிமிடம் நீடிக்கும். ஒவ்வொரு நாளும் குறிப் பிட்டநேரம் வரும். இரவு நித்திரையின் போது இது திடீரென வரும். கண்கள் வலிக்கும். மூக்குசிந்தும். இதனை மாற்றுவது கடினம். ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு முறையில் சிகிச்சை செய்ய நேரிடும். பிராணாவாயுவை கூடுதலாக நுகரப்பண்ணுதல், Triptan மருந்துகளை ஊசிமூலம் ஏற்றல், Iodine என்னும் மருந்தினை ஏற்றல், Prednisone மனச் சோர்வு எதிர்ப்பு மருந்தினைப் பாவனை செய்ய நேரிடும்.

இரண்டாந்தரத் தலைவலிகள் பல நோய் களால் ஏற்படலாம். காயங்கள் ஏற்படல் மூலமும் நிகழலாம். இது உயிராபத்து உள் ளதாகும். சர்வதேச தலைவலி சங்கம் (International Headache Society) எட்டுவிதமான தலைவலிகளை இனம் கண்டுள்ளது. தலை, கழுத்தில் ஏற்படும் காயம், மூளை வீக்கம் (Edema), மூளைச்சிதைவு (Concussions), இரத்தக் குழாய் பிரச்சினைகள், மூளைக்குடியுருநாடி அழற்சி, மூளைக்கட்டி (Tumors) காக்காய்வலி (Seizures), மூளைக்காய்ச்சல் (Meningitis) என்பன வாகும். அத்துடன் உயர் இரத்த அழுத்தம், தைறொயிட் பிரச்சினை, சிறுநீரக பிரச்சினை, கண் காது, மூக்கு, தொண்டை, சைனஸ் பிரச்சினைகளாலும் தலைவலி ஏற்படுகிறது. மேற்கூறிய எல்லாத் தலைவலிக்கும் குடும்ப வரலாறு, தலைவலிமுறைகள், காய்ச்சல், தடுமாற்றம், முள்ளந்தண்டு சோதனை, மூளைப்படப்பிடிப்பு, இரத்தப் பரிசோதனை, CT Scan, MRI சோதனை செய்ய வேண்டி நேரிடும்.

ஒவ்வொருவரும் மிகவும் மோசமான தலை வலி 'Worst headache of your' இதுவென முதலில் எண்ண வேண்டும். தொடர்ந்து வயிற் றுப்பிரட்டு, சத்தி எடுத்தல், கழுத்து இறுகிப்

(தொடர்ச்சி 38ஆம் பக்கம்...)

# மறைந்த உரு முரண்கள்

- பதமி -

## ஜெயலலிதா

மறைவு எமக்கு புதியதல்ல. ஒவ்வொரு நாளும் இறப்புக்களுடன் வாழ்ந்து வந்துள்ளோம். கடந்த சில மாதங்களில் விருட்சங்கள் என ஆலமரமாய் கிளை பரப்பி விரிந்து பரந்து பாருக்குப் பல செய்த மனிதர்கள் எம்மை விட்டுப் பிரிந்துள்ளார்கள். அவர்கள் வாழும் பொழுது மனிதர்களாக தவறுகளுடனும், சாதனைகளுடனும் வாழ்ந்துள்ளனர். "நான் மனைவியாக வாழவேயில்லை" எனக் கூறிய ஜெயலலிதாவின் மறைவு மறக்கக் கூடியதல்ல. ஆங்கிலப் பேட்டியொன்றில் கூறியதாக தோழி இதழில் எழுத்தாளர் கவின்மலர் தனது கட்டுரையில் கீழ்க் கண்டவாறு பதிவு செய்துள்ளார். "என் தனிப்பட்ட வாழ்வு தோல்வியடைந்த ஒன்று. எம்.ஜி.ஆர் எனது அடையாளம் என நிறுவ எண்ணினேன். அதற்காகவே அரசியலுக்கு வந்தேன்." முன்னாள் ஹிந்தி நடிகையும் தொலைக்காட்சிப் பேட்டியாளருமான சிமி ஹர்வாலுக்கு அளித்த தொலைக்காட்சி உரையாடல் ஒன்றின்போது தனது வாழ்வின் திறந்த பக்கங்களை வெகு இயல்பாக வெளிப்படுத்தியுள்ளார் ஜெயலலிதா.

ஒரு நடிகையின் மகளாகப் பிறந்து செல்வச் செழிப்பான வாழ்வு வாழ்ந்து பின்னர் குடும்பச் சூழலால் நடிகையானார். தனது குடும்பத்துக்காக தனது கனவுகளை துறந்தார். பின்னர் தாயாக வேண்டும், மனைவியாக வேண்டும் என்ற அவரது கனவுகளும்



கரைந்து விட்டன. இவரது வாழ்வின் இருண்ட பக்கங்கள் இங்கு அவசியமல்ல. எம்.ஜி.ஆரின் அடையாளமாக வெளிப்பட வேண்டும் என்று அரசியலுக்கு வந்த அவர் ஜெயலலிதா என்ற அடையாளத்தையே நிறுவி விட்டார். "அம்மா" என்றால் அது ஜெயலலிதாதான் என்ற அடையாளம் இன்று தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுவிட்டது. ஆணாதிக்க உலகத்தில் தனி ஒருத்தியாகத் தனது பயணத்தை துணிந்து தொடர்ந்தார். ஆண்கள் ஆக்கிரமித்த இந்திய அரசியலில் பெண்ணாக வெற்றி கொண்டார். எம். ஜி. ஆரின் இறப்பு கருணாநிதிக்கு வெற்றியாக இருந்தாலும், ஜெயலலிதாவின் வருகை அவரை ஆட்டங்காண வைத்தது. எம்.ஜி.ஆரின் பிம்பத்தை அவர் வெளிப்படுத்தாமல் தனக்கான ஒரு பிம்பத்தை உருவாக்கியே பயணித்தார். சாக்கடைகள் நிரம்பிய அரசியல் இவரையும் சாக்கடைக்குள் தள்ளியது. சுற்றம், சொந்தம் இவரது பலவீனங்களைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்டது. இவற்றிற்கு அப்பால் ஒரு காலகட்டத்தில் இந்தியாவின் பிரதமராவார் என்றளவிற்கு துணிச்சலாகப் பல முடிவுகளை எடுத்துள்ளார். இவரது வீட்டில் ஒரு சிறந்த நூலகமே உண்டு. இவரைப் பின்பற்றும் பல அரசியல்வாதிகள் நூலகத்தைப் பின்பற்றவில்லை. ஆங்கில அறிவு அபரிதமாகக் கொண்ட ஜெயலலிதாவின் மறைவு ஆணாதிக்க உலகில் ஒரு பெண்ணின் அடையாளத்தின், ஆளுமையின் மறைவு.

## பிடல் கஸ்ரோ

பிடலினைப் பற்றிய பல பதிவுகள் இங்கு வெளியாகியுள்ளன. 70களில் பேராசிரியர் கைலாசபதி பிடல் ருசியாவின் பல்நாட்டு விரிவாக்கத்தை ஆதரிப்பதாக குற்றஞ் சாட்டியிருந்தார். அப்போது இலங்கையில் சீன-சோவியத் இடது சாரி குழுக்களிடையே போட்டி நிலவியதால் இக்கருத்து அவ்வளவாக எடுபடவில்லை. எனினும் இக்குற்றச் சாட்டு மறுப்பதற்கல்ல. அதற்கு பின்னால் அமெரிக்க ஆக்கிரமிப்பில் இருந்து தன்னை காத்துக் கொள்ளவே என்ற காரணத்தையும் நிராகரிக்க முடியாது. 650 பேர் கொண்ட கியுப மக்களவையில் மூன்று பிரதான பதவிகள் உண்டு. இடது சாரிக் கட்சியின் தலைவர் (First Secretary of the Communist Party of Cuba), நாட்டின் தலைவர் மற்றும் அமைச்சர்களின் தலைவர் President of the Council of State and President of Council of Ministers. இப்பொழுது அவரது தம்பி இப்பதவிகளை வகிக்கின்றார். பிடல் இறந்த பின்னர் மியாமியில் வாழும் கியுபர்கள் பிடலின் இறப்பைக் கொண்டாடினார்கள். Tyrant, take your brother with you போன்ற சுலோகங்கள் கொண்ட பதாகைகளை இவர்கள் காவிச் சென்றனர். பிடலின் காலத்தில் ஆபிரிக்காவில் பல இடதுசாரிக் குழுக்களின் போராட்டங்களில் கியுபா பங்குபற்றியுள்ளது. எதியோப்பியா, கிரணடா, எரித்திரியா மற்றும் நிக்கரகுவா, எல் சல்வடோர், அங்கோலா போன்ற நாடுகளின் உள்நாட்டு யுத்தத்தில் கியுபா பங்களித்துள்ளது. இங்கு இடதுசாரி சார்பு குழுக்களையே கியுபா ஆதரித்துள்ளது.

பிடலுடன் போராடிய பல போராளிகள் வெற்றிக்குப் பின்னர் ஓரங்கட்டப்பட்டனர். சேகுவரா பின்னாட்களில் பொலவீயா போன்ற நாடுகளில் போராடச் சென்று விட்டார். பிடலுக்கும் இவருக்குமான முரண்பாடுகளே சேகுவராவின் வெளியேற்றத்துக்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

தொடர்ச்சி 40ஆம் பக்கம்...)



# டிவில்லியர்சுடன், டூபிலிசிஸ் இணைந்து வானவேடிக்கை நிகழ்த்தினார்

## விளையாட்டுத் தகவல்கள்



**எஸ். கணேஷ்**

தென் ஆபிரிக்கா அணிக்கு எதிரான நான்காவது ஒரு நாள் போட்டியில் 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி தோல்வியை சந்தித்துள்ளது. இப்போட்டி கேப்டவுனில் நடைபெற்றது. இதில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென் ஆபிரிக்கா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்ப வீரரான ஆம்லாவை குமரா 1 ஓட்டத்தில் ஆரம்பத்திலே வெளியேற்றினார். அடுத்து களமிறங்கிய டூபிலிசிஸ் ஆரம்பத்தில் இருந்தே அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவருக்கு ஈடுகொடுத்த மற்றொரு துவக்க வீரர் டிகாக் அரைசதம் கடந்து 55 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதற்கு அடுத்து வந்த டிவில்லியர்சுடன், டூபிலிசிஸ் இணைந்து வானவேடிக்கை நிகழ்த்தினார். இருவரும் இலங்கை அணியின் பந்து வீச்சை நாலாபுறமும் சிதறடித்தனர். இதனால் டிவில்லியர்ஸ் அரைசதம் கடந்து 64 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அடுத்து வந்த டுமினி 20 ஓட்டம் எடுத்து வெளியேறினார். ஒருபுறம் தென் ஆபிரிக்கா அணியின் விக்கெட்டுகள் விழுந்தாலும் மறுபுறம் டூபிலிசிஸ் தன்னுடைய அதிரடி ஆட்டத்தை விடவில்லை. இறுதியில் சதம் கடந்து 185 ஓட்டங்கள் எடுத்தபோது மடுசன்கா பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

தென் ஆபிரிக்கா அணி இறுதியாக 50 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 367 ஓட்டங்கள் குவித்து இலங்கை அணிக்கு ஒரு கடினமான இலக்கை வெற்றி இலக்காக நிர்ணயித்தது. ஆரம்ப வீரர்களாக டிக்வெல்லா மற்றும் தரங்கா களமிறக்கப்பட்டனர். இருவரும் அதிரடி காட்ட, இலங்கை அணியின் ஓட்டம் உயர்ந்தது. இதனால் இலங்கை அணி 58 பந்தில் முதல் விக்கெட்டுக்கு 100 ஓட்டங்கள் எடுத்து விக்கெட் இழப்பின்றி ஆடி வந்தது. 139 ஓட்டங்கள் எடுத்தபோது அரைசதம் கடந்த டிக்வெல்லா 58 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மெண்டிஸ் 29, வீரக்கொடி 58 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினர். இதனால் இலங்கை அணி வெற்றி பெறுவதற்கு வாய்ப்புகள் இருந்தன. இருப்பினும் அடுத்து வந்த வீரர்கள் சில்வா 5, குணரத்னே 38 ஓட்டங்கள் என வெளியேற இலங்கை அணி சற்றுத்தடுமாறியது. அடுத்து வந்த வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்கங்களில் ஆட்டமிழக்க இதனால் இலங்கை அணி வெற்றி பெற வேண்டிய போட்டியில் 48.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 327 ஓட்டங் கள் எடுத்து 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது. இலங்கை அணி சார்பில் அதிக பட்சமாக ஆரம்ப வீரர் தரங்கா 90 பந்தில் 119 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை தென் ஆபிரிக்கா அணி 4-0 என்ற கணக்கில் வென்றுள்ளது. ஆட்ட நாயகனாக மைதானத்தில் வானவேடிக்கை நிகழ்த்திய டூபிலிசிசுக்கு வழங்கப்பட்டது. இப்போட்டியின் இறுதியில் டி20 போட்டியில் எப்படி இருக்குமோ அது போன்று இருந்தது. பரபரப்பாக நடந்த இப்போட்டியில் இரு அணி வீரர்களும் வானவேடிக்கை நிகழ்த்தியதால், இது ஒரு நாள் போட்டியா, டி 20 போட்டியா என்று வர்ணையாளர்கள் வர்ணித்துள்ளனர்.




### அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இலங்கை டி20 அணி!

அவுஸ்திரேலியாவுடன் மோதும் 15 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இலங்கை கிரிக்கெட் ஆணையம் அறிவித்தது.

இம்மாதம் அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இலங்கை அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட டி20 தொடரில் பங்கேற்று விளையாடவுள்ளது. அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இலங்கை டி20 அணிக்கு உபுல் தரங்க அணித்தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். கடந்த ஒன்றரை வருடங்களின் பின்னர் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கா இடம் பிடித்துள்ளார்.

இதேவேளை தினேஸ் சந்திமால், தனஞ்சய டி சில்வா மற்றும் சுரங்க லக்மால் ஆகியோர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இலங்கை அணியின் விபரம்: உபுல் தரங்க (அணித் தலைவர்), நிரோஷன் டிக்வெல்ல, அசேல குணரத்ன, டில்ஷான் முணவீர, குஷல் மெண்டிஸ், மிலிந்த சிறிவர்தன, சச்சித் பத்திரண, சாமர கப்புக்கெதர, சீக்குகே பிரசன்ன, நுவான் குலசேகர, இசுறு உதாண, தசுன் சாணக்க, லக்ஷான் சண்டகன், லசித் மாலிங்க, விக்கும் சண்ஜய ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

### செரினா வெல்லும் 7வது அவுஸ்திரேலியா சாம்பியன் பட்டம்!!

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் சாம்பியன் பட்டம் வென்றார். மகளிர் ஒற்றையர் பிரிவில் நடந்த இறுதிப் போட்டியில் அமெரிக்க சகோதரிகளான செரினா வில்லியம்ஸ், வீனஸ் வில்லியம்ஸ் மோதினர். விறுவிறுப்பாக நடந்த ஆட்டத்தில் செரினா 6-4, 6-4 என்ற செட் கணக்கில் தனது சகோதரியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார். இது செரினா வெல்லும் 7வது அவுஸ்திரேலியா சாம்பியன் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமின்றி, இந்த வெற்றியின் மூலம் 23வது கிராண்ட் ஸ்லாம் மகளிர் ஒற்றையர் பட்டம் வென்று செரினா வரலாற்று சாதனை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அவுஸ்திரேலியா சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியதன் மூலம் செரினா தற்போது மீண்டும் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

**380**

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி முடிவுகள் அடிப்படையில் சர்வதேச டென்னிஸ் சங்கம் வீரர்-வீராங்கனைகளின் தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் காயத்திலிருந்து மீண்டு வந்து 2வது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்று சாதனை படைத்த அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (7,780 புள்ளிகள்) மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார். 4வது சுற்றில் தோல்வி கண்ட ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பர் (7,715) ஒரு இடம் சறுக்கி 2வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

செக் குடியரசு வீராங்கனை கரோலினா பிலிஸ்கோவா (5,270) 2 இடங்கள் ஏற்றம் கண்டு 3வது இடத்தையும், முதல் சுற்றில் தோல்வி கண்ட ருமேனியாவின் சிமோனா ஹாலெப் (5,073) 4வது இடத்திலும் உள்ளனர். மேலும், 3வது சுற்றில் தோல்வியை சந்தித்த சுலோவக்கியா வீராங்கனை சிபுல்கோவா (4,985) 5வது இடத்தை பிடித்துள்ளார்.



மகளிர் இரட்டையர் பிரிவில் 3வது சுற்றில் தோல்வி கண்ட அமெரிக்காவின் மாடெக் சான்ட்ஸ் பெதானி (10,135) முதலிடத்தில் தொடருகிறார்.

செக் குடியரசு வீராங்கனை சபரோவா (8,500) 6 இடங்கள் முன்னேறி 2வது இடத்தை தனதாக்கினார். இந்திய வீராங்கனை சானியா மிர்சா (6,525) 2வது இடத்தில் இருந்து 7வது இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

ஆடவர் ஒற்றையர் தர வரிசையில் அவுஸ்திரேலிய ஓபனில் 4வது சுற்றில் தோல்வியை சந்தித்த இங்கிலாந்து வீரர் ஆன்டி முர்ரே (11,540) முதலிடத்தில் உள்ளார். 2வது சுற்றில் தோல்வி கண்ட செர்பியா வீரர் ஜோகோவிச் (9,825) 2வது இடத்திலும் அரையிறுதியை எட்டிய சுவிட்சர்லாந்து வீரர் வாவ்ரிங்கா (5,695) முன்னேறி 3வது இடத்தையும் பிடித்துள்ளார். ஆடவர் இரட்டையர் பிரிவில் பிரான்ஸ் வீரர் நிகோலஸ் மகுட் முதலிடத்தில் தொடருகிறார்

## The man...

27ஆம் பக்கத்தொடர்ச்சி

முக்கியமானவை கருந்துளைகளின் நடவடிக்கைகளைப் பற்றியது (Behavior of black holes) ஆகும்.

மகன் மீது கொண்ட அதீத பாசத்தால் ராமானுஜனின் தாய் எடுத்த பிழையான முடிவுகளால் ராமானுஜன் கடும்நோய் ஏற்பட்டு 32 வயதில் இறந்தது எமக்கு ஒரு மாபெரும் இழப்பாகும். இன்னும் பல வருடங்கள் அவர் வாழ்ந்திருந்தால் எத்தனை கண்டுபிடிப்புக்களைக் கண்டு பிடித்திருப்பார்? உலகம் எவ்வாறு கணிதத்தில் முன்னேறி இருக்கும்?

இது மாணவர்களும் பெற்றோர்களும் கட்டாயமாகப் பார்க்க வேண்டிய படம்.



# சிவராத்திரி - சிவ விரதங்களில் சிறந்தது



நா. க. சிவராமலிங்கம்

சிவனைக் குறித்த விரதங்களில் மிகவும் சிறப்புடையதாக கருதப்பெறுவது சிவராத்திரி விரதமாகும். ராத்திரி என்ற சிறப்புடையன சிவராத்திரியும் நவராத்திரியுமாகும். ஒன்று ஆதி சிவனுக்குரியது. மற்றையது அவன் தேவிக்குரியது. சிவனுக்குரிய சிறப்பான இரவாகக் கருதப்பெறுவது சிவராத்திரி யாகும். இது நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, யோக சிவராத்திரி, மாத சிவராத்திரி, மகா சிவராத்திரி என ஐவகைப்படும்.

நித்திய சிவராத்திரி - ஒவ்வொரு மாதமும் தேய்பிறையின் போதும், வளர்பிறையின் போதும் வரும் சதுர்த்தசி இரவுகள் நித்திய சிவராத்திரி விரத நாட்களாகும்.

பட்ச சிவராத்திரி - தைமாதம் தேய்பிறையில் வரும் சதுர்த்தசி இரவு பட்ச சிவராத்திரி விரத நாளாகும்.

யோக சிவராத்திரி - சோமவார நாள் என்று கூறப்பெறும் திங்கட்கிழமையன்று பகலும் இரவும் அறுபது நாழிகையும் அமாவாசை திதியும் பொருந்திவரின் அது யோக சிவராத்திரி எனப்படும். இதனை வார சிவராத்திரி என்றும் கூறுவர்.

மாத சிவராத்திரி - இது மாதத்திற்கு மாதம் வேறுபட்ட திதி நாட்களில் இடம்பெறும் என்று கூறுவர்.

மகா சிவராத்திரி - அனைத்து சிவராத்திரி களிலும் சிறப்புடையது இதுவாகும். ஒவ்வொரு கற்பகால முடிவிலும் சிவன் பிரளயத்தை உருவாக்கி உயிர்கள் அனைத்தையும் சங்கரிக்கும் நாளே மகா சிவராத்திரி யாகும். ஒவ்வோர் ஆண்டும் உத்தராயணத்தில் வரும் மாசி மாத தேய்பிறை சதுர்த்தசி நாளன்று இரவு பதினான்கு நாழிகைக்கு மேல் பதினாறு நாழிகைக்குட்பட்ட வேளையே மகா சிவராத்திரியாகும்.

சிவராத்திரி பூஜை அசுவமேத யாகம் செய்த பலனைத்தரும். பிரமாவிற்கு சரஸ்வதியும், திருமாலுக்கு இலக்குமியும், சக்கராயுதமும் கிடைக்கப்பெற சிவராத்திரி பூசையே காரணமாகும்.

சிவராத்திரி நான்கு காலப் பூஜைகளில் 11:30 க்கு மேல் 1 மணிவரை நடைபெறும் சிவபூஜை சிறப்புடையது. இந்தப் பூஜா காலம் இலிங்கோற்பவ காலம் எனவும் அச்சமயம் செய்யப்படும் சிவபூஜை தரிசனம் சிவரூப தரிசனம் எனப்படும்.



சிவராத்திரி காலத்தில் உளத்தூய்மையாய் புறத்தூய்மையுடன் திருவைந்து எழுத்து ஓதுதல், சிவன்கோயில் தரிசனம், சிவபூசை செய்தல், திருமுறைகள் ஓதுதல், கூட்டுவழிபாடு செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ளுதல் சிறந்த பலனைத்தரும்.

பிரமன், அரி அடிமுடி தேடி அறியமுடியாது அவர் மத்தியில் அரன் அனற்பிழம்பாகக் காட்சி தந்து தினம் சிவராத்திரி தினமாகும். இதனை மணி வாசகர் பின்வருமாறு பாடுகின்றார்.

**அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர் கட்கும்**
**தெரிக்கும்படித்து அன்றி நின்ற சிவம் வந்து நம்மை**
**உருக்கும் பணி கொள்ளும் என்பது கேட்டு**
**சிரிக்கும் திறம்பாடித் தெள்ளேணம்**
**உலகமெல்லாம் கொட்டாமோ**

செருக்கால், தருக்கால், அகந்தையால் அல்லலுற்றவர் தமை அடக்கி அடிபணிய செய்தவர் சிவன்.

**பிரமன் அரி என்று இருவரும் தம் பேதமை யால்**
**'பரமம்' யாம் பரமம் என்ற அவர்கள் பதைப்பு ஒடுங்க**
**அரனார் சுழல் உருவாய் அங்கே அளவு இறந்து**
**பரம் ஆகி நின்றவா – கோ ணேக்கம் ஆடா மோ'**

தென்னாடுடைய சிவன் என் நாட்டவர்க்கும் இறைவன். சிவராத்திரி என்றதும் நம் மனக் கண்ணில் திருக்கேதீஸ்வரமும் கேதாரநாதரும் பாலாவித் தீர்தமும் விரிவது இயல்பு.

# வலன்ரைன் தின வரலாறு எவ்விதம் மக்களோடு ஒட்டிக்கொண்டது

-த. சிவபாலு

வலன்ரையன் தினம் பற்றிப் பல்வேறு கதைகள் மக்கள் மத்தியிலே உலாவி வருகின்றன. ரோம நாட்டிலேயே இந்தக் கதைகளின் உருவாக்கம் இடம்பெற்றுள்ளது. ரோம நாட்டில் கிறிஸ்துவுக்கு முன்னர் பன்னிரண்டு தெய்வங்களை வழிபடும் முறை இருந்துவந்துள்ளது. இதற்கு ரோம சக்கரவர்த்திகள் முழு ஆதரவையும் கொடுத்ததோடு, ரோம் நாட்டு பிரபுக்களும் இதற்கு முழுப்பலம் சேர்க்கும் விதமாகச் செயற்பட்டுள்ளனர். ரோம நாட்டின் காதல் தெய்வங்களாக லுபேர்கஸ் மற்றும் பவுனஸ் ஐயும் விவசாயத்திற்கான தெய்வங்களாக ரொமுலஸ் மற்றும் ரேமஸ்ஐயும் கொண்டிருந்தனர். ஆதிகால ரோம சக்கராதிபத்தியத்திலேயே "வலன்ரையன்" நாள் பெப்ரவரி 14ல் கொண்டாடப்பட்டுள்ளது எனக் கொள்கின்றனர். ரோமர்கள் 'யுனோ' என்னும் தெய்வம் பெண்களின் தெய்வமாகவும் திருமணத்திற்கான தெய்வமாகவும் கொண்டிருந்தனர். அது பெப்பரவிரி 14ம் நாள் காண்டாடப்பட்டு வந்துள்ளது. அதற்கு அடுத்த நாள் பிள்ளைப்பேற்றுக்கான தெய்வமாக லுபேர்கஸ் மற்றும் பவூனஸ் கொண்டாடப்பட்டுள்ளனர்.

இந்த நடைமுறை இளைஞர்களும் இளம் யுவதிகளும் மிகவும் இறுக்கமாக தனிமைப் படுத்தப்பட்டிருந்தமையால் அவர்களை ஒன்று சேரும் விழாவாக இந்த நிகழ்வு இடம்பெற்று வந்துள்ளது. இந்த விழாவில் திருமணப் பருவமடைந்து பெண்களின் பெயர்கள் எழுதப்பட்டு ஒரு சாடியில் இடப்பட்டிருக்கும் அதில் ஒன்றை ஒவ்வொரு இளைஞனும் எடுத்து யாருடைய பெயர் எழுதப்பட்டிருக்கின்றதோ அப்பெண்ணோடு இணைத்துச் சோடி சேர்த்து அந்த விழாக் காலத்தில் ஒன்றாக இணைந்துகொள்ளவர். இது சிலவேளைகளில் ஓராண்டிற்கும் நீடிப்பதாக அமைந்திருக்கும். அவர்கள் ஒருவரோடு ஒருவர் காதல் கொண்டால் அவர்கள் திருமணம் செய்துகொள்வர். இதனை ஒரு கிறிஸ்தவ மரபாகக் கைக் கொண்டனர். இத்திருமணங்கள் இடத்தினால் தீர்மானிக் கப்படுகின்றது அது அவர்களுக்குக் கிடைக் கும் வாய்ப்பாகக்




கொள்ளப்படவில்லை. இது வலன்ரையனால் ஆக்கப்பட்டதல்ல என சில வரலாற்று ஆசிரியர்கள் கருது கின்றனர். ஆனால் இது அவரது காலத்தில் முனைப்புற்றிருந்தமையால் அவரின் பெயரைப் பெற்றுக்கொண்டது எனவும் கருது கின்றனர். வலன்ரையன் ரோம சக்கரவர்த்தி 2ம் குளோடியஸ்சின் போருக்காக எல்லா ஆண்களும் அவர்களது மனைவியரை விட்டு விலகி இராணுவத்தில் இணைய வேண்டும் எனக் கட்டளையிட்டமையை வலன்ரையன் கடுமையாக எதிர்த்ததோடு திருமணம் செய்துகொள்ளக் கூடாது என விதித்த சட்டத்திற்கு விரோதமாக அவர் திருமணங்களை நடத்திவைத்தார். இதனை விட வேறு ஒரு கதையும் நிலவுகின்றது.

குளோடியஸ் மன்னன் ரோம நாட்டினைச் சேர்ந்த எல்லோரும் கிறிஸ்துவை வணங்கக் கூடாது எனவும் பன்னிரண்டு தெய்வங்களையும் கண்டிப்பாக வணங்க வேண்டும் என்று கட்டளை இட்டான். அத்துடன் கிறிஸ்தவ மதத்தோடு தொடர்பு வைத்திருப்போர் களுக்கு மரணதண்டனை எனவும் பிரகடனப் படுத்தி இருந்தான். ஆனால் வலன்ரயன் தன்னை கிறிஸ்த்தவ மதக்கொள்கையோடு அர்ப்பணித்துக் கொண்டார். மரணதண்டனைப் பயமுறுத்தல்கூட அவர் கொண்டுள்ள நம்பிக்கையைப் பின்பற்றுவதில் இருந்து தடுத்துவிடவில்லை. வலன்ரையன் ஒரு மதத்துறவி. ரோம நாட்டின் போர்வீரர்கள் திருமணம் செய்யக் கூடாது எனக் கடுமையான கட்டுப்பாட்டை குளோடியஸ் விதித்திருந்ததை எதிர்த்துப் போர்வீரர்களுக்குத் திருமணம் செய்துவைத்தார். அதனால் அவர் கைது செய்யப்பட்டார்.

அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தவேளை அவரது வாழ்வின் இறுதிக்கிழமை குறிப்பிடத்தக்க அற்புத நிகழ்வுகள் நடைபெற்றன. சிறைக் காவலர் பிறவிக் குருடான தனது மகள் யூலியாவை அவரிடம் கல்வி பயில அழைத்து வந்தார். வலன்ரயன் யூலியாவிற்கு ரோம வரலாறு, கணிதம், இயற்கை யின் நியதி, கதைகள் என்பவற்றோடு கடவுளைப்பற்றியும் கூறினார். வலன்ரயன் மூலம் உலகை அறிந்து கொண்டார் யூலியா.

யூலியா ஒரு நாள் மிகுந்த ஆதங்கத்தோடு "வலன்ரினஸ் கடவுள் உண்மையிலேயே எமது பிரார்த்தனைகளைச் செவிமடுப்பாரா? கேட்டவற்றைத் தருவாரா?" என்று கேட்டார். அதற்கு அவர் "ஆம் என் குழந்தாய், அவர் ஒவ்வொருவரது பிரார்த்தனையையும் செவிமடுப்பார்" என உரைத்தார். "நான் இறைவனிடம் என்னத்தை வேண்டுகின்றேன் என்றால் எனக்குப் பார்வை வரவேண்டும். உலகத்தை நான் பார்க்கவேண்டும். நீங்கள் கூறியவை எல்லாவற்றையும் எனது கண்களால் பார்க்கவேண்டும்" என்று யூலியா கூறினார். அதற்கு வலன்ரயன் "நாங்கள் கடவுள் மீது உண்மையான நம்பிக்கை வைத்தால் அவர் எங்களுக்குச் சிறந்தது எதுவோ அதனைச் செய்வார்" என்று விடை அளித்தார். யூலியாவோ "நான் கடவுளை உண்மையாகவே நம்புகின்றேன்" என உரக்கக் கூவிக்கொண்டே முழந்தாளிட்டு அவரது கைகளை இறுகப்பற்றிக் கொண்டார். அவர்கள் அமைதியாக இருந்தபோது சிறைக் கூடுகளிடையே மிகப்பிரகாசமான ஒரு ஒளி பரவியது. யூலியாவோ "எனக்குக் கண்பார்வை கிடைத்து விட்டது" என ஆனந்தமாக ஆர்ப்பரித்தார். வலன்ரயன் எழுதிய இறுதி மடலில் "ஆண்டவனுக்கு நெருக்கமாக இருந்துகொள். உனது வலன்ரயன்" என யூலியாவுக்கு எழுதியி ருந்தார். அவர் கி.பி. 270 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ம் நாள் இறைவனடி சேர்ந்தார். அத்தினமே அவரது நினைவு தினமாகவும் புனித காதலர் தினமாகவும் உலகெங்கும் உள்ள மக்களால் நினைவுகூரப்படுகின்றது.

வலன்ரையன் யூலியாவிற்கு எழுதிய கடிதம் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் கண்டு

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)

## இதயபூர்வமாக.........

19ஆம் பக்கத் தொடர்ச்சி.....

(நன்றி மட்டுமல்லா மல் அன்பு, கருணை, சுயஇரக்கம் போன்றவையும் இதயத்தோடு தொடர்புபட்டதாகும். இந்த உணர்வுகளை நாம் உணர்வதன் மூலம் நாம் இதயத் தோடு இணைந்திருக்க முடியும். அப்படிப் பட்ட உணர்வுகளின்போது எமது இதயத் துடிப்பு சீராக இருக்கும்). நீங்கள் ஏதாவது மூன்று விடயங்களுக்கு நன்றி செலுத்த லாம். இப்பொழுது நீங்கள் இதயத் துடன் இணைந்து விட்டிருப்பீர்கள். அதன் பின்னர் உங்கள் வாழ்க்கையில் எது நிகழ வேண்டும் அல்லது எதையாவது பெற வேண்டும் என்ற உங்கள் விருப்பத்தை மனதில் எண்ணுங்கள்.

நாம் நன்றி யுணர்வுடன் எமது விருப்பத்தை இணைத் து தியானிக்கும்போது அந்த விருப்பம் எம்மை வேகமாக வந்தடையும். ஒவ்வொரு நாளும் நாம் இவ்வாறு தியானித்தால் எமது இதயம் மேலும்



திறக்கப்படும். நாம் எதைப்பற்றியாவது வைத்திருக்கும் கோபம், பயம், கவலை போன்றன ஒரு தடையாக இதயத்தைச் சூழ்ந்து இருக்கும். இவற்றை நாம் ஒரு சுவர் எனக் கூறுகின்றோம்.


அவற்றை நாம் நீக்கும்போது இதயம் திறத்தல் எனக் கூறுகின்றோம். அப்பொழு-துதான் எமது உண்மையான சக்தியை நாம் உணரக்கூடியதாக இருக்கும். அதனால் தான் இதயம் சார்ந்த தியானம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

## கல்லைக் கண்டால்.....

20ஆம் பக்கத் தொடர்ச்சி.....

rence) இவர் வடிவமைத்து எழுப்பிய மெடிசி தேவாலயம் ஆகும். பல ஆண்டு கள் ரோம் நகரிலுள்ள புனித பீட்டர் தேவா லயத்தின் தலைமைக் கட்டிடக் கலைஞரா கவும் இவர் பணிபுரிந்தார். இவர் எழுதிய கவிதைகளில் சுமார் 300 கவிதைகள் பத்திரப் படுத்தப் பட்டிருக்கின்றன.

போப் பாண்டவர்களும், சமயச் சார்ப்பற்ற அரசர்களும் கலைப்படைப்புகளை வடிவ மைக்கவும் உருவாக்கவும் இவரை அழைத் தனர். ஓவியர் என்ற முறையில், நேர்த்தி யான கலைப்படைப்புகளைப் படைத்ததி லும், பிற்கால ஓவியர்கள் மீதும் தம் செல் வாக்கைச் செலுத்தியதிலும் மைக்கேலாஞ்-சலோ சிகரத்தை எட்டினார். ரோம் நகரிலுள்ள சிஸ்டன் தேவாலயத்தின் உள் முகடுகளை அலங்கரிப்பதற்கு இவர் வரைந்துள்ள மேல் மண்டப ஓவியங்கள்,



வரலாற்றில் தலைசிறந்த கலைப்படைப்புச் சாதனங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அதனை 95அடி உயரத்தில் படுத்திருந்து ஓவியம் முழுவதையும் வரைய 4 வருடங் கள் பிடித்தன. மைக்கேலாஞ்சலோவோ தம்மை ஒரு சிற்பி என்றே கூறிக் கொண் டார்.

பல திறனாய்வாளர்களும் இவரை ஒரு தலை சிறந்த பல் கலைநுட்ப சிற்பக் கலைஞர் என்றே கருதுகிறார்கள். மனைவி குழந்தைகள் பற்றி வினாவிய போது: "ஓவியமும் சிற்பமும்தான் எனக்கு வாழ்க் கைப்பட்ட மனைவி, என்னுடைய படைப் புகள் தான் நான் இந்த உலகிற்கு விட்டுச் செல்லும் எனது குழந்தைகள் அவற்றுக்கு அவ்வளவாக மதிப்பு இருக்காது என்றாலும் அவற்றில் நான் என்றென்றும் வாழ்வேன்" என்று பதிலளித்தார். சிற்பக் கலையில் உள்ள நாட்டம் பற்றி வினாவியபோது: "நான் தாய்ப்பாலுடன் உளியையும் சுத்திய லையும் சேர்த்துக் குடித்துள்ளேன்" என்று பதிலளி த்தார். "I sucked in chisels and hammers with my nurse's milk."

இவர் 1564 ஆம் ஆண்டில், தனது 89 ஆம் பிறந்த தினத்திற்குச் சற்று முன் காலமானார். இவர் திருமணம் செய்து கொள்ளாமலே வாழ்ந்தார். இன்றும் மக்கள் நினைவு கூருவதற்குக் காரணம் மைக்கேலா ஞ்சலோ திறமையான சிற்பி, ஓவியர், கட்டிடக் கலைஞர், கவிஞர், மற்றும் பொ-றியாளர் போன்ற பல்கலைகளை இயல்பா கவே கொண்டவர். (Michelangelo was an Italian Greatest Sculptor, Painter, Architect, Poet, and Engineer).

## தலைவலிகள்...

34ஆம் பக்கத் தொடர்ச்சி.....

போதல், தலைக்காயம், பார்வை மாற்றம், நடத்தையில் மாற்றம், பக்கவாதம் ஏற்படல், வலுவிழந்து போதல் என்பன அவசியமான சிகிச்சைக்குரியனவே.

நல்ல ஓய்வும், நீர் குடித்தலும் முதல் தரத்தேவை. மனஇறுக்கத்தைக் குறைத்தல், மூக்கில் சளியை குறைத்தல், சூடான அழுத்திகள், மசாஜ் செய்தல் நல்ல பலனைக் கொடுக்கும். அடிக்கடி வருகின்ற ஒற்றைத் தலைவலி எனில் இருட்டு அறையில் படுத்துக் கொள்ளலாம். இன்று ஒற்றைத் தலைவ-லியால் பலர் அவஸ்தைப் படுகின் றார்கள். இது 'Migraine' எனப்படும். இத்தலைவலி வரும்போது பார்வை மங்கும், வயிற்றைக் குமட்டும், ஒருபக்கத்தில் வலி ஏற்படும். இவ் வலியால் மனோநிலை குழப்பம் ஏற்படலாம். உளச்சோர்வும் (Depression) ஏற்படலாம். பதட்டமும் நிகழும். சிலருக்கு நீண்டகால வலி (Chronic Pain) இருக்கும்.
காலையில் எழும்பும்போது ஏற்படும் தலை வலிகளே (Early morning headaches) இன்று முதன்மையா பிரச்சினைகளாக உள. 131 வகையான காரணங்களால் காலையில் தலைவலி ஏற்படுவதாக மருத்துவ அறிக்கை கள் கூறுகின்றன.

நடுக்காதில் ஏற்படும் தொற்று நோய், நடுக் காது வீக்கம், பதட்டம், காபன் மொனாக்சைட் சுவாசிப்பு, கடும் வெப்பம், நீரிழிவு, திகில்




ஏற்படல், மனஇறுக்கத் தலை வலி, மலச் சிக்கல், உணவு, நஞ்சாதல், மருந்துகளின் பக்கவிளைவு, களைப்பு, இரும்புச்சத்துக் குறைபாடு, சிறுநீரகநோய், ஈரல்நோய், உயர் இரத்தஅழுத்தம், உளச் சோர்வு, பக்கவாதம், ஒவ்வாமை பிரச்சினை, இதயத்துடிப்பு ஒழுங் கீனம், அல்சர், குடலில் வாய்வுக்கோளாறு, சூரியத்தாக்கம், ஒருபக்க வலி, கிட்டப்பார் வையுள்ளவர்கள், மூச்சுக் குந்தகம், குறைந்த இரத்த அழுத்தம், கூடுதலான மருந்துப்பா வனை, கண் அழுத்தம், பக்ரீயா தொற்று நோய், மஞ்சள்காமாளை மெலிவு ஏற்படல், கணைய புற்று நோய் நஞ்சுப்பாவனை, மூளையில் இரத்தப் பெருக்கு, மூளையில் கட்டி ஏற்படல், பிளேக் நோய், பறவைக் காய்ச்சல், குடல்புற்று நோய் என்று சொல் லிக்கொண்டே போகலாம். இது ஒரு முடிவற்ற விடயம்.

காலையில் தலைவலியுடன் எழும்புவர்கள் சிலவற்றினை கவனத்தில் கொள்ளலாம். ஒவ்வொரு 70 அவுன்ஸ் நீர் எடுத்துக் கொள் ளல் அவசியம். பலர் இப்படியான முறையில் நீரருந்துவது இல்லை என்பதே உண்மை. இரவில் படுக்கும் தலையணை கூட முக்கியம். சிலர் 2 தலையணைகளை போட்டுக் கொண்டுபடுப்பர். இதனால் இரத்தம் தலைப் பகுதிக்கு செல்லாது போய்விடும். இரவில் சிலர் பற்களை கடித்துக் கொண்டிருப்பர்.

சிலருக்கு மூளையுள் கட்டி இருக்கும். இது ஆரம்பத்தில் தெரியவராது. கர்ப்பமுற்றவர்கள் தமது இரத்த சுற்றோட்டத்தை கவனிப்ப தில்லை. எவரைப் பார்த்தாலும் நேரமில்லை என ஓடிக்கொண்டிருப்பர். மனஅழுத்தம் மிஞ்சும். அதுபற்றி அவர்களுக்கு கவலை யில்லை. உடலில் சோடியம் (Sodium) குறைவாக சிலருக்கு இருக்கும். சிலர் ஒழுங்காக நித்திரை செய்வதில்லை. படுக் கையை சிந்திக்கும் கூடமாக மாற்றி விடுவர். இரவு முழுவதும் குடிப்பதே சிலரின் வேலை. அதனை நிறுத்த முடிவதில்லை. குடித்த பின்பு மறுநாள்படும் வேதனைகள் சொல்லி முடிவதில்லை. மூச்சுப் பகுதியில் எழும் பிரச்சினைகளை கவனிப்பதில்லை. ஒவ்வாமை இருக்கின்றதென்று தெரிந்தும் அந்த உணவை உண்ணுதல் சிலருக்குப் பழக்கம். பலருக்கு உயிர்ச்சத்து D குறைவாக உள்ளது. சூரிய வெளிச்சம்படாதிருத்தல், மீன் உணவுகளை எடுக்காமல் விடுதல் என்பவற் றால் தலைவலிக்கு உள்ளாவர். பெண்களு க்கு மாதவிடாய்க்காலம் தலை வலிக்காலம் தான். இவ்வேளையில் ஈஸ்ற்றோஜன் என்ற சத்து குறைகிறது. பிழையான முறையில் படுத்தலும்கூடாது. உணவு முக்கியம். மூச்சு குந்தகம் (Sleep Apnea) வராது பார்க்க வேண்டும்.

தலைவலி இல்லாதவர்கள் இல்லை என்ற அளவுக்கு மக்கள் வாழ்வு அமைந்து விட்டது. தலையும், மூளையும் இருக்கும் வரையில் ஏதோ ஒரு விதத்தில் தலைவலியும் வந்து சேர்ந்து விடுகிறது. எப்படியிருப்பினும் இதனைப் போக்கி மகிழ்ச்சியாக வாழ்வது சிறப்பாகும்.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



# வலன்ரைன்...

37ஆம் பக்கத் தொடர்ச்சி.....

பிடிக்கப்பட்டு வலன்ரையனை நினைவு கூரும் முகமாகவும் இந்த 'காதலர் தினம்' கொண்டாடப்படுகின்றது என்னும் கதையும் உண்டு.

இதற்குப் பிறிதாக வலன்ரையன் பற்றி என்னுமொரு கதையும் உண்டு. இரண்டாவது குளோடியஸ் மன்னனுக்கு எதிராக சிறையில் இருந்த கிறிஸ்தவர்களை இரகசியமாக விடுதலை செய்தார் எனவும் அது மன்னனுக்குத் தெரியவரவே அவர் அடித்து உதைக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு மரண தண்டனை தீர்க்கப்பட்டு கொல்லப் பட்டார். ரோமிலிருந்து ஐரோப்பாவெங்கும் கிறிஸ்தவம் பரவிய வேளை வலன்ரயன் ஒரு நாயகனாகக் காணப்பட்டு இதனால் போப் செலலியஸ் அவர்களால் பெப்ரவரி 14ஆம் நாள் கி.பி. 498ம் ஆண்டு வலன் ரையின் புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட் டார். இதன் பின்னர் லுபேர்கலியா (Lupercalia) விழா பெப்பரவரி 15ம் நாளுக்கு மாற்றப்பட்டது. இதனால் விவ சாயிகளின் பெருநாளாகக் கொண்டாட் பபட்ட பேகன் விழா முடிவுக்கு வந்தது.

காதலர் தினத்திற்குப் பல்வேறு வராற்றுப் பதிவுகள் கர்ண பரம்பரைக் கதைகள் வாயிலாக மக்கள் மத்தியில் நிலவி வருவது கண்கூடு. எனினும் 14ம் நூற்றாண்டுவரை காதலர் தினம் பிரபலமடைந்திருக்கவில்லை. ஆனால் 14ம் நூற்றாண்டில் 'காதல்' என்பதோடு தொடர்புடையதாக கிறிஸ்தவ பெருநாள் இடம்பெறத் தொடங்கியது. மத்தியகால வரலாற்று ஆசிரியர் கென்றி ஆன்ஸ்கார் கெலி அவர்களின் author of Chaucer and the Cult of Saint Valentine என்ற நூலில் சௌசரைப் பற்றிக் குறிப்பிட்டு அவர்தான் வலன்ரையனை முதலில் தொடர்பு படுத்தியவர் என்பதிலி ருந்து அது பிரபலமடையத் தொடங்கியது. அத்தோடு பெப்பரவரி மாதம் பறவைகள் இனப்பெருக்கத்தில் ஈடுபடும் காலமாகவும் கொள்ளப் பட்டு அதனை காதலோடு தொடர்புபடுத் தப்பட்டதாக பெப்பரவரி 14 முதன்மைப்படுத் தப்பட்டுள்ளது என்பதும் கருத்திற்கொள்ளற் பாலது.



1381இல் இங்கிலாந்து இளவரசன் இரண்டாவது றிச்சாட்டுக்கும் பொகிமிய இளவரசி ஆனுக்கும் திருமண உடன்பாடு ஏற்பட்டதனைக் கௌரவிக்கும் முகமாக சௌசரால் இசையமைக்கப்பட்ட பாடல் பெப்பரவரி 14ம் திகதியோடு தொடர்புடையதாக "The Parliament of Fowls" "The Royal engagement" "the mating season of birds" and 'Valentine's Day என்பன வெல்லாம் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன. அவை அனைத்தும் பெப்ரவரி 14 அடிப்படையாகக் கொண்டுள் ளன என்பதும் கருத்திற்கொண்டு ஆய்வு நடத்துவதால் மட்டுமே "காதலர் தினம்" எப்போது ஆரம்பமானது என்பதனை அறிந் துகொள்ள முடியும்.

# இரண்டு மில்லியன் டொலர் அன்பளிப்புச் செய்த ஈழத் தமிழன்

ரொறொன்ரோ பல்கலைக்கழகத்திற்கு (ஸ்காபறோ வளாகம்) ஈழத்தமிழர் ஒருவரால் இரண்டு மில்லியன் டொலர் நிதி அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. ரொறொன் ரோ பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி கற்கை நெறிகளை ஊக்குவிக்கும் நோக் கில் இந்த நிதி அன்பளிப்பு செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தின் பழைய மாணவரான கலாநிதி ரவி குகதாசன் என்ற ஈழத்தமிழரே இந்த நிதி அன்பளிப்பை வழங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. குறித்த நிதியினைக் கொண்டு தமிழ் மொழிக் கற்கை நெறிகளை விரிவுபடுத்த முடியும் எனவும், ஈழத்தமிழர்களின் கலை, கலாச்சாரம் உள்ளிட்ட விடயங்கள் ஏனைய சமூகத்தவர்களுக்கு எடுத்துக் காட்டமுடியும் எனவும் ரொறொன்ரோ பல்கலைக்



கழகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.



1974ஆம் ஆண்டு வடக்கு மாகாணம் இலங்கையை விட்டு வெளியேறிய கலாநிதி ரவி குகதாசன் கனடாவில் குடியேறிய பின் 1978ஆம் ஆண்டில் ரொறொன்ரோ பல் கலைக்கழகத்தில் இணைந்து கொண் டார். 1982ஆம் ஆண்டில் ரொறொன்ரோ பல் கலைக்கழகத்தில் B.Sc. பட்டம் பெற்ற இவர், 1986ஆம் ஆண்டில் ரொறொன்ரோ பல்- கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டமும் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை 51 ஆண்டுகால வரலாற்றில் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்திற்குத் தனி நபர் ஒருவரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற மிகப் பெரிய அன்பளிப்பு இதுவே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Math tutorial 337

Answers to tutorial 336

1)There are 4 birds and 3 branches, if one bird sits on one branch then one bird has no branch to sit ,if they sit 2 in one branch then one branch will be left free

2)Use the formulae

$Cos2A = 2cos^2A - 1$ ,then $cos(\pi/4) = 2cos^2(\pi/8) - 1$.therefore

$2cos^2(\pi/8) = 1 + cos\pi/4) = 1 + 1/\sqrt{2}$

$Cos(\pi/8) = \sqrt{(\frac{\sqrt{2}+1}{2\sqrt{2}})}$

3)$\bar{u}=(2,2,-1)$, $\bar{v}=(3,-1,0)$, $\bar{w}=(1,7,8)$ Ls $=\bar{u}.(\bar{u}+\bar{w}) = (2,2,-1).(4,6,8)$

$=8+12-8=12$. Rs$=\bar{U}.\bar{V}+\bar{U}.\bar{W}$

$=6-2+2+14-8=12$,therefore

$\bar{u}.(\bar{v}+\bar{w}) = \bar{u}.\bar{v}+\bar{u}.\bar{w}$

4)The number of three letter words possible is$26^3$,therefore the number of 3 letter words thatdo not contain either a,e,i,o,u or y is $20^3$. Therefore 3 letter words that contain at least one ofa,e,I,o,u,ory is$26^3-20^3=9576$ similarly of 4 letter words is $26^4-20^4=296976$

Tutorial 337Questions

1)When 20 litres are added to a gas tank ¼ full, the tank is 2/3full. What is the capacity of the tank ?(for gr 6)

2)A palindrome is a number which remains the same when its digits are written in reverse order. For example 131 is a palindrome.A car odometer reads 15951.Find the least number of miles required for the next palindrome to appear?

(for gr 6-10)

3)If $f(x)=x^3+x^2+x$ ,$g(x)=x+2$ ,$h(x)=5$

Then calculate the expression for

$[(f+g).h](x)$

4)Prove$2cos(\frac{3\pi}{2}+x)sin(\pi+x)=c0s2x-1$

By Mr s.f.xavier (teacher)tel 6473409490/4167322228







இன்று மழை வருமா வராதா?
இன்று பனி கொட்டுமா கொட்டாதா?
இன்று எனது பென்சன் காசு எக்கவுண்டுக்கு வருமா வராதா?
ஒவ்வொருவரின் மனதில் தோன்றுவது இயற்கை!



இப்போ தமிழர் குறிப்பாக செய்தி, நாடகம், சீரியல் இது அது என பார்ப்பவர்களின் சிந்தனையில் நாளை தமிழக முதல்வர் பன்னீர் செல்வமா? சின்னம்மாவா? அதாவது சசிகலாவா?



ஆட்டிலறி அன்னம்மாவுக்கு சசிகலாவின் வார்த்தைகள் எதிரொலித்துக் கொண்டேயிருந்தது.



இதுவரை நான் இருந்தது பொறுமை என்ற செய்தித்தொடரை வாசித்த ஆட்டிலறி அன்னம்மா..இதுவரை அவ இருந்தது பொறுமை இல்லாட்டா ஆகிடுவா எருமை என சிரித்துக்கொண்டு பஞ்ச் டயலொக் பேசினா...

உலகர் தனக்குள் சிரித்துக்கொண்டார்....பதவிக்காக தமிழக சட்டமன்ற உறுப்பினர்களையே அடைத்து வைத்திருக்கும் உவர்களா? போர்க்காலத்தில் காணாமல் போன தமிழ் இளைஞர்களை கண்டுபிடித்துத் தரப்போகிறார்கள்? அல்லது சிறை வைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுதலை செய்யப்போகிறார்கள்.

இன்றுவரை (பதவியை ராஜினாமா செய்த) முதலமைச்சர் பன்னீர் செல்வத்தை பதவி பறிக்க இருக்கும் சசிகலா 'கருங்காலி குழுவினர்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

கருங்காலியில் வீடு கட்டுதல், தளபாடங்கள் செய்கின்றனர் கறுப்பு நிறமுடையது. இரும்பைப்போலப் பலமானது. கருங்காலியில் உலக்கை செய்கின்றனர். முதலமைச்சர் ஓ.பி.எஸ் பன்னீர் செல்வத்தை சசிகலா மறைமுகமாக உலக்கை எனக் குறிப்பிட்டாரோ?

'ஏற்பது இகழ்ச்சி' என ஔவையார் எத்தனை வருடங்களுக்கு முன் சொல்லிவைத்தார்.
புளோரிடாவில் உள்ள முஸ்லிம்களின் மன்றம் ஒன்று ரொனால்ட் ட்றம் வழங்கிய நிதியை வாங்க மறுத்துள்ளது.
தமிழகத்தில் நடைபெறும் தில்லுமுல்லை விட அமெரிக்காவும் ரொனால்ட் ட்றம் போடும் திட்டமும் நடைமுறையும் சிக்கலில் உள்ளன.

நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று அதனாலே முழிக்குது அம்மா பொண்ணு



என பாட்டை முணுமுணுத்துக்கொண்டிருந்தா ஆட்டிலறி அன்னம்மா.
சொத்துக்குவிப்பு வழக்கில் கர்நாடகா சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி மைக்கேல் ஜோன் கும்ஹா வழங்கிய தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. பல விவாதங்களின் பின் முன்னைய தீர்ப்பே சரியானதென தீர்ப்பளிக்கப்பட்டது. அதாவது சசிகலாவிற்கு 4 வருட சிறைத்தண்டனையும் 10 கோடி ரூபாய் தண்டனையும் வழங்கப்பட்டது.



உலகண்ணை உந்தக்காசு அவ குவிச்ச சொத்துக்காசிலைதானே கட்டுவ? என்றா செக்கண்ட்புளோர் செல்லம்மா. லுக்...இஞ்சை பாருங்கோ நீதன்சானுக்கு 4,765 வோட் விழுந்திருக்கு என ஐபொட் அகிலாண்டேஸ்வரி சொல்ல உலகரும் ஆட்டிலறி அன்னம்மாவும் ரி.வி.யில் நீதன் சானின் பேட்டியைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

ஞாபகம் இருக்கிறதா? பெப்ரவரி 15 - 28.

16. ஈழத்து சிறுகதை எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் பிறந்தநாள்.

16. 2000 ஆம் ஆண்டில் தர்மபுரி 3 மாணவிகளை உயிரோடு பஸ்சில் எரித்துக் கொலை செய்த குற்றத்திற்காக அ.தி.மு.க.வினர் மூவருக்கு தூக்குத்தண்டனையும் வழங்கப்பட்டது. ஏனைய 25 பேருக்கு 7 வருட சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது.

18. 1992 ஆம் ஆண்டு 12 வருடத்திற்கொருமுறை கும்பகோணத்தில் கும்பேசுவார ஆலயத்தில் மகா குளத்தில் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா கலந்துகொண்டபோது சன நெரிசலில் 90 பேர் இறந்தனர்.



21. அனைத்துலக தாய்மொழி நாள்

22. காதல் மன்னன் ஜெமினி கணேசன் நினைவுதினம் (2005)



22. அமெரிக்க முதல் ஜனாதிபதி ஜோர்ஜ் வோசிங்டன் பிறந்தநாள் (22-பெப்-1732 14-டிசம்பர்-1799)

22. கோவை மகேசன் சுதந்திரன் பத்திரிகை ஆசிரியர் நினைவுதினம்.

24. மஹா சிவராத்திரி



26. அண்ணை றைற் TVI YT லிங்கம் புகழ் கே.எஸ் பாலச்சந்திரன் நினைவு தினம் (1944-2014) - ஈழத்து எழுத்தாளர், நாடக கலைஞர், நடிகர், தயாரிப்பாளர்.

27. ந. பாலேஸ்வரி நினைவு நாள். ஈழத்து புதின எழுத்தாளர். (1924-2014)

# மறைந்த...

35ஆம் பக்கத் தொடர்ச்சி.....

பிடலை எதிர்த்தோர் சிறையிலடைக்கப்பட்டனர். விசாரணைகளின்றி சிறை வாழ்க்கை தொடர்ந்தது.

கவானாவிற்குச் சென்றவர்களுக்குத் தெரியும் இருண்ட வாழ்வையே கியுப மக்கள் வாழ்கின்றார்கள். இவர்களுக்கு புதிய தொழில்நுட்பங்கள் ஒரு அதிசயம். பேச்சு, எழுத்து சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது. இவரது குடும்பத்தினர் கியுப மக்களின் சாதாரண வாழ்வை வாழவில்லை. பிடல் தனது குடும்பத்தை கியுப மக்களிடமிருந்து பிரித்தே வைத்திருந்தார். இவருக்குப் பல மனைவிகள் உண்டு என்ற குற்றச்சாட்டும் உண்டு.

உலகின் மிகச் சிறந்த மருத்துவ சேவை கொண்ட நாடுகளில் கியுபாவும் ஒன்று. அதற்குச் சான்று 1950ல் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளின் இறப்பு 80.69 ஆகும். இன்று அது 4.63 ஆகும். மிகச் சிறந்த இலவசக் கல்வி முறையும் கியுபாவில் உண்டு.




பிடலின் மறுபக்கம் இருண்டுள்ளது. அவரது மகள் அலினா பெர்ணான்ட றிவலியுட்டா அமெரிக்காவிற்கு 1993இல் தப்பிச் சென்றார். அவர் தனது தந்தையை ஒரு கொடுங்கோலன் (tyrant) எனக் கூறினார். 1967இல் ஸ்ராலினின் (Joseph Stalin) மகள் சுவற்றிலேனாவும் அமெரிக்காவில் தஞ்சமடைந்த போதும் இதனையே கூறினார்.

## ஓம் பூரி (1950-2017)

2017இன் முதல் மறைந்த விருட்சம் ஓம் பூரி. பஞ்சாப் மாநிலத்தில் பிறந்த ஓம் பூரி டெல்லியில் உள்ள தேசிய நாடகக் கல்லூரியில் நாடகவியல் படித்தார். இவரது சக மாணவன் நசுரிதீன் சா. மிகச் சிறந்த சர்வதேச நடிகராக அறியப்பட்ட ஓம் பூரியின் தனிப்பட்ட வாழ்வு சிக்கல்கள் நிறைந்தது. இவர் 1991இல் சீமா கபூரை மணந்தார். நீண்ட காலமாக நண்பர்களாக இருந்த இவர்கள் திருமணத்தின் பின்னர் எட்டு மாதங்களின் பின்னர் பிரிந்து விட்டனர். இவரது இரண்டாவது மனைவி நந்திதா. நந்திதா ஓர் ஊடகவியலாளர். இவர்களுக்கு ஒரு மகனும் உண்டு. நந்திதா தனது கணவனைப் பற்றி எழுதிய நூல் Unlikely Hero: The Story Of Om Puri. இந்நூலில் நந்திதா குறிப்பிட்ட சில விடயங்கள் ஓம் பூரிக்கும் நந்திதாவிற்கும் பிரிவை ஏற்படுத்தியது. ஓம் பூரி இறக்கும் வரை இவர்கள் பிரிந்தே வாழ்ந்தனர்.

ஓம் பூரி என்றவுடன் பல படங்கள் நினைவிற்கு வரும். நடிப்பின் பல பரிமாணங்களை வெளிப்படுத்தியவர். இவர் ஓர் அழகரல்ல. தனது நடிப்பினால் அழகனாக பரிணமித்தார். யோர்ச் கான் இப்பாத்திரம் மறக்கக் கூடியதல்ல. East is East என்ற பிரித்தானிய ஆங்கிலப் படத்தில் பாகிஸ்தானிய பிரித்தானியராக வெகு இயல்பாக நடித்திருந்தார். 'Aastha' இப்படம் இவரது நடிப்பின் மற்றொரு பரிமாணம். சிற்றி ஒவ் யொய் என படங்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம். இரு தடவை இந்திய தேசிய சிறந்த நடிகர் விருதைப் பெற்றார். அர்த் சத்யா மிர்ச் மசாலா போன்றவை இவரது நடிப்பின் உச்சத்தை வெளிப்படுத்தும் படங்கள். இவர் நடித்த ஆங்கிலப் படங்கள் "My Son the Fanatic,""East Is East"and "The Parole Officer "City of Joy,""The Reluctant Fundamentalist," "The Hundred-Foot Journey.". இந்திய நடிப்பின் அடையாளம் இவர் எனக் கூறினால் மிகையாகாது. சிவாஜி கணேசன் போன்றோரை விட மிக இயல்பாக யதார்த்தமாக நடித்த நடிகர். இந்திய நடிகர்களின் திறமையை சர்வதேசத்திற்கு அழைத்துச் சென்றவர். இவர் நடிப்புக் கல்லூரி மாணவர்களுக்கெல்லாம் ஒரு திறந்த புத்தகம். இவரது நடிப்பைப் பற்றி விரிவாக தனியொரு கட்டுரையில் பார்ப்போம். இவரது இழப்பு இந்திய-சர்வதேச சினிமாவிற்கு ஒரு பேரிழப்பாகும்.


நிரு
பிராண்ட்
Niru BRAND®
அன்பான சமையலுக்கு அம்மா
அறுசுவையான சமையலுக்கு நிரு பிராண்ட்
அன்பும் அறுசுவையும் சேர்ந்தால்
ஆரோக்கியம் தானே!
Achcharu
Coconut Milk

MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

# JRS AUTO TECH

OPEN 7 DAYS A WEEK
9am-11pm



- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash

SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors

**TIRE SPECIALS**
NEW TIRES FROM $99
USED TIRES FROM $49.95

**FREE OIL CHANGE WITH RUST PROOFING**
$99 Car
$120 SUV

**BRAKE JOB**
STARTING FROM
$199

**WATER PUMP TIMING BELT & LABOR**
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol
REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95

**TRANSMISSION FLUSH**
*Starting From…*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

**ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS**
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection

## 2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)

CALL SUBAS DIRECT → 416-206-9489

Tel: 416-628-4399

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by panchaldesigns.com 647.294.2963



IP
IP GOLDHOUSE LTD.
Design your dreams with us
SPECIAL SALE ON
THIS WEEKEND
FRI,SAT, SUNDAY.
SPECIALIZING IN ANTIQUE AND STONE JEWELLERY
PLATINUM, ROSE GOLD WHITE GOLD
YELOW GOLD DIAMOND BANDS SPECIALITY BANDS
I P SILVERHOUSE
I P GOLDHOUSE
40 New Delhi Drive Unit 56
Markham ON. L3S 0B5
Tel: 905-554-5890
E-mail: ipsilverhouse@hotmail.com
















Free Real Estate Class - Call: 416.321.6969










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

